cepa
centre for poverty analysis



# யாருடைய வழி உரிமை?

## அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு

சாஞ்ஜனா குறுப்பு
வருணி கணேபொல

ஆகஸ்ட் 2005

Working Paper Series No. 10 - 2005

# யாருடைய வழி உரிமை?

**அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு**

**சாஞ்ஜனா குறுப்பு**
**வருணி கணேபொல**

செப்டெம்பர் 2005

Working Paper Series No. 10 - 2005

© Centre for Poverty Analysis

National Library of Sri Lanka-Cataloguing-In-Publication Data

குறுப்பு, சாஞ்ஜனா

யாருடைய உரிமை வழி: அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு / சன்ஜனா குருப்பு: சக ஆசிரியர் வருணி கனேபொல - கொழும்பு: வறுமை ஆய்வு மையம், 2005 - ப. 35: புகைப்படம்: ச.மீ.29.

ISBN: 955-1040-25-2 விலை: ரூ.

i. 305.906914 டிடிசி 22 ii. தலைப்பு

1. கனேபொல வருணி 2. இடம் பெயர்ந்தார்

3. சமூகப் பிரச்சினைகள்

ISBN: 955-1040-25-2
ISSN: 1391-9946

The CEPA Publication Series currently includes the following categories; Studies, Edited Volumes, Working Papers and Briefing Papers.

**வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA)** ஒரு சுதந்திரமான தொழில்சார் சேவை வழங்கும் அமைப்பாகும். அது இலங்கையில் வறுமை தொடர்பான பிரச்சினைகள் குறித்து நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. CEPA யின் சேவை பிரயோக ஆராய்ச்சி, ஆலோசனைச் சேவைகள், பயிற்சி மற்றும் பேச்சுவார்த்தை, பரிவர்த்தனை ஆகிய நான்கு விடயங்கள் குறித்து கவனம் செலுத்துகின்றது. வறுமையைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்கள், தொழில் வல்லுநர்கள் ஆகியோருக்கும் இது உதவுகின்றது.

இந்த ஆய்வு வறுமை மற்றும் முரண்பாடுகள் (PAC) சம்பந்தப்பட்ட ஒரு வேலைத்திட்டமாகும். சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் இதற்கு உதவுகின்றது. **சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம்,** அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும் பொறுப்பான ஒரு பிரிட்டிஷ் திணைக்களமாகும். இந்தத் திணைக்களம் அரசாங்கங்கள், சிவில் சமூகம், தனியார் துறை மற்றும் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து செயற்படுகின்றது. வறுமைக்கான காரணிகளைச் சமாளிப்பதற்கான நீண்டகாலத் திட்டங்களுக்கு அது உதவுகின்றது. இயற்கை அனர்த்தங்களின் போதும், மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின் போதும், ஏற்படும் அவசரத் தேவைகளுக்கும், சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் உதவுகின்றது.

**வருணி கனேபொல** உளவியல், சமூகவியல் அகதிகள் பற்றிய ஆய்வு ஆகிய விஷயங்களைக் கற்றுள்ளார். அவர் கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் உளவியல் பாடத்தைப் போதிக்கின்றார். நிர்ப்பந்த குடியகல்வு, யுத்தம் தொடர்பான அழுத்தங்கள், உளவியல் பணி ஆகியன அவரின் ஆய்வில் அடங்கியுள்ள விடயங்களாகும்.

**சாஞ்ஜனா குருப்பு** மனிதவியல் பற்றி கற்றுள்ளார். அவர் தற்சமயம் வறுமை ஆய்வு நிலையத்தின் வறுமைத்தாக்க கண்காணிப்புத் திட்டப் பிரிவில் பணியாற்றுகின்றார். இளைஞர்களும் அபிவிருத்தியும், திட்டக் கண்காணிப்பு, வறுமைத்தாக்க கண்காணிப்பு, சுகாதாரம் ஆகிய துறைகள் குறித்து அவரது ஆய்வின் போது கவனம் செலுத்தப்படுகின்றது.

இந்த ஆய்வு கலாநிதி வருணி கனேபொலவினதும், வறுமை ஆய்வு நிலையத்தினதும் ஒரு கூட்டு முயற்சியாகும். இதன் பூர்வாங்க பெறுபேறுகள் பற்றி அபிவிருத்தி மற்றும் மீள் குடியமர்வு பற்றிய மகாநாட்டின் போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இந்த மகாநாட்டை இந்தியாவின் ஹைத்ராபாத்தில் உள்ள ஒஸ்மானியா பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பாடு செய்திருந்தது. ஆபிரிக்க, ஆசிய நோக்குகளே இந்த மகாநாட்டின் தொனிப்பொருளாகும். இந்த ஆய்வு அறிக்கையின் சுருக்கம் மகாநாட்டு அறிக்கையில் அடங்கியிருக்கும். இந்த அறிக்கை ஏககாலத்தில் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றன.

## தலைப்பு எழுத்துச் சொல்

| | |
|---|---|
| ADB | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| AMDP | துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் |
| BOT | நிர்மாணித்து இயக்கி உரிமை மாற்றுதல் |
| CBO | சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனம் |
| CEA | மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| CKE | கொழும்பு கட்டுநாயக்க கடுகதி வீதி |
| CRP | இணக்க மதிப்பீட்டுக் குழு |
| CT | கூட்டு வரைவு |
| EOI | அக்கறையை வெளிப்படுத்துதல் |
| DS | பிரதேச செயலகம் |
| EIA | சுற்றாடல் தாக்க மதிப்பீடு |
| FAO | உணவு விவசாய ஸ்தாபனம் |
| FT | இறுதி வரைவு |
| GoSL | இலங்கை அரசாங்கம் |
| GRC | குறைபாடுகள் பரிகாரக் குழு |
| IDP | உள்ளூரில் இடம்பெயர்ந்த நபர் |
| IFI | சர்வதேச நிதி நிறுவனம் |
| I/NGO | சர்வதேச.்.அரச சார்பற்ற நிறுவனம் |
| IRMP | ஒருங்கிணைந்த மூலவள முகாமைத்துவத் திட்டம் |
| JBIC | சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி |
| LAA | காணி சுவீகரிப்புச் சட்டம் |
| LARC | காணி சுவீகரிப்பு மற்றும் மீள் குடியமர்வுக் குழு |
| LTTE | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| RDA | வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| NEA | தேசிய சுற்றாடல் சட்டம் |
| NIRP | தேசிய சுய விருப்பற்ற மீள்குடியமர்வுக் கொள்கை |
| SIA | சமூக தாக்க மதிப்பீடு |
| SIDA | சர்வதேச அபிவிருத்திக்கான சுவீடிஷ் முகவர் நிறுவனம் |
| SEIA | சுற்றாடல் தாக்கம் பற்றிய சுருக்க மதிப்பீடு |
| STDP | தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் |
| UNDP | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு |
| UNHCR | அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் |
| WSA | வில்பூர் ஸ்மித் அஸோஸியேட்ஸ் |

## நன்றியுரை

கீழ்க் குறிப்பிடப்படுபவர்களுக்கு எமது மனப்பூர்வ நன்றிகள் உரித்தாகும்,

- இதுவரை அதிகம் பயணம் செய்யாத பாதைகளில் சென்று பணியாற்றுவதற்கு முன்வந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள்
- விலைமதிப்பற்ற ஆலோசனைகள், கருத்துக்கள், விமர்சனங்கள் ஆகியவற்றைத் தெரிவித்த CEPA அமைப்பைச் சேர்ந்த எமது சகாக்கள்
- தமது நேரத்தை ஒதுக்கி ஆதரவு வழங்கிய வேலைத்திட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள்

யாவற்றையும் விட இத்திட்டங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நாம் நன்றி கூறிக்கொள்ள விரும்புகின்றோம். அவர்கள் தங்களது மிகவும் அந்தரங்கமான விடயங்களையும், அனுபவங்களையும் எம்முடன் பகிர்ந்து கொள்வதற்கு முன்வந்தனர். அவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து சரியான முறையில் கண்ணோட்டம் செலுத்துவதற்கு இந்த அறிக்கை உதவுமென நாம் நம்புகின்றோம்.

## பொருளடக்கம்


**நிறைவேற்றுச் சுருக்கம்** **1**

**அறிமுகம்** **2**

**ஆய்வின் நோக்கம் வழிமுறை தட்டுப்பாடுகள்** **3**

- ஆய்வின் நோக்கம் 3
- வழிமுறை 3
- ஆய்வுக்கான தட்டுப்பாடுகள் 4

**நிர்ப்பந்த இடம்பெயர்வுகளின் வரலாறு** **5**

- அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு - ஒரு தவிர்க்க முடியாத பிரச்சினைக் காரணி ஆய்வா? 5
- கடந்தகால அபிவிருத்திகளும் நிர்ப்பந்த இடம்பெயர்வுகளும் 5
- மகாவலி திட்டம் 6
- இதன் விளைவாக ஏற்பட்ட ஆபத்துகளும் அச்சுறுத்தல்களும் 7

**வீதி: கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி திட்டம் தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள இடம்பெயர்வுகள்** **8**

- அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு தொடர்பான நிலைமை 8
- கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி மற்றும் தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தி திட்டங்களின் பின்னணி 9
- கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி 11
- தென்பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் 14
- காணிச் சுவீகரிப்பும் நஷ்டஈடும் 14

**திட்டங்கள் தொடர்பான பொதுமக்களின் மறுமொழி** **14**

- தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் (STDP), கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதித் திட்டம் (CKE) 14
- தீவிர பங்குகொள்ளல் 15

**இடம்பெயர்வு** **17**

- இடம்பெயர்வால் ஏற்படும் தவிர்க்க முடியாத விளைவுகள் எவை? 17
- இடம்பெயர்வுடன் தொடர்புடைய உணர்ச்சி பூர்வமான தாக்கங்கள் 20
- CKE, STDP ஆகியவற்றின் தாக்கங்கள் 22

**அமுலாக்கத்தில் உள்ள வரையறைகள்** **25**

- திட்ட நடைமுறைகள் 25
- தகவல் வழங்கலும் அறிவு மட்டமும் 28

**இழப்பீடும் மீள் குடியமர்வும்** **29**

- இழப்பீடு 29
- மீள் குடியமர்வு 30

**எதிர்கால வழி** **32**

- எல்லா வீதிகளும் எங்கே செல்கின்றன? 32
- சிபார்சுகள் 33

**சுருக்கமும் முடிவும்** **35**

**உசாத்துணைகள்** **38**

## நிறைவேற்றுச் சுருக்கம்

அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகளும், மீள் குடியமர்வுகளும் இலங்கைக்கு புதியதொரு விடயமல்ல. குடியேற்ற காலம் தொடக்கம் அரசியல் காரணங்களினாலும், ஒரு குறிப்பிட்ட பிரதேசங்களில் இருந்து விவசாய உற்பத்தியை பன்முகப்படுத்துவதற்கான பாரிய அளவிலான திட்டங்கள் காரணமாகவும், மக்கள் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த ஆய்வில் அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக, ஏற்பட்டுள்ள இடம்பெயர்வுகளினால், நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி ஒரு மேலோட்டமான கண்ணோட்டத்தை இந்த அறிக்கை வழங்குகின்றது. முதலில், துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் பற்றி இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர், கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி, தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் ஆகியன குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த இரு திட்டங்கள் காரணமாகவும், ஏற்பட்டுள்ள இடம்பெயர்வுகள், மீள் குடியமர்வு தொடர்பான தேசியக் கொள்கை, ஸ்தாபக அமைப்பு முறைகள், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், திட்ட அமுலாக்கம், மக்களின் பங்களிப்பு, அவர்களின் பிரதிபலிப்பு ஆகியன குறித்து இந்த அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களினால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் பிரதிபலிப்புகளை இனங்காண்பதற்கான நல்ல தரமுள்ள அணுகுமுறையைக் கொண்டதாக இந்த ஆய்வு விளங்குகின்றது. இதற்காக மூன்று மட்டங்களில் பேட்டிகள் நடைபெற்றன. இரண்டு வகையான முக்கிய தகவல் வழங்குவோர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களின் கருத்துக்கள் அறியப்பட்டுள்ளன. வடிவமைக்கப்பட்ட மற்றும் ஓரளவு வடிவமைக்கப்பட்ட கேள்விக் கொத்துக்கள், குழு ரீதியான கலந்துரையாடல்கள் ஆகியனவற்றின் மூலம் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி பாதை, நான்கு பகுதிகளைக் கொண்ட இருவழிப் பாதையாகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கும், தலைநகருக்கும் இடையிலான போக்குவரத்தை இலகுவாக்குவது அதன் விரிவான நோக்கமாகும். கூடுதல் பாதுகாப்புடன் குறைந்த நேரத்தில் பயணத்தை மேற்கொள்வதற்கு இது உதவும். தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம், 6 தொடக்கம் 4 வரையான பகுதிகளைக் கொண்ட கடுகதி பாதையாகும். எதிர்காலத்தில் இதனை மேலும் விஸ்தரிப்பதற்கான சாத்தியங்களும் உள்ளன.

இடம்பெயர்வின் தாக்கங்கள் பல்வகைத் தன்மை கொண்டவையாக உள்ளன. இது வெறுமனே மக்களை வேறிடத்தில் குடியமர்த்தும் ஒரு நடவடிக்கை அல்ல. வறுமையால் கஷ்டப்படக்கூடிய ஆபத்தையும் இம்மக்கள் எதிர்நோக்குவார்கள். ஜீவனோபாயம் இல்லாமல் போதல் அல்லது சீர்குலைதல் போன்ற விடயங்களும் இனங்காணப்பட்டுள்ளன. தென்பகுதிப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தினால் பாதிக்கப்படும் அனைவரும் கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதித் திட்டத்தினால் பாதிக்கப்படும் சிலரும் காணிகள் இழக்கப்படுவதால், உணவைப் பெற்றுக்கொள்வதில் கஷ்டங்களை எதிர்நோக்க நேரிடும் என்று தெரிவித்துள்ளனர். சமூக மூலவளங்களுக்கான வாய்ப்புகள் இல்லாமல் போய்விடும் என்று பலர் குறிப்பிட்டுள்ளனர். இயற்கை மற்றும் மனிதனால் மேற்கொள்ளப்படும் தாக்கங்கள் காரணமாக, சமூகங்களும் தனிப்பட்ட குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன. அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக, சமூகங்கள் பிரிய வேண்டி ஏற்படுவது மற்றுமொரு தாக்கமாகும். கூட்டாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல், சமூக வேலைத்திட்டங்களில் ஈடுபடுதல், சமூகத் தொடர்புகள் போன்றவை பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கனரக இயந்திரங்கள் வெளிப்படுத்தும் சத்தம் அவை வெளியிடும் புகையினால் காற்று அசுத்தமடைதல், மண் அரிப்பு காரணமாக பயிர்கள் அழிதல் போன்ற சுற்றாடல் ரீதியான தாக்கங்களையும் அபிவிருத்தித் திட்டங்களால் பாதிக்கப்படும் மக்கள் இனங்கண்டுள்ளனர்.

தேசிய மற்றும் கொள்கை மட்டத்தில் சமூக தாக்க மதிப்பீட்டிற்கான செயற்பாட்டு அமைப்புகள் இல்லாமை, விரிவான ஆலோசனை அடிப்படையிலான ஆய்வு இல்லாமை, இடம்பெயர்வு மற்றும் மீள்குடியமாவு ஆகியவற்றில் நன்கொடை அமைப்புகள் மட்டுப்படுத்தப்பட்ட அளிவிலேயே சம்பந்தப்படுதலும். பங்குபற்றுதலும் ஆகியன திட்டத்தை அமுல் செய்வதில் உள்ள வரையறைகளில் அடங்கியுள்ளன. பல அரச நிறுவனங்கள் இதில் சம்பந்தப்படுவதால், பாதிக்கப்பட்ட மக்கள் நஷ்டஈடு பெறுவதற்கு பல நிர்வாக கெடுபிடி நடைமுறைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மதிப்பீடு மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக முறைகேடுகள் நிலவுவதாக, அடிக்கடி தெரிவிக்கப்பட்டுள்ளது.

நஷ்டஈட்டு அளவு கணக்கீட்டில் தெளிவு இல்லாமை, வயல் நிலங்கள், சாகுபடி நிலம், வீட்டுத்தோட்டங்கள் போன்ற வருமானம் தரும் சொத்துக்கள் தொடர்பான நஷ்டஈட்டில் உள்ள குறைபாடுகள் பற்றி பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் கொள்கை மற்றும் ஸ்தாபக ஏற்பாடுகளை முன்னேற்றுதல், சேவைகளை மேம்படுத்துதல், விஸ்தரித்தல் அல்லது சிறந்த முறையில் அமுல் செய்தல் ஆகியவற்றின் அவசியம் பற்றி சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன.

## அறிமுகம்

அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகளும் மீள் குடியமர்வுகளும் இலங்கைக்கு புதியதொரு விடயமல்ல. குடியேற்ற காலம் தொடக்கம், அரசியல் காரணங்களினாலும், ஒரு குறிப்பிட்ட பிரதேசங்களில் இருந்து விவசாய உற்பத்தியை பன்முகப்படுத்துவதற்கான பாரிய அளவிலான திட்டங்கள் காரணமாகவும், மக்கள் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், தற்போதைய சூழ்நிலையில் இடம்பெயர்வும், மீள் குடியமர்வும் பிரிவினைவாத போராட்ட வரம்பினுள் பெரும்பாலும் ஏற்புடையதாகக் கருதப்படுகின்றது. தொடர்ச்சியான இந்தப் போராட்டம் காரணமாக, கணிசமான அளவு மக்கள் பெருமளவில் இடம்பெயரவும், மீள்குடியமரவும் நேரிடுகின்றது. எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாகவும், உயர் அரசியல் மற்றும் சர்வதேச அக்கறை காரணமாகவும், யுத்தத்தினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படுவதால், அபிவிருத்தி காரணமாக இடம்பெயர்ந்தவர்கள், இடம்பெயர்வு சம்பந்தப்பட்ட கொள்கைத்திட்ட வகுப்பாளர்களாலும், தீர்மானம் எடுப்பவர்களாலும், அதனை அமுல் செய்பவர்களாலும் புறக்கணிக்கப்படுகின்றனர். யுத்தம் காரணமாக,[1] இடம்பெயர்ந்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கததுடனேயே, நிவாரண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, அபிவிருத்தியினால் தூண்டப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கான கொள்கையாக்க மற்றும் நலன்புரி சம்பந்தப்பட்ட கட்டமைப்புகள் பலம்வாய்ந்தவையாக அமைந்திருக்கவில்லை.

இந்த ஆய்வில் அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக, ஏற்பட்டுள்ள இடம்பெயர்வுகளினால், நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி ஒரு மேலோட்டமான கண்ணோட்டத்தை இந்த அறிக்கை வழங்குகின்றது. முதலில், துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் பற்றி இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர், கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி, தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் ஆகியன குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த இரு திட்டங்கள் காரணமாகவும், ஏற்பட்டுள்ள இடம்பெயர்வுகள், மீள் குடியமர்வு தொடர்பான தேசியக் கொள்கை, ஸ்தாபக அமைப்பு முறைகள், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், திட்ட அமுலாக்கம், மக்களின் பங்களிப்பு, அவர்களின் பிரதிபலிப்பு ஆகியன குறித்து இந்த அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அனேகமான இந்தப் பாரிய அளவிலான திட்டங்களுக்கு சர்வதேச நிதி நிறுவனம் நிதியுதவியை வழங்குகின்றது. அரச நிறுவனங்கள் இவற்றை அமுல் செய்யும் பங்காளிகளாக செயற்படுகின்றன. ஒப்பந்தங்களை வழங்குதல், இடம்பெயர்ந்தவர்கள் யார் என்பதை தீர்மானிக்கும் அடிமட்டக் கொள்கையாக்கம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தகவல்களை வழங்குதல் ஆகிய விடயங்கள் பெருமளவில் அரசியல் தாக்கங்களுக்கு உட்பட்டவையாக விளங்குகின்றன. இந்த இரு திட்டங்களின் அமுலாக்கம் சிதறுண்ட நிலையில் காணப்படுகின்றது. அரசாங்கங்களில் மாற்றங்கள் ஏற்படுதல், பொதுமக்கள் மற்றும் சமூக ரீதியான அமைப்புகளின் எதிர்ப்புகள், சுற்றாடல் ஆர்வலர்களின் எதிர்ப்புகள் ஆகியன காரணமாக இந்தத் திட்டங்களின் அமுலாக்கம் பாதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு செயற்பாட்டாளர்களையும், அவர்களின் பணிகளையும் அவற்றினால் ஏற்படும் தாக்கங்களையும், இனங்காண வேண்டிய அவசியம் இதனால் உருவாகியுள்ளது.

[1] அரசாங்கத்திற்கும் தனிநாடு கோரும் பிரிவினை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான ஆயுதப் போராட்டம் 1980 ஆம் தசாப்தத்தின் முற்பகுதியில் ஆரம்பமானது.

## ஆய்வின் நோக்கம் வழிமுறை தட்டுப்பாடுகள்

**ஆய்வின் நோக்கம்**
கடந்தகால குறுக்கீடுகளை அவதானிப்பதன் மூலம், அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு அமைப்பு முறை பற்றி மதிப்பிடுவதே இந்த ஆய்வின் குறிக்கோளாகும். கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதித்திட்டம், தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் ஆகியன குறித்த வேலைத்திட்டம் காரணமாக எழுந்துள்ள இடம்பெயர்வு பிரச்சினைகள் தொடர்பான கண்ணோட்டத்தை குறுகியதாக்கியுள்ளது. அபிவிருத்தி காரணமாக ஏற்படும் இடம்பெயர்வு தொடர்பான பிரச்சினைக்கு போதிய கவனம் செலுத்தப்படவில்லை. இது திட்டத்தின் ஒரு அங்கமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதே அன்றி, விசேஷ அறிவு, நிபுணத்துவம் மற்றும் நிதி தேவைப்படும் ஒரு விடயமாகக்கூட இது கருதப்படவில்லை. தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம், கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதித் திட்டம் ஆகியன சம்பந்தப்பட்ட மட்டில் அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு தொடர்பான முக்கிய பிரச்சினைகள் பற்றி கவனம் செலுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

மக்கள் வேறிடங்களில் குடியமர்த்தப்பட்டதால், ஏற்பட்டுள்ள நேரடி தாக்கம் பற்றி கவனம் செலுத்துவதுடன், காணிச் சுவீகரிப்பு, இடம்பெயர்வு தொடர்பான நடவடிக்கைகள், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு, அவர்களின் பிரதிபலிப்பு, அது தொடர்பாக அவர்களின் செயற்பாடு, பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்பு, சமூக மற்றும் குடும்ப ரீதியில் ஏற்பட்ட தாக்கங்கள் ஆகியன பற்றியும் இந்த ஆய்வு அக்கறை காண்பித்துள்ளது. சம்பந்தப்பட்ட திட்டங்களினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் விழிப்புணர்வு மட்டத்தை இந்த ஆய்வு இனங்காணும் அதேவேளையில், பொது மக்கள் விழிப்புணர்வுக்கான அமைப்பு முறைகள், அவற்றின் அமுலாக்கங்கள் பற்றியும் கவனம் செலுத்தியுள்ளது. அத்துடன், மீள் குடியமர்வுத் திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை ஒரு ஸ்தாபக மற்றும் திட்ட கண்ணோட்டத்திலும் இந்த ஆய்வு நோக்குகின்றது. இந்தத் திட்டங்கள் காரணமாக, சம்பந்தப்பட்ட குடும்பங்களிலும், சமூகங்களிலும் ஏற்படும் நேரடி மற்றும் நேரடியற்ற தாக்கங்கள் பற்றியும் இந்த ஆய்வு கவனம் செலுத்தியுள்ளது.

இந்த அறிக்கை முதலில் அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு சம்பந்தப்பட்ட இலங்கையின் வரலாறு குறித்து கவனம் செலுத்தியுள்ளது. குடியேற்ற காலத்தில் இருந்த சூழ்நிலை பற்றி இது சுருக்கமாக விளக்கிக் கூறியுள்ளது. கொழும்பு -கட்டுநாயக்க கடுகதி வீதித் திட்டம், தென்பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் ஆகியன சம்பந்தப்பட்ட பிரிவுகள் இடம்பெயர்வு தொடர்பான வரம்பு முறையொன்றை அறிந்து கொள்வதற்கு உதவுவதுடன், இந்த இரு திட்டங்கள் தொடர்பான மேலோட்டமான கண்ணோட்டம் ஒன்றையும் வழங்குகின்றன. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிபலிப்பு பற்றியும் இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர், இடம்பெயர்வு குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நான்காவது பிரிவில், இந்த இரு திட்டங்களின் தாக்கங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. மீள் குடியமர்வு மற்றும் நஷ்டஈடு போன்றன குறித்தும் சுருக்கமான முறையில் இது ஆராய்ந்துள்ளது. இது தொடர்பான சிபார்சுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**வழிமுறை**
இந்த ஆய்வு தரம் சார்ந்த அணுகுமுறை கொண்டதோடு, திட்டங்கள் காரணமாக, நேரடியாகவும், நேரடியற்ற முறையிலும் பாதிக்கப்பட்ட மக்களை[2] இனங்காண்பதற்கான மாதிரி நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூன்று மட்டங்களில் பேட்டிகள் காணப்பட்டுள்ளன.

- முக்கிய தகவல் வழங்குவோர் பிரிவு 1
- முக்கிய வழங்குவோர் தகவல் பிரிவு 2
- திட்டங்களால் பாதிக்கப்பட்ட மக்கள்

பயன்படுத்தப்பட்ட சாதனங்கள்

- இலக்கிய கண்ணோட்டம் (முன்னைய பிரசுரங்களிலிருந்து)
- கட்டமைப்புடன் கூடிய மற்றும் ஓரளவு கட்டமைப்புடன் கூடிய கேள்விக் கொத்துக்கள்
- கண்ணோட்டக் குழு கலந்துரையாடல்கள்

[2] சகல மட்டங்களிலும், கருத்து வெளியிட்டவர்களின் விபரங்களை அந்தரங்கமாக வைத்திருக்கும் முகமாக பெயர்கள், குறித்த இடங்கள், வேறு அடையாளங்கள் ஆகியன வெளியிடப்படவில்லை.

முக்கிய தகவல் வழங்குபவர்களுடனான பேட்டிகள் இரண்டு மட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன. கொழும்பை தளமாகக் கொண்ட அலுவலகங்களிலும், வெளிக்கள அலுவலகங்களிலும் இவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதல்மட்ட முக்கிய தகவல் பேட்டிகள் திட்டப் பிரிவையும், பிரதேச செயலகங்களையும்[3] சேர்ந்த சிரேஷ்ட மற்றும் நடுத்தர உத்தியோகத்தர்களுடன் நடத்தப்பட்டுள்ளன. அரசாங்க வேலைத்திட்ட மீள் குடியமர்வு அமைப்பு முறை பற்றி விரிவாக அறிந்து கொள்வதும், காணிச் சுவீகரிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட வழிமுறையை இனங்காண்பதும், திட்டத்தினால் ஏற்படும் தாக்கங்களை அறிந்து கொள்வதுமே இந்த பேட்டிகளின் நோக்கங்களாகும்.

இரண்டாவது மட்ட முக்கிய தகவல் பேட்டிகள் மீள் குடியமர்வு உத்தியோகத்தர்களுடன் சமூகத் தலைவர்களுடனும் நடத்தப்பட்டுள்ளன. காணிச் சுவீகரிப்பு, மீள் குடியமர்வு, நஷ்டஈட்டு நடைமுறைகள் தொடர்பான நிலைமைகளை மதிப்பிடுவதே இந்தப் பேட்டிகளின் நோக்கமாகும். பாதிக்கப்பட்டவர்களின் புரிந்துணர்வு, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் இடம்பெயர்வு மற்றும் மீள் குடியமர்வு போன்றவற்றை ஆராயும் நோக்கத்துடனேயே அவர்களுடன் பேட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை வெளிக்களங்களில் பேட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. இரு திட்டங்களாலும் பாதிக்கப்பட்ட 20 பேரும் 10 முக்கிய தகவல் வழங்குபவர்களும் பேட்டி காணப்பட்டனர். கடுமையான மாதிரி முறைகள் பின்பற்றப்படவில்லை. ஆயினும், நேரடியாகவும், நேரடியற்ற விதத்திலும் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்தே இந்த மாதிரிகள் பெறப்பட்டன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வீடுகள், காணிகள் போன்றவற்றை இழந்தவர்கள் (இவர்கள் பொதுவாக நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களாக வகைப்படுத்தப்படுகின்றனர்) ஜீவனோபாயத்தை இழந்தவர்கள் (நேரடியற்ற விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள்) ஆகியோரிடம் இருந்து தகவல்கள் பெறப்பட்டன.

வெளிக்கள ஆய்வு ஆரம்பத்தில் ஒவ்வொரு நெடுஞ்சாலைத் திட்டத்தினதும் ஒரு வேலைத்தலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. ஆயினும், சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் பரந்த தன்மை பற்றி ஆய்வாளர்கள் புரிந்து கொண்டதற்கு அமைய இந்த ஆய்வு விஸ்தரிக்கப்பட்டது. தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி திட்டம் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சித் தளங்களாக பண்டாரகம, குருந்துகஹஹத்தக்ம ஆகிய அமைந்திருந்த அதேவேளையில், கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி நெடுஞ்சாலைத் திட்டத்தின் ஆராய்ச்சித் தளமாக கட்டுநாயக்க அமைந்தது. வெளிக்கள ஆய்வு சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனம், பொதுநலனில் அக்கறை கொண்ட குழுக்கள் ஆகியவற்றுடனான கலந்துரையாடல்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. பொதுவாக பேட்டி காணப்பட்டவர்கள் மத்தியில் இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. இவ்வாறான ஆய்வுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு உதவும் என்று அனேகமானோர் நம்புகின்றனர்.

### ஆய்வுக்கான தட்டுப்பாடுகள்

இந்தத் திட்டங்கள் தொடர்பான சர்ச்சைகளுக்கு ஊடகங்கள் பெருமளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தன. திட்டங்கள் மாற்றப்படுதல், ஒப்பந்த நடைமுறைகள் மீறப்படுதல் ஆகியன இந்தச் சர்ச்சைகளில் அடங்கியுள்ளன. சர்ச்சைக்குகிய/உணர்ச்சிபூர்வ தகவல்களை வழங்க வேண்டாமென இந்த ஆய்வுக்குழு பேட்டி கண்ட திட்ட உத்தியோகத்தர்களுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டு இருந்தன. அதாவது, அவர்கள் ஆய்வுக் குழுவுக்கு வழங்கும் தகவல்கள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருந்தனர். சில உத்தியோகத்தர்கள் பேட்டி கொடுப்பதற்கு முன்வரவில்லை. மொத்த புள்ளி விபரங்கள், பின்னணி ஆய்வுகள் கிடைக்காமை மற்றுமொரு கணிசமான இடர்ப்பாடாகும். குறிப்பாக, கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதித் திட்டம் தொடர்பாக இந்த நிலை காணப்பட்டது.

சில திட்ட ஆவணங்களில் உள்ள தகவல்களைப் பெறுவதில் கட்டுப்பாடுகள் இருந்தன. ஆய்வுக் குழுவினர் பலதடவைகள் முயற்சி செய்த போதிலும் சில முக்கிய கொள்கையாக்க உத்தியோகத்தர்களையும் அமுலாக்க உத்தியோகத்தர்களையும் சந்திக்க முடியவில்லை. தியகம, குருந்துகஹஹத்கம ஆகிய இடங்களில் உள்ள குடியேற்ற பகுதிகளுக்கான இரண்டாவது சுற்று வெளிக்கள விஜயங்கள் 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாத முற்பகுதியில் இடம்பெற இருந்தன. 2004

[3] பிரதேச செயலகம் - பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகத்தின் முதலாவது மட்டம்

ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதை அடுத்து இந்த விஜயத்தை இரத்துச் செய்வதெனவும், 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் பெறப்பட்ட புள்ளிவிபரங்களைக் கொண்டு பணிகளைத் தொடர்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் காரணமாக, மீள் குடியமர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் மட்டுப்படுத்தப்பட்டன.

## நிர்ப்பந்த இடம்பெயர்வுகளின் வரலாறு

### அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு - ஒரு தவிர்க்க முடியாத பிரச்சினைக் காரணி ஆய்வா?

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்து இருந்தது. உலகளாவிய ரீதியில் சுமார் 200 மில்லியன் மக்கள் இடம்பெயர வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளானார்கள். (Cernea 2000) அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகளின் அடிக்கடி நிகழும் தன்மை, அளவு, அவற்றின் மோசமான விளைவுகள் ஆகியன காரணமாக உலகளாவிய ரீதியில் அக்கறை ஏற்பட்டுள்ளது. நீர்ப்பாசனம், போக்குவரத்து மற்றும் வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற நகர அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றுக்கான உட்கட்டமைப்புகளை நிறுவுவதற்கான தேவையின் விளைவாகவே நிர்ப்பந்த இடம்பெயர்வுகள் நிகழ்கின்றன. இந்த வேலைத்திட்டங்கள் அவசியமானவை என்பது குறித்து எதுவித சர்ச்சையும் இல்லை என்பதையும் இது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் வேலைவாய்ப்பையும் சிறந்த சேவைகளையும் வழங்கும் என்பதையும் அனேகமானோர் ஏற்றுக் கொள்வர். (ibid)

இதேவேளையில் இத்தகைய அபிவிருத்தித் திட்டங்களால் ஏற்படும் நிர்ப்பந்த இடம்பெயர்வுகள் காரணமாக, சில சமூகங்கள் மீது பெரும் பிரச்சினைகள் சுமத்தப்படுகின்றன. அவர்களின் உரிமைகளுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்றன. சிலர் மோசமான விளைவுகளையும எதிர்கொள்கின்றனர். இது சமூக நீதி, சமத்துவம் ஆகியன தொடர்பாக பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட அனேகமான சமூகங்கள், பொருளாதார ரீதியில் வறியவர்களாகவும், சமூக ரீதியில் ஒதுக்கப்பட்டவர்களாகவும், அரசியல் ரீதியில் பலமற்றவர்களாகவும் இருப்பதால், நிலைமை மேலும் மோசமடைகின்றது. பெருந் தொகையானவர்களுக்கு பெரும் நன்மை வழங்குதல் என்ற கொள்கை, நிர்ப்பந்த இடம்பெயர்வுகளை நியாயப்படுத்துவதற்கு காரணமாக கூறப்படுகிறது. *இந்தக் கொள்கை அடிக்கடி துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. தவிர்க்கப்படக்கூடிய தீமைகளைப் பொறுத்துக் கொள்வதை நியாயப்படுத்துவதற்கு இது பயன்படுத்தப்படுகின்றது. இதன் விளைவாக, அபிவிருத்தியின் பாதிப்புகளும் நன்மைகளும் நியாயமற்ற வகையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. சில மக்கள் அபிவிருத்தியின் நன்மைகளை அனுபவிக்கும் அதேவேளையில், ஏனையோர் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.* (Cernea 2000:12) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணிகள் தேவைப்படுகின்றன. இது மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றது. எனவே, சில சந்தர்ப்பங்களில் சமூகங்களை வேறு இடங்களில் குடியமர்த்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது. ஆனால், அபிவிருத்தியின் நன்மைகளையும், தீமைகளையும் சமமற்ற முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதும் தவிர்க்க முடியாதது என்றும், நியாயமானது என்றும் கொள்ள முடியுமா? இது அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு பெரிதும் முரணானதாக உள்ளது. அபிவிருத்தித் திட்டங்களின் நன்மைகளைப் பெறாதவர்கள் மற்றவர்களுக்காக தியாகம் செய்ய வேண்டுமா? இந்தக் கேள்வி இந்த ஆய்வின் போது தொடர்ச்சியாக எழுந்துள்ளது. இதனைப் புரிந்து கொள்வதற்கு இந்த ஆய்வு முயற்சி செய்துள்ளது.

### கடந்தகால அபிவிருத்திகளும் நிர்ப்பந்த இடம்பெயர்வுகளும்

இந்தப் பிரிவில் அபிவிருத்தியும், நிர்ப்பந்த இடம்பெயர்வும் ஒரு வரலாற்று நோக்கில் அணுகப்பட்டுள்ளது. இலங்கை நான்கு நூற்றாண்டுகள் வெளிநாடுகளால் ஆளப்பட்ட ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளது. போர்த்துக்கேயர்களும் (1505 - 1656) ஒல்லாந்தர்களும் (1656 - 1796) கறுவாத்தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை வரவழைத்தனர். இந்த இந்திய குடியேற்றக்காரர்கள் பெரும்பாலும் மத்திய மலைப் பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டனர். பிரிட்டிஷார் (1796 - 1948) முடிக்குரிய காணி ஊடுருவல் சட்டம் (1840), ஆலய காணிகள் சட்டம் (1856), வெற்றுக் காணிகள் சட்டம் (1897) ஆகியவற்றைப் பயன்படுத்தி மலைநாட்டில் கிரமமான முறையில் மக்களை அவர்களது காணிகளில் இருந்து வெளியேற்றினார்கள்.

19 ஆம் நூற்றாண்டில் கோப்பி, தேயிலை, றப்பர் சார்ந்த தொழில்கள் பெருமளவு வளர்ச்சி கண்டதை அடுத்து, முதலீட்டாளர்கள் தனியாரிடம் இருந்து காணிகளைக் கொள்வனவு செய்வதில் அக்கறை காண்பித்தார்கள். (வெரல்லேகம 2004) தனியார் காணி விற்பனைத் தொழில் பெரிதும் அதிகரித்தது. ஆயினும், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த காணி விற்பனைகள் குறித்து கடும் கோபம் கொண்டது. விற்கப்படும் இந்தக் காணிகள் முடிக்குரிய சொத்துக்களாகையால், இந்தக் காணி விற்பனைகள் சட்டவிரோதமானவை என்று பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிவித்தது. தனியார் காணிகள் விற்பனை செய்யப்படுவதை கட்டுப்படுத்த வேண்டிய தேவையுடன் கட்டுப்பாடற்ற முறையில் சேனைப்பயிர் மேற்கொள்ளப்படுவதை தடுக்க வேண்டிய அவசியமும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. காடுகளுக்கு தீ வைத்து அவற்றை துப்பரவு செய்து மேற்கொள்ளப்படும் சேனைப் பயிர்ச்செய்கை ஒரு தீமை பயக்கும் நடவடிக்கையாகக் கருதப்பட்டது. தனியார் காணிகள் விற்கப்படுவதையும் சேனைப் பயிர்ச்செய்கையையும் தடுக்கும் முகமாகவே வெற்றுக் காணிகள் சட்டம் கொண்டுவரப்பட்டது. இலங்கையின் தோட்ட சமூகங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ் நாட்டின் 80 சதவீதமான காணி பிரிட்டிஷ் முடிக்குரிய காணிகளாக்கப்பட்டன. இது விவசாயத்திற்கான ஒரு தோட்ட முறைக்கு அடித்தளம் அமைத்தது. அத்துடன் இந்தியாவில் இருந்து பெருமளவு தொழிலாளர்களை கொண்டுவருவதற்கும் இதுவொரு காரணியாக விளங்கியது.

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. 1930 ஆம் தசாப்த காலம் தொட்டு நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் காணி குடியேற்றங்கள் மூலமான விவசாய அபிவிருத்தி மாறிமாறி பதவிக்கு வந்த அரசாங்கங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. (பெரேரா 1992) அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உணவு உற்பத்தியை பெருக்குவதும், நாட்டின் மேற்குப் பிராந்தியத்தில் சனநெருக்கடியைக் குறைப்பதுமே இந்த முயற்சிகளின் பிரதான நோக்கமாகும். (ibid) இந்தக் குறிக்கோள்களுக்கு சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இன ரீதியான வியாக்கியானங்களைத் தெரிவித்தனர். குடியேற்ற ஆட்சிக்கு பிற்பட்ட சீராக்கங்கள் தொடர்பான கஷ்டங்கள் அபிவிருத்தித் திட்டங்களால் மோசமடைந்தன. கிழக்கு மாகாணத்தில் இருந்த பெருமளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் காரணமாக, அங்கு சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தப் பிரதேசங்களில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தனர். தமிழ் சிறுபான்மையினரை ஒதுக்கும் பொருட்டு வேண்டுமென்றே கொண்டுவரப்பட்ட ஒரு மூலோபாயமாக இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை தமிழ் மக்கள் கருதியதன் காரணமாக, இன ரீதியான பதற்ற நிலை தோன்றியது. ஆனால், இந்தத் திட்டங்கள் காரணமாக சிங்கள மக்களும் இடம்பெயர நேரிட்டது. (Sorenson 1997)

1970 ஆம் தசாப்தத்தின் முற்பகுதியில் மகாவலி அபிவிருத்தித் திட்டப் பிரதேசத்தை அடிப்டையாகக் கொண்ட வரண்டவலய குடியேற்றக் கொள்கை ஒன்றை அரசாங்கம் பின்பற்றியது. இது மகாவலி ஆற்றுத் திசைதிருப்பு திட்டம் எனவும் அழைக்கப்பட்டது. நாட்டின் மிகப்பெரிய நதியான மகாவலி ஆற்றுக்கு குறுக்கே பெருமளவிலான அணைக்கட்டுகளை நிர்மாணிப்பதும் இந்தத் திட்டத்தில் அடங்கி இருந்தது. ஆற்று அணைக்கட்டுத் திட்டம் காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் பற்றி கீழ்வரும் பிரிவுகளில் ஆராயப்பட்டுள்ளது.

**மகாவலி திட்டம்**

மகாவலி அபிவிருத்தித் திட்டம் இலங்கையில் குடியேற்ற ஆட்சிக்கு பிற்பட்ட காலத்தில் அமுல் செய்யப்பட்ட மிகவும் பாரிய பௌதிக மற்றும் மனித சக்திவள அபிவிருத்தித் திட்டமாகும். 1950 ஆம் தசாப்தத்திலும் 1960 ஆம் தசாப்தத்திலும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு (UNDP) உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் (FAO) ஆகியவற்றின் உதவியுடன் இதற்கான பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டது. மகாவலி ஆற்றுப்படுக்கை இலங்கையின் வரல் வலயத்தில் நீர்மின் உற்பத்திக்கும் விவசாயத்திற்குமான பெருமளவு வாய்ப்புக்களை கொண்டுள்ளது. இந்தத் திட்டம் 1970 ஆண்டு தொடக்கம் 30 ஆண்டு காலத்தில் அமுல் செய்யப்பட இருந்தது, மகாவலி அபிவிருத்தித் திட்டம் காரணமாக புதிய குடியேற்றங்களும் நீர் மின் உற்பத்தி நிலையங்களும் தோன்றியதுடன், வேலைவாய்ப்புக்களும் உருவாகின. வெள்ளக்கட்டுப்பாடு, விவசாய அபிவிருத்தி, கால்நடைவள அபிவிருத்தி, விவசாய உற்பத்தி சார்ந்த கைத்தொழில்கள் ஆகியன மகாவலி அபிவிருத்தித் திட்டம் காரணமாக ஏற்பட்ட ஏனைய முக்கிய நன்மைகளாகும்.

1977 ஆம் ஆண்டு துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் உருவாக்கப்பட்டது. (AMDP) 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க மகாவலி அதிகார சபை சட்டத்திற்கு அமைய இலங்கை மகாவலி

அதிகார சபை உருவாக்கப்பட்டது. ஐந்து வருடங்களுக்குள் பிரதான அணைக்கட்டுகளான விக்டோரியா, கொத்மலை, ரந்தெனிகலை, ரன்தம்பே ஆகியவற்றையும் நான்கு முக்கிய ஆற்றுப் படுக்கைத் திசைதிருப்புத் திட்டங்களையும் பூர்த்தி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். (வெரல்லகம 2004) துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் 1,28,000 ஹெக்டார் காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கவும், நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் 470 மெகாவொட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் உத்தேசிக்கப்பட்டது. (ibid)

**இதன் விளைவாக ஏற்பட்ட ஆபத்துகளும் அச்சுறுத்தல்களும்**

இந்த அபிவிருத்தி திட்டங்களால் ஏற்படும் தீமைகளை இடம்பெயர்ந்த மக்கள் அனுபவிக்க நேர்ந்தது. அத்துடன் சுற்றாடல் ரீதியிலும் பாதிப்பு ஏற்பட்டது. மகாவலி நீர்த்தேக்கங்கள் காரணமாக மத்திய மலைநாட்டிலும், வடமத்திய மாகாணத்திலும் (60 வீதம்) கிழக்கு மாகாணத்திலும் (சுமார் 40 வீதம்) பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. 2000 ஆண்டுகளுக்கும் மேலாக பொருளாதார ரீதியில் பெரிதும் நன்மையளித்து வந்த புராதன கிராமங்களும் இவற்றில் அடங்கியுள்ளன. பழச்செய்கை, கொக்கோ மற்றும் பல்வேறு வகை பயிர்கள் பயிரிடப்பட்டிருந்த செழிப்பான காணிகள் இந்தத் திட்டத்தினால் அழிந்துள்ளன. இந்தத் திட்டம் காரணமாக அப்பகுதியில் உயிரியல் வளங்களுக்கும் உயிரியல் பல்வகைத் தன்மைக்கும் ஏற்பட்ட இழப்புகள் மற்றும் பாதிப்புகள் பற்றி அறிந்து கொள்வதற்கு விரிவான ஆய்வு எதுவும் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் காரணமாக பல வழிகளில் சுற்றாடலுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது. சரிவு நிலங்களில் பொருத்தமான மண் பாதுகாப்பு நடவடிக்கைகளும் காடுகளை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படாமல் பல்வேறு விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறிய கிராமிய நீர்த்தேக்கங்களில் சேறு நிரம்பியுள்ளது. உயர் சரிவுகளில் சேனைப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதன் காரணமாகவும் விவசாயத்திற்கென காடுகள் துப்பரவாக்கப்பட்டதன் விளைவாகவும் மத்திய மேட்டு நிலப்பிரதேசங்களில் குடியேற்றங்கள் நிறவப்பட்டதன் காரணமாகவும் சரிவு நிலங்களில் உள்ள மண் மழை நீரினால் அடித்துச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, பெரும் மண் அரிப்பு உருவாகியுள்ளது. இவ்வாறு அடித்துச் செல்லப்படும் மண் இயற்கை நீர்நிலைகளில் கலந்து விடுகின்றது. புதிய வீதிகள் நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாகவும் திட்ட வேலைகளுக்கென இயந்திர உபகரணங்கள் எடுத்துச் செல்லப்பட்டதன் காரணமாகவும் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வீதிகள் இயற்கை காடுகளுக்கு ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில் நல்ல செழிப்புள்ள நிலங்கள் ஊடாகவும் வீதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நிதியுதவி அல்லது குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்கப்படுகின்றன. குடியமர்த்தப்பட்ட விவசாயிகளின் முதலாவது பரம்பரை விவசாயத்தில் தன்னிறைவு கொண்டதாக விளங்கும் அதேவேளையில் இரண்டாவது சந்ததி ஏற்றுமதி விவசாயிகளாக விளங்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் (GoSL) விரும்புகின்றது (வெரல்லகம 2004). இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆயிரமாகும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடாக பணம் வழங்கப்பட்டதுடன், அதே பகுதியில் சிறு துண்டு காணியும் வழங்கப்பட்டது. புதிதாக நீர்ப்பாசனம் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்களில் 1.2 ஹெக்டேயர் காணி இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காணியில் ஒரு ஹெக்டேயரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. 0.2 ஹெக்டேயரில் வீட்டுத் தோட்டச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசாங்கம் காணியையும் நஷ்டஈட்டுத் தொகையையும் வழங்கியதில் ஒழுங்கீனங்கள் நிலவியதாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நெற் செய்கை மூலம் வாழ்க்கை நடத்தி வந்த பலர் மகாவலி திட்டப் பகுதிகளில் குடிபெயர விரும்பினார்கள். அபிவிருத்தி குறைந்த சரிவரத் திட்டமிடப்படாத பிரதேசங்களில் குடியமரும் ஆபத்துக்களை இவர்கள் எதிர்நோக்கினார்கள். சுகாதாரம் மற்றும் ஏனைய சமூகநலன்கள் தொடர்பாகவும் இவர்கள் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கினார்கள். சில பகுதிகளில் மக்கள் மலேரியாவினால் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். குடிநீர், வீடுகள், வீதிகள், வைத்தியசாலைகள் போன்ற வசதிகள் குறைவாகவே உள்ளன. ஆரம்பத்தில் மகாவலி நகரங்களில் பாடசாலைகள், தபால் அலுவலகங்கள், வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சேவை நிலையங்கள் இருக்கவில்லை. பின்னர் படிப்படியாக இந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால், விவசாயிகளை குடியமர்த்துவதற்குமுன்னர் சரியான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

குடியமர்த்தப்பட்ட சமூகங்கள் புதிய வாழ்க்கை முறைக்கும் புதிய சுற்றாடலுக்கும் தங்களைப் பழக்கிக்கொள்வதில் கஷ்டங்களை எதிர்நோக்கினார்கள். வனவிலங்குகள் ஒரு பிரச்சினையாக இருந்தது. சுவாசக் கோளாறுகள், சரும நோய்கள் போன்ற சுகாதார ரீதியான பிரச்சினைகளும் எதிர்நோக்கப்பட்டன. சேனைச்செய்கை, காடுகள் அழிக்கப்படுதல், ஆகியன காரணமாக யானைகள் போன்ற விலங்குகள் தமது இயற்கை வதிவிடங்களை இழக்க நேரிட்டது. மகாவலி திட்டம் காரணமாக, பாதிக்கப்பட்ட சில கிராமங்களில் தொடர்ந்தும் சொந்த இடங்களில் வசிப்பதற்கு விரும்பிய சில சமூகங்களுக்கு கழித்து விடப்பட்ட தேயிலைக் காணிகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் எதுவித வருமானமும் கிடைக்கவில்லை. அனேகமான விவசாயிகள் கண்டிய வீட்டுத் தோட்டங்களையே நம்பி வாழ்க்கை நடத்தி வந்தனர். இவை வருடம் முழுவதும் அவர்களுக்கு தேவையான உணவையும் காசுப் பயிர்களையும் வழங்கி வந்துள்ளன.

கண்டிய வீட்டுத் தோட்டங்களில் தேங்காய், மிளகு, கொக்கோ போன்ற பல்வேறு வகையான காசுப் பயிர்கள் பயிரிடப்பட்டு வந்தன. நெற் செய்கை மூலம் கிடைக்கும் முக்கிய வருமானத்திற்கு மேலதிகமாக மக்கள் இந்த பயிர்கள் மூலம் வருமானம் பெற்று வந்தனர். நீர்த்தேக்கங்கள் காரணமாக, பயிர்ச்செய்கைக் காணிகள் வெள்ளத்தினால் மூழ்கியதனால் இப்பகுதி மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். (வெரலிகம 2004). அத்துடன், சுற்றுப் புறங்களில் உள்ள கிராமங்களில் பழச்செய்கை, காய்கறிச் செய்கை, பழைய வகையான நெற் பயிர் பேதங்கள் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால், புதிய பிரதேசங்களில் இவற்றை மேற்கொள்ள முடியவில்லை. இந்த வகையான பயிர்ச்செய்கை முறைகள் தொடர்பாக விவசாயிகளுக்கு இருந்த பாரம்பரிய அறிவும் காலக்கதியில் இல்லாமல் போய்விட்டது.

## வீதி: கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி திட்டம் தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள இடம்பெயர்வுகள்

### அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு தொடர்பான நிலைமை

இலங்கையில் அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகள் மீளக் குடியமர்வுகள் பற்றிய விபரங்களை கடந்த மூன்று தசாப்த காலத்தில் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. 1980 ஆம் தசாப்தத்தில் செயற்படுத்தப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தி திட்டம் காரணமாக, பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கிராமிய விவசாய தொழிலாளர்களாவர். சிலர் தமது காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக இடம்பெயர்ந்த போதிலும் பெரும்பாலானோர் வேறு பகுதிகளில் மீள் குடியமர்த்தப்பட்டனர். தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட மக்கள் பங்குகொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அரசாங்க நடைமுறைகளே ஏற்றுக்கொள்ளப்பட்டன.

வடக்கு கிழக்குப் பகுதியில் 20 வருட யுத்தம் காரணமாக, நிவாரண புனர்வாழ்வு மீள் குடியமர்வு அமைச்சு நிறுவப்பட்டது. யுத்தம் காரணமாக, உள்ளூரில் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள் மீது இந்த அமைச்சு கவனம் செலுத்துகின்றது. (IDPs). இந்த யுத்தம் பாரதூரமானதாக இருந்ததனால், யுத்தம் சாராத இடம்பெயர்வுகள் குறித்து கொள்கை வகுப்பாளர்கள் கவனம் செலுத்தவில்லை. இதற்கு பல காரணங்கள் உள்ளன. யுத்தத்தின் தன்மை, அதன் தாக்கம் ஆகியன காரணமாக, இடம்பெயர்ந்த மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்தனர். அத்துடன், இது தொடர்பாக சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒத்துழைப்பு கட்டமைப்புகள்[4] உள்ளன.

யுத்தம் நீண்டகாலம் நீடித்ததன் காரணமாக, அது தொடர்பான இடம்பெயர்வுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றி ஆராய்ந்து தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கால அவகாசம் இருந்தது. AMDPs பற்றிய கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டது போன்று அபிவிருத்தி காரணமாக, ஏற்படும் இடம்பெயர்வுகளும் மீளக் குடியமர்வுகளும் இலங்கைக்கு ஒரு புதிய விடயமல்ல. சிறிய அளவிலான மேட்டுநிலக் குடியேற்றத் திட்டங்கள், இளைஞர் குடியேற்றத் திட்டங்கள், மழை நீரை நம்பி விவசாயம் செய்யும் குடியேற்றத் திட்டங்கள் ஆகியன இவற்றுக்கான பரிகாரங்களாகும். குறித்த நிபுணத்துவம், திட்டமிடல், அமுலாக்கல் ஆகியன தேவைப்படும் திட்ட

[4] அரசாங்கமும் அரசாங்க சார்பற்ற துறைகளும் யுத்தத்துடன் தொடர்புடைய இடம்பெயர்வுகளுக்கென திட்டப் பிரிவுகளை உருவாக்கியுள்ளன.

விடயங்களாக இடம்பெயர்வுகளும் மீள் குடியமர்வுகளும் அங்கீகரிக்கப்படவில்லை. இதனால், இன்றும்கூட இது தொடர்பான வழிமுறைகள் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண போதுமானவையாக இல்லை. அவை மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

உலகளாவிய ரீதியில் உள்நாட்டில் இடம்பெயர்வோரின் எண்ணிக்கை கடந்த சில தசாப்தங்களில் பெரிதும் அதிகரித்துள்ள போதிலும், சர்வதேச நடைமுறைகள் இதற்கு கட்டுப்படுபவையாக அமையவில்லை. 1998 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் நிறுவனம் உள்ளூரில் இடம்பெயரும் மக்களை பின்வரும் வகையில் அங்கீகரிக்கின்றது.

> *"ஆயுதப் போராட்டம், பொதுவான வன்செயல்கள், மனித உரிமை அத்துமீறல்கள், இயற்கை அல்லது மனிதனால் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்கள் ஆகியவற்றினால் தமது சொந்த வதிவிடங்களை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு ஆனால், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நாட்டு எல்லையை தாண்டிச் செல்லாதவர்கள் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களாக கணிக்கப்படுகின்றனர்."* (Hampton 1998: XV)

இந்த வரையறை மூலம் அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகள் தலையீட்டுக்கு அவசியமானதாக அங்கீகரிக்கப்படுகின்ற போதிலும், இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களுக்கான தீர்வுகளை வழங்குவதற்கு அப்பாற்பட்ட வகையில் அதன் ஆணை அமைந்திருக்கவில்லை. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அமைப்பு (UNHCR) 1970 ஆம் தசாப்தம் தொடக்கம் சர்வதேச ரீதியில் உள்ளூர் இடம்பெயர்வு சம்பந்தப்பட்ட வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்ற போதிலும், அது, யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் குறித்தே முக்கிய கவனம் செலுத்தி வந்துள்ளது.

பின்வரும் கலந்துரையாடல் கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதித்திட்டம், தென்பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தத் திட்டம் ஆகியன சம்பந்தப்பட்ட அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகள் பற்றி கவனம் செலுத்துவதற்கு உதவுகின்றது. தற்பொழுது மதிப்பீட்டுக்கு உள்ளாகியிருக்கும் இந்த இரு நெடுஞ்சாலைத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட இடம்பெயர்வுகள் தொடர்பாக ஆய்வு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதே இந்தப் பிரயோக ஆராய்ச்சியின் நோக்கமாகும். இதுவொரு முழுமையான, விரிவான மதிப்பீடாக அமைய மாட்டாது. இடம்பெயர்வு மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் பற்றி அடிமட்டத்தில் புரிந்துணர்வை ஏற்படுத்தி கொள்கையை வகுப்பதற்கும் அமுல் செய்வதற்கும் ஏதுவாக புரிந்துணர்வு ஒன்றை வழங்குவதே இதன் நோக்கமாகும். கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி நெடுஞ்சாலைத் திட்டமும் தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டமும் தற்போது அமுல் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட கொள்கைகளையும் கட்டமைப்புகளையும் உருவாக்குவதற்கு உதவியாக அமையக்கூடும். அத்துடன், மேலும் விரிவான பரந்த ஆராய்ச்சிக்கான நுழைவாயிலாகவும் இது விளங்க முடியும்.

**கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி மற்றும் தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தி திட்டங்களின் பின்னணி**

இலங்கையைப் பொறுத்தமட்டில் பெரிய அளவிலான இடம்பெயர்வுகளும் மீள் குடியமர்வுகளும் கடைசியாக துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இடம்பெற்றிருந்தன. தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கொழும்பு - கட்டுநாயக்க திட்டங்கள் காரணமாக கணிசமான அளவு இடம்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளன. அவை அண்மைக்காலத்தில் அமுல் செய்யப்படும் மிகப் பெரிய அளவிலான அபிவிருத்தி நடவடிக்கைகளாக விளங்குகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி திட்டத்தில் மீள் குடியமர்வு குறைந்த மட்டத்தில் உள்ளது. தென் பகுதி போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தினைப் பொருத்த அளவில் மீள் கூடியமர்வு பாரிய அளவில் உள்ளது. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்துடன் ஒப்பிடுகையில் கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதித் திட்டம் தென் பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அது பற்றி விரிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் இந்தத் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இவற்றினால் இடம்பெயர்ந்தவர்கள் முற்றிலும் கிராமப்புற மக்கள் அல்லர். நகர, ஓரளவு நகரப்புற மக்களும் இவர்களில் அடங்கியுள்ளனர். இந்த இரு திட்டங்களின் மூலமும் உருவாக்கப்பட இருக்கும் நெடுஞ்சாலைகள் நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் கேந்திர நிலையமான கொழும்பை இணைக்கும் பாதைகளாக உள்ளன. அத்துடன், அண்மைய ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் தலையீடுகள் தொடர்பாக சிவில் சமூகத்திற்குள்ள அக்கறையும்

பொதுமக்களின் எதிர்ப்பும் அதிகரித்துள்ளன. முக்கியமாக பல்தரப்பு நிதிவழங்கும் நிறுவனங்கள் தெரிவித்துள்ள தனியார் மயப்படுத்தும் மூலோபாயங்கள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் முடிவடைந்த அபிவிருத்தி மகாநாட்டில் கடுகதி நெடுஞ்சாலை திட்டங்களுக்கு எதிராக கருத்து வெளியிட்டவர்கள் இவை நிதி வழங்குபவர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் இருப்பதாகவும் நாட்டின் நலனுக்கு உகந்ததாக இல்லை என்றும் தெரிவித்திருந்தனர்.

அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்யும் அதிகாரிகள் சமநலன்களை பேணவேண்டிய நிலையில் உள்ளனர். துரித பொருளாதார விஸ்தரிப்பை ஏற்படுத்தி முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்கும் வாகனப் போக்குவரத்து நெருக்கடிக்கு நீண்டகால தீர்வை வழங்குவதற்குமான அம்சங்களாக கடுகதி நெடுஞ்சாலைகள் கருதப்படுகின்றன. இடம்பெயர்வு, மீள் குடியமர்வு தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன என்பதை இத்திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள பல அதிகாரிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால், நாட்டின் அபிவிருத்திக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரக்கூடிய போட்டியிடும் ஆற்றலை அதிகரிப்பதற்கும் இவ்வாறான திட்டங்கள் அவசியமாகின்றன என்று வலியுறுத்தப்படுகின்றது. தலையீடு, அமுலாக்கல், திட்டமிடும் நடவடிக்கைகள் ஆகியவற்றை நியாயப்படுத்துவதற்கு பெரும்பாலானவர்களுக்கு பெரும் நன்மைகள் என்ற கோட்பாடு பயன்படுத்தப்படுகின்றது.

இந்த இரண்டு திட்டங்களையும் அமுல்படுத்துபவராகவும் மேற்பார்வை செய்பவராகவும் விளங்கும் இலங்கை அரசாங்கம் முக்கிய பங்குதாரராக விளங்குகின்றது. அதன் பன்முகப்படுத்தப்படட நிறுவனங்களான பிரதேச செயலகங்கள் சில திட்டப் பிரிவுகளுக்கும் நடைமுறை கண்காணிப்பு மற்றும் சீர்படுத்தலுக்கும் பொறுப்பாக உள்ளன. மத்திய சுற்றாடல் அதிகார சபை திட்ட வடிவமைப்புக்கு அங்கீகாரம் வழங்குவதற்கும் குறிப்பிட்ட சுற்றாடல் வழிகாட்டல்களுக்கு அமைய இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்கும் பொறுப்பாக உள்ளது. திட்ட அமுலாக்க தராதரங்களையும் அது கண்காணிக்கின்றது. ஆலோசகர்கள் திட்ட வடிவமைப்புக்கும் தாக்க மதிப்பீட்டிற்கும் பொறுப்பாக உள்ளனர். உதாரணமாக, EIA சுற்றாடல் தாக்க மதிப்பீடு, சமூக தாக்க மதிப்பீடு ஆகியவற்றில் வெளி சர்வதேச ஆலோசனை நிறுவனங்கள், உள்ளூர் நிறுவனங்கள் ஆகியன அடங்கியுள்ளன. தென்பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தைப் பொறுத்த மட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு தொடர்பான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. நிதி திரட்டுவதற்கும், பயன்படுத்துவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொடர்பான பிரமாணங்கள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் இதுவே பொறுப்பாக உள்ளது, சம்பந்தப்பட்ட நபர்களுக்கும் சுற்றாடலுக்கும் ஏற்படக்கூடிய தாக்கங்களை தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கான வழிகாட்டல்கள் இதில் அடங்கியுள்ளன. கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி திட்டத்திற்கான நிர்மாணக் கம்பனியாக Daewoo - Keagnam விளங்குகின்றது. தென் பிராந்திய போக்குவரத்து திட்ட நிர்மாண வேலைகளை Kumagai Gumi என்ற கம்பனி மேற்கொள்கின்றது. இந்தத் திட்டங்கள் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் நேரடி பொறுப்பில் உள்ளன. வீதி அபிவிருத்தி அதிகார சபை இதனை அமுல் செய்யும் நிறுவனமாக விளங்குகின்றது. இரண்டு நெடுஞ்சாலைகளினதும் திட்ட அலுவலகங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உப பிரிவுகளாக இயங்குகின்றன.

இந்த அதிகார சபை ஏனைய பங்குதாரர்களுக்கான தொடர்பு முனையாகவும் விளங்குகின்றது. அத்துடன் திட்டமிடல், வடிவமைப்பு, நிர்மாணம், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், காணி சுவீகரிப்பு, மீள் குடியமர்வு போன்ற சகல திட்டப் பிரிவுகளினதும் ஒருங்கிணைப்பாளராகவும் அது விளங்குகின்றது. நில அளவை மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம், காணி மதிப்பீடு, காணி சுவீகரிப்பு போன்றவற்றுக்கு பொறுப்பாக உள்ளது, காணி சுவீகரிப்பு சட்டத்திற்கு அமைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டின் சட்டத்தின்படி பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் ஆரம்ப சாத்தியவள ஆய்வின் கட்டாயமான ஒரு பிரிவாக சுற்றாடல் தாக்க மதிப்பீடு அமைந்துள்ளது. இலங்கையில் சமூக தாக்க மதிப்பீடு தொடர்பான கொள்கைகளோ வழிகாட்டல்களோ இல்லை. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் ஒரு பிரிவில் இதற்கான வழிகாட்டல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இவ்விதம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது இடம்பெயர்வு மற்றும் மீள் குடியமர்வு நடவடிக்கைகளின் போது பெரிதும் உணரப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இடம்பெயர்வு மீள் குடியமர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு அந்தந்தத் திட்டங்களின் அடிப்படையில் பரிகாரம் காணப்படுகின்றது. கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதித் திட்டம், தென் பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றில் எழுந்தது போல் நினைத்தபடி செயற்படுவதற்கும் விதிமுறைகள்

பின்பற்றப்படாமல் விடுவதற்கும் இதனால் வழி ஏற்படுகின்றது. அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகளை ஏற்படுத்தும் பாரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் அதிகரித்து வருவதை அடுத்து தேசிய நிர்ப்பந்த மீள் குடியமர்வுக் கொள்கைக்கு (NIRP) 2001 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. சகல அபிவிருத்தித் திட்டங்களும் இந்தக் கொள்கைக்கு அமைய அமுல் செய்யப்பட வேண்டும். அடிப்படைக் கோட்பாடு, வாய்ப்பு, கொள்கைகள், மீள் குடியமர்வு தொடர்பான ஸ்தாபக ரீதியான பொறுப்புகள் ஆகியன பற்றி இந்த கொள்கைத் திட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டங்கள் தேசிய சுற்றாடல் சட்டம், NIRP 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மீள்குடியமர்வுத் திட்டங்கள், திட்டத்தினால்[5] பாதிக்கப்படுபவர்களின் உரிமைகள், நன்மைகள் ஆகியவற்றை விளக்கிக் கூறும் விதி அபிவிருத்தி சபையின் 17 அம்ச வழிகாட்டல் ஆவணம் ஆகியவற்றுக்கு அமைய இந்தத் திட்டங்கள் அமுல் செய்யப்பட வேண்டும். இந்தத் திட்டங்களுக்கான காணிச் சுவீகரிப்பு LAA சட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்படும்.

**கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி**

கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி பற்றி முதன் முதலாக 1980 ஆம் தசாப்தத்தின் முற்பகுதியில் யோசனை தெரிவிக்கப்பட்டது. நாட்டின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையத்திற்கும் கொழும்பு நகருக்கும் இடையில் துரித போக்குவரத்து தொடர்பை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். கொழும்பு நகரை கட்டுநாயக்கவுடன் இணைக்கும் கடுகதி வீதியில் ஐந்து குறுக்குப் பாதைகளும் உள்ளன. சதுப்பு நிலம் ஊடாகச் செல்லும் தற்போதைய பாதை பற்றி முடிவு செய்யப்படு முன்னர் 7 மாற்று வழிகள் பற்றி ஆராயப்பட்டன. இந்த வீதி நிர்மாண வேலைகள் 2000 ஆம் ஆண்டு ஆரம்பமாகின. முற்றிலும் அரசாங்க நிதியுடன் இது ஆரம்பிக்கப்பட்டது. 35.2 சதவீதமான வேலைகள் 2003 ஆம் ஆண்டு மே மாதம் பூர்த்தி செய்யப்பட்டன. அதன் பின்னர் நிதி நெருக்கடி காரணமாக இந்த திட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதற்கு நிதி வழங்கக்கூடியவர்களை கண்டுபிடிக்கும் முயற்சி தோல்வி கண்டதை அடுத்து ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கு நிதி வழங்குவதற்கான முறையொன்று பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது.[6] பொது - தனியார் கூட்டுப் பங்காளித்துவம் பற்றியும் தற்போது பரிசீலிக்கப்படுகிறது. இதற்கான தகுதி தொடர்பான கோரிக்கை 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுக்கப்பட்டது. அரசாங்கம் இத்திட்டத்தில் 5,100 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது. இத்திட்டம் சம்பந்தப்பட்ட ஆலோசகர்களில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த Snowy Mountain Engineering Corporation, Price Waterhouse Coopers ஆகியன அடங்கியுள்ளன. A Daewoo - Keagnam Korean கூட்டு நிர்மாண வேலைகளுக்கு பொறுப்பாக இருந்தது. ஆனால், அவர்களின் ஒப்பந்தம் முடிவுக்கு வந்துள்ளது.

கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி நான்கு பிரிவுகளைக் கொண்ட இருவழி பாதையாகும். பிரயாண நேரத்தைக் குறைத்து பாதுகாப்பை[7] அதிகரிக்கும் அதேவேளையில், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கும் நாட்டின் தலைநகருக்கும் இடையில் இலகுவான போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவதே இதன் பரந்த நோக்கமாகும். இந்த திட்டம் தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் இரு சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளை மேற்கொண்டது. கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி மேல் மாகாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளது. அது, கடற்கரை ஓரத்திற்குச் சமாந்தரமாக செல்லும். கடல் மண்ணை அகழ்வதும் வாவியை நிரப்புவதும் இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ளது. இந்த வீதியின் 75 வீதம் சதுப்பு நிலங்களையும் வாவியையும் கொண்டதாகும். நகர்ப் புறங்களில் உள்ள களனி, வத்தளை, மஹர, கட்டான, ஜா-எல ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகள் ஊடாக இந்த கடுகதி பாதை செல்ல இருக்கின்றது. கடலிலும் வாவியிலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் அது சார்ந்த தொழில்களில் சம்்தப்பட்டுள்ளவர்கள் உட்பட கணிசமானோர் இதனால் பாதிக்கப்படுவார்கள்.

---

5 சிங்களத்தில் www.rda.lk

6 அரசாங்கம் தற்போது நிர்மாணித்து இயற்றி உரிமை மாற்றம் செய்யும் அடிப்படையில் பொது தனியார் பங்காளியொன்றை தேடி வருகின்றது.

7 எமது உட்கட்டமைப்பு திட்டத்தில் முதலீடு செய்யுங்கள், நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டம் குழாய்வழி திட்டங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு, 2003

**தென்பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம்**
தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின் முக்கிய அம்சம் தென்பிராந்திய நெடுஞ்சாலை அல்லது கொழும்பு மாத்தறை கடுகதி நெடுஞ்சாலையாகும். வீதி அபிவிருத்தி சபை 1980 ஆம் தசாப்தத்தின் முற்பகுதியில் இது பற்றி யோசனை தெரிவித்திருந்தது. இந்தக் கடுகதி வீதி கொழும்பையும் (கொட்டாவ) மாத்தறையையும் இணைக்கின்றது. இது 11 குறுக்குப் பாதைகளைக் கொண்டதாகும். ஆரம்பமும் இறுதியுமான வீதித் திட்டம் 1992 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி சபையினால் வடிவமைக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வீதி நிர்மாணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் சிவில் சமூகக் குழுக்களும் நீதிமன்றத்திற்குச் சென்றன. இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் கட்டாய அம்சமான சுற்றாடல் தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை என்பதே இந்த அமைப்புகளின் அடிப்படை வாதமாகும். 1999 ஆம் ஆண்டு அரசாங்கம் இந்த வேலைத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்தும் சர்வதேச ஒததுழைப்புககான ஜப்பானிய வங்கியிடம்[8] இருந்தும் கடன் பெறுவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது. இந்த இரு நிறுவனங்களும் பிரதான நிதி வழங்கும் நிறுவனங்களாக உள்ளன.

நோர்டிக் அபிவிருத்தி நிதியமும் கடன் வழங்கியுள்ளது. சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (SIDA) இதற்கு நன்கொடையை வழங்கியுள்ளது. 1998 ஆம் ஆண்டு ADB ஆலோசகரான வில்பர் ஸ்மித் அஸோசியேட் நிறுவனம் கடற்கரையோர வீதிக்கு அண்மையில் வேறு பாதை ஒன்று பற்றி சிபார்சு செய்திருந்தது. RDA இதற்கு இணங்கவில்லை. இந்த வழிமூலமான பாதை பல அபிவிருத்தியடைந்த பிரதேசங்கள் ஊடாக செல்வதே இதற்கான காரணங்களுள் ஒன்றாகும். RDA யின் 60 வீதமான பாதை திட்டமும் WSA யின் 40 வீதமான பாதைத் திடடமும் உள்ளடங்கிய கூட்டு பாதை வடிவமைப்புக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியது. இதன்பொருட்டு EIA. SIA போன்ற சகல மதிப்பீடுகளும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

ADB பிரிவில் நிர்மாண வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. இறுதி வரைவுக்கு[9] அமைய வேலைகள் நடைபெறுகின்றன. இது கூட்டு வரைவில் இருந்து மாறுபட்டதாகும். ஜப்பானைச் சேர்ந்த Kumagai Gumi Ltd நிறுவனம் நிர்மாண வேலைகளுக்குப் பொறுப்பாக உள்ளது. (ADB பிரிவு) Finnroad Pvt Ltd நிறுவனம் (சரத் விக்கிரமரத்ன அசோஸியேட் நிறுவனத்துடன் இணைந்து) திட்ட முகாமைத்துவ ஆலோசகராக பணியாற்றுகின்றது. இந்தத் திட்டம் பற்றி ஒருவர் கருத்து வெளியிடுகையில், "மேக்க துவன பாறக்" (இது ஓடுவதற்கான பாதை) என்று தெரிவித்தார். இந்தப் பாதை வடிவமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டமை குறித்து இந்த நபர் ஆத்திரம் கொண்டுள்ளார் என்பதை அவரது இந்தக் கூற்று வெளிப்படுத்துகின்றது. பொது ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளின்படி இந்தத் திட்டம் 2000 ஆம் ஆண்டு தொடங்கி 2005 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஆனால் தற்பொழுது இது 2008/09 கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் 6 தொடக்கம் 4 லேன்களைக்[10] கொண்ட (ADB இரண்டு லேன்களுக்கு நிதி வழங்கியுள்ளது. எஞ்சிய லேன்களுக்கான நிதியை பெறும் முயற்சியில் அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது) கடுகதி பாதை எதிர்காலத்தில் மேலும் விஸ்தரிக்கப்படலாம். எதிர்கால அபிவிருத்திக்கான போக்குவரத்து வசதிகளை வழங்குவதும் தென் பிராந்தியத்தின் பொருளாதார சமூக அபிவிருத்தியின் பொருட்டு கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றைக் கவர்வதற்கான நெடுஞ்சாலை வசதியை ஏற்படுத்துவதுமே இந்த திட்டத்தின் நோக்கமாகும். மொறட்டுவை பல்கலைக்கழகம் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை மேற்கொண்டது. ADB யும்[11] அபிவிருத்தி தாக்க மதிப்பீடு[12] ஒன்றையும் சுருக்கமான சுற்றாடல் தாக்க மதிப்பீடு ஒன்றையும் மேற்கொண்டது. கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழுவொன்று 1999 ஆம் ஆண்டு இந்த திட்ட கூட்ட வரைவுக்கான சமூக தாக்க மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டது.

---

8 JBIC பிரிவு சம்பந்தப்பட்ட வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

9 வரைவு வரைபடத்தில் ஐந்து வரைவுகள் இனங்காணப்பட்டுளளன. http://www.rda.lk/stdp

10 கொழும்புக்கும் காலிக்கும் இடையிலான பிரிவில் 6 லேன்கள் அமைந்திருக்கும். காலிக்கும் மாத்தறைக்கும் இடையிலான பிரிவில் இது நான்கு லேன்களாக விளங்கும்.

11 உப நிதி வழங்குநர்.

12 இது ஒரு பொது ஆவணமல்ல

தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம், மேல் மாகாணம், தென் மாகாணம் ஆகிய இரு மாகாணங்களையும் ஊடறுத்துச் செல்லும். நான்கு ஆற்றுப்படுகைகள், சுமார் 100 ஈரலிப்பு நிலங்கள் ஆகியவற்றின் ஊடாக இந்தப் பாதை நிர்மாணிக்கப்படுகின்றது. இப்பிரதேசம் வீட்டுத் தோட்டங்கள், நெற்காணிகள், (சிறிய தோட்டங்கள்) தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டங்கள் கறுவா, மிளகுச் செய்கைக் காணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இயற்கை வளம் மிக்க பகுதியாகும். தாழ்ந்த பிரதேசங்களை நிரப்புவது இந்தத் திட்டத்தின் முக்கிய நடவடிக்கையாகும். இப்பகுதியில் பெரும்பாலும் கிராமிய மற்றும் ஓரளவு கிராமியக் குடியேற்றங்கள்[13] அமைந்துள்ளன. விவசாயத்துறை, மீன்பிடித்தொழில், வனவளம், தோட்டங்கள் ஆகியன உள்ளூர் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக உள்ளன.

**அட்டவணை 1: திட்ட விபரங்கள்**

| திட்ட தலைப்பு | திட்ட காலம் | நிதி வழங்குநர்கள் | அமுல் செய்பவர்கள் | செலவு மதிப்பீடு | வேலை முன்னேற்றம்[14] |
|---|---|---|---|---|---|
| CKE | 2000 - 2003 | GoSL | RDA, CEA | SLRS 51 billion | 35.2% |
| STDP | 2000 - 2005 | ADB/JBIC | RDA, CEA | SLRS 130 billion | 47% |
| | 2002- 2008/9 (மாற்றியமைக்கப்பட்டது) | (பிரதான நிதி வழங்குநர்கள்) | | | |

*ஆதாரங்கள் :* பல

அட்டவணை 1 இல் குறிப்பிட்டுள்ளது போல் CKE யும் STDP யும் பெரிய அளவிலான மூலதனம் கொண்ட உட்கட்டமைப்பு திட்டங்களாகும். பல நிறுவனங்ள் இதில் சம்பந்தப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்ட காலகட்டம் தொடக்கம் இதுவரை பல்வேறு சர்ச்சைகளை எதிர்கொண்டுள்ளன. அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அரசியல் இலாபம் பெறுவதற்கான கருவிகளாக இந்தத் திட்டங்களைப் பயன்படுத்தியுள்ளன. ஒழுங்கீனங்கள் நிகழ்வதாகவும் நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும் ஊழல் நிகழ்ந்துள்ளதாகவும் இந்தத் திட்டங்களின் சகல கட்டங்களின் போதும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. நஷ்டஈடு தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. இந்த இரு திட்டங்களினதும் மீள் குடியமர்வு பிரிவுகள் RDA திட்ட அலுவலகங்களில் இயங்குகின்றன.

இடம்பெயர்வு, மீள் குடியமர்த்தல் மற்றும் அது தொடர்பான நடைமுறைகள் பற்றி கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. பொது மக்களுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும் சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும் அமுலாக்கத்தில் ஒழுங்கீனங்கள் நிலவுவதாகவும் காணிச் சுவீகரிப்பு, இடம்பெயர்வு, நஷ்டஈட்டுக் கொடுப்பனவு ஆகியன தொடர்பாக ஒழுங்கீனங்கள் நிலவியதாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. நிதி நெருக்கடி, பொது மக்கள் எதிர்ப்பு மற்றும் நிர்மாண தாமதங்கள் காரணமாக இரு திட்டங்களினதும் நிர்மாணப் பணிகள் தடைப்பட்டிருந்தன.

இந்த இரு திட்டங்களுக்குமான அரச நிறுவனங்களில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, RDA காணி அமைச்சு, நில அளவை மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம் ஆகியன அடங்கியுள்ளன. இரு திட்டங்களுக்கான அமுலாக்கல் நிறுவனங்களாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு, RDA (nodal agency) மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக மத்திய அரசாங்க அலுவலகங்கள் ஆகியன விளங்குகின்றன. திட்ட வடிவமைப்பு நிர்மாணம் ஆகியன சர்வதேச நிறுவனங்களுடன் கூட்டாக மேற்கொள்ளப்படுகின்றன.

அரசியல் தலையீடு தொடர்ந்தும் இரு திட்டங்களிலும் பாதகமான விளைவை ஏற்படுத்துகின்றது. வடிவமைப்பு கட்டத்தின் போது அரசியல்வாதிகளும் செல்வாக்கு படைத்தவர்களும் தங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வீதி திட்ட வரைவில் மாற்றங்களை செய்ததாக பல குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. கொழும்பு கட்டுநாயக்க கடுகதி பாதை வரைவு மூன்று தடவைகள்

---

[13] 35 வீதம் வீட்டுத் தோட்டங்கள், 31 வீதம் நெல் வயல்களும் தாழ்ந்த பிரதேசங்களும் 20 வீதம் றப்பர் தோட்டங்கள் SEIA 1999 (பி.கு இந்த விகிதங்கள் இறுதி வரைவுக்கானவையல்ல)

[14] 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் கணிப்பின்படி

மாற்றப்பட்டிருப்பதாக பாதிக்கப்பபட்ட மக்கள் கூறுகின்றனர். முதலில் அரசாங்க நிறுவன பணிப்பாளர் ஒருவரின் வீடு பாதிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டும் இரண்டாவது தடவை ஐந்து நட்சத்திர ஹொட்டல் ஒன்று பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்குமென மாற்றப்பட்டதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மூன்றாவதும் இறுதியுமான பாதை வரைவு தற்பொழுது நீர்கொழும்பு வாவிக்கு குறுக்காக செல்கின்றது.

கேள்விப்பத்திரம் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள் தொடர்பாக செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கு பதவி அதிகாரங்கள் பயன்படுத்தப்படுவதாகவும், சட்டவிரோதமான முறையில் கொள்வனவு மற்றும் ஊழல்கள் இடம்பெறுவதாகவும், அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட மக்களும் அடிக்கடி தெரிவித்து வந்துள்ளனர். திட்டங்களுக்கு நிதி வழங்கும் சர்வதேச நிதி நிறுவனங்கள் சில சமயங்களில் தமது சொந்த நிறுவன வழிகாட்டல்களை மீறிச் செயல்படுவது தெரிய வந்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் வேண்டுகோளுக்கு அமைய தென் பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்திற்கென நிர்மாணக் கம்பனியுடனும் ஆலோசனை நிறுவனத்துடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதாக ஊடக அறிக்கைகளும் வேறு வட்டாரங்களும் கூறுகின்றன.

**காணிச் சுவீகரிப்பும் நஷ்டஈடும்**

பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், நில அளவை மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் காணிச் சுவீகரிப்பு பற்றி தொழில்நுட்ப ரீதியில் பகிரங்கமாக அறிவிக்கப்பட வேண்டும். அரசாங்கத் தேவைகளுக்காக காணிகளை சுவீகரிக்கும் பொழுது காணி சுவீகரிப்புச் சட்டத்தின் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். வீதி அபிவிருத்தி அதிகார சபை அடையாளமிட்ட பின்னர், நில அளவை மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம் நில அளவை வேலைகளையும், மதிப்பீட்டு வேலைகளையும் மேற்கொள்ளும். சுவீகரிக்கப்பட இருக்கும் காணிகள் அல்லது வீடுகளின் உரிமையாளர்கள் உறுதியின் பிரதிகள், வீட்டுத்திட்ட வரைபடம், காணிப் பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றைச் சமர்ப்பித்து சொத்துக்கள் தொடர்பான தமது உரிமையை நிரூபிக்க வேண்டும். நில அளவை மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம் பொருத்தமான ஆவணங்களை நெடுஞ்சாலைகள் அமைச்சுக்குச் சமர்ப்பித்ததும், வீதி அபிவிருத்தி அதிகார சபை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகம் ஊடாக, நஷ்டஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும். பாதிக்கப்பட்ட மக்கள் நஷ்டஈடு தொடர்பாக திருப்தி கொள்ளாத பட்சத்தில், மீளாய்வு செய்யும்படி காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியமர்வு குழுவுக்கு மனுச் செய்வதற்கு சட்டத்தில் இடமுண்டு. இந்தக் குழுவில் பிரதேச செயலாளர், முறைப்பாட்டாளர், மதிப்பீட்டாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிப்பார்கள். நிர்மாண வேலைகளின் போது சப்தங்களால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பு மண் அரிப்பு போன்ற பிரச்சினைகள் தொடர்பான மனுக்கள் குறைபாடுகள் பரிகாரக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும்.[15]

காணி அளவை, சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நஷ்ஈடடு, பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குதல், மீள் குடியமர்வு, மீள் குடியமர்த்தப்படும் இடங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி ஆகியன முற்றிலும் அரசாங்க நிதியுடன் மேற்கொள்ளப்படும். திறைசேரியில் உள்ள நிதியைப் பொறுத்தே கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் தவணை முறையில் செலுத்தப்படும்.

## திட்டங்கள் தொடர்பான பொதுமக்களின் மறுமொழி

### தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் (STDP), கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதித் திட்டம் (CKE)

CKE, STDP என சுருக்கமாக அழைக்கப்படும் மேலே கூறப்பட்ட இரு திட்டங்களிலும் பொது மக்களின் ஈடுபாடு பெரிதும் மாறுபட்ட வகையில் அமைந்துள்ளது. CKE யைப் பொறுத்தமட்டில் கடும் எதிர்ப்பு தொடர்பாக பெரிய மட்டத்தில் கணிசமான அளவு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இந்தக் கடும் எதிர்ப்பு படிப்படியாகக் குறைந்தது. ஆங்காங்கே ஒருசில எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்ற

15 காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியமர்வு குழு மூலம் உரிய பரிகாரம் கிடைக்காதவர்களுக்கான ஒரு மேன்முறையீட்டு அமைப்பாக குறைபாடுகள் பரிகாரக் குழு செயல்படுகின்றது.

போதிலும், இந்தத் தகராற்றுக்கு இலகுவில் தீர்வு காணப்பட்டது. மற்றப்படி பொது மக்கள் மற்றும் அக்கறையுள்ள குழுக்கள் காரணமாக CKE திட்டத்திற்கு இடையூறு ஏற்படவில்லை. CKE திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலைமை பற்றி போதியளவு அறிவு இருக்கவில்லை. இந்தத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளில் போதிய வெளிப்படைத் தன்மை இல்லை என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்கும் தகவல்களில் வேறுபாடுகள் இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அத்துடன் 128 கிலோ மீற்றர் நீளமான STDP நெடுஞ்சாலைத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் 25.6 கிலோ மீற்றர் நீளமான CKE வீதி அபிவிருத்தித் திட்டம் அளவில் சிறியதாகும். அத்துடன், குறைந்தளவு மக்களே இதனால் பாதிக்கப்பட்டனர்.

மற்றொரு விடயம் யாதெனில், STDP திட்டம் போலன்றி, CKE திட்டம் முற்றிலும் அரசாங்க முயற்சியுடன் மெற்கொள்ளப்படும் ஒரு வேலைத்திட்டமாகும். இதில் வெளிநாட்டு நன்கொடை நிறுவனங்கள் சம்பந்தப்படாததால், இது நாட்டின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு திட்டமாகக் கருதப்பட்டது. நிதி கஷ்டங்கள் காரணமாக 2003 ஆம் ஆண்டு மே மாதம் CKE திட்ட நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டன. இதனை அடுத்து, காணி மற்றும் சொத்துக்களை சுவீகரிக்கும் நடவடிக்கைகளும் குறைந்தன. நிர்மாண வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதும், பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கக் கூடும். STDP வீதித் திட்டத்தில் தவறுகளும் தாமதங்களும் ஏற்பட்டுள்ள போதிலும், நிர்மாண வேலைகள் தொடருகின்றன.

STDP திட்டத்திற்கு பல்வேறு காரணங்களுக்காக கண்டனங்களும், அதேவேளையில், ஆதரவும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தப் பெரிய வேலைத்திட்டம் சாத்தியமற்றது என்றும், அடிக்கடி வீதி வரைவுகள் மாற்றப்பட்டதாகவும், அரசாங்கம் ADB[16] யின் அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுத்தது என்றும், பல்வேறுதரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. சர்வதேச நிதி நிறுவனங்களின் பங்களிப்பு ஒரு பாதகமான அம்சமாகவே கருதப்படுகின்றது. சர்வதேச நிதி நிறுவனங்களுக்கு சொந்த நிகழ்ச்சி நிரல்கள் இருப்பதாக பொதுவான அபிப்பிராயம் ஒன்று நிலவுவதே இதற்குக் காரணமாகும். சில இடங்களில் சுவீகரிக்கப்படுவதற்கான காணிகள் தொடர்பான நில அளவை நடவடிக்கைகள் பொலிசாரின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களில் பாதிக்கப்பட்ட மக்கள் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு பிரதிநிதிகள் (CBOs), சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், (I/NGOs) சிவில் நடவடிக்கையாளர்கள், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், சுற்றாடலில் அக்கறையுள்ள குழுவினர் போன்ற பலதரப்பினர் அடங்கியுள்ளனர். காணி மதிப்பீடு மற்றும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கைகள் போதியளவு தொடர்ச்சியாக இடம்பெறுவதில்லை என்பது மற்றுமொரு பொதுவான கண்டனமாகும்.

பாதிக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும், சட்டப் பரிகாரம் காண்பதற்குமென பாதிக்கப்பட்ட மூன்று இடங்களில் மூன்று CBO க்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை ஆதரிப்பவர்கள், அதற்கு சார்பாக கருத்து வெளியிடுகின்றனர். இது மிகவும் தேவையான உட்கட்டமைப்பு மைற் கல்லாகும் என்றும் பிராந்தியத்தில் சேவை, சந்தை விஸ்தரிப்புக்கும் அபிவிருத்திக்கும் இது உதவும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

**தீவிர பங்குகொள்ளல்**

CKE திட்டத்தை விட STDP திட்டத்திற்கு எதிராக நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் கூட அதிக அளவு ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள், சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனங்களை உருவாக்கி அதில் இணைந்து கொண்டார்கள். இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சவார்த்தை நடத்துவதற்கும், தங்களது கவலைகள் மற்றும் முறைப்பாடுகளை அரசியல்வாதிகள் அரசாங்க அதிகாரிகள் பல்தேச நிதிநிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு சகல மட்டங்களிலும் தெரிவித்து, அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக CBO எனப்படும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிலர் கொழும்பில் உள்ள திட்ட அலுவலகங்கள், சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு முறைப்பாடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தனர். STDP திட்டம் செயற்படுத்தப்படும் பிரதேசங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிட அலுவலகத்திற்கும் நேரில்

---

16 கேள்விப்பத்திர நடைமுறைகளில் ஒழுங்கீனங்கள் இடம்பெற்றுள்ளதாக ஞாயிற்றுக்கிழமை செய்திப்பத்திரிகை ஒன்று குறிப்பிட்டிருந்ததை அடுத்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் குறிப்பிட்ட வேண்டுகோளின் பேரிலேயே நிர்மாணக் கம்பனி தெரிவு செய்யப்பட்டதாக சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார்.

சென்றனர். பொதுவாக இந்தத் திட்டம் தொடர்பாகவும், அதில் சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாகவும் பெருமளவு விழிப்புணர்வு ஏற்பட்டது. இது பற்றி யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பது பற்றியும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆராய்ந்தனர். ADB முறைப்பாட்டு மீளாய்வுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை இந்த விவகாரம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் எந்தளவு தீவிரமாக செயற்பட்டனர் என்பதற்கு சான்றாகும். பரிசோதனைக் குழு இது தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமென முன்னர் விடுக்கப்பட்ட வேண்டுகோள் மறுக்கப்பட்ட போதிலும், ADB யின் சொந்த குறிப்புரைகளுக்கும் எதிராக இணக்க மதிப்பீட்டுக் குழுவுக்கு இது தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனுடன் ஒப்பிடும் பொழுது CKE திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் விட்டுக்கொடுக்கும் போக்குடன் நடந்து கொண்டுள்ளனர். கடுகதி வீதி நிர்மாணம், அதன் அமுலாக்க நடைமுறைகள், நஷ்டஈடு ஆகியன தொடர்பாக தாங்கள் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், தங்களது கவலைகளுக்கு பரிகாரம் காணப்படவில்லை என்றும் சிலர் தெரிவித்தனர்.

STDP திட்டத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்தத் திட்டம் மீள் வடிவமைக்கப்பட வேண்டும் என்றும் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் ADB தொடர்பான இலங்கை செயற்குழு, இலங்கை பசுமை இயக்கம், சுற்றாடல் நிதியம், பொதுமக்கள் அக்கறையுள்ள சட்ட அமைப்பு கொழும்பு - மாத்தறை[17] நெடுஞ்சாலைத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் கூட்டமைப்பு ஆகிய தலைமையில் கடும் எதிர்ப்பு நடவடிக்கைககள் இடம்பெற்றன. CKE திட்டத்தைப் பொறுத்தமட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர்கொழும்பு வாவி மீனவ சமூகம், கத்தோலிக்க தேவாலயம், ஒருங்கிணைந்த வள முகாமைத்துவ திட்டம் ஆகியவற்றிடம் இருந்து விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை தொடர்பாக ஒத்துழைப்பு கிடைத்தது.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களும் ஆய்வுக்கட்டுரைகள், ஆசிரியர் தலையங்கங்கள், பேட்டிகள் ஆகியவற்றை வெளியிட்டதன் மூலம் இந்த முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கின. இதேவேளையில் திட்டத்திற்குப் பொறுப்பானவர்களும் மக்களுக்கு தகவல்களை வழங்குவதற்கும், அறிவுறுத்துவதற்கும் ஊடகத்தைப் பயன்படுத்தினார்கள். இந்த திட்டத்தை தீவிரமாக எதிர்த்தவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மூன்று வழக்குகளை தாக்கல் செய்தனர். இறுதி தீர்ப்புகளின் போது சட்டத்தன்மை அங்கீகரிக்கப்பட்டதுடன், சில நடைமுறைகள் உதாசீனம் செய்யப்பட்டமையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நஷ்டஈடு வழங்கும்படி உத்தரவிடப்பட்டதை அடுத்து, RDA யின் நிர்மாண வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. எவ்வாறாயினும், எந்தவொரு நீதிமன்றமும் நிர்மாண வேலைகளை முற்றாக இடைநிறுத்தம்படி உத்தரவிடவில்லை. 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் STDP திட்டப் பிரிவினர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தானிகர் அலுவலகத்தில் விசாரணையை எதிர்கொள்ள நேரிட்டது. 40 பேர் கொண்ட குழுவொன்று உள்ளூர் குடியுரிமை குழுவொன்றின் ஆதரவுடன் மனித உரிமைகள் மீறப்பட்டதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்திருந்தது.

*மாகாண சபைத் தலைவர் கிராமத் தலைவர்கள் ஆகியோர் இணைந்து குழுவொன்றை உருவாக்கியுள்ளனர். அவர்கள் சுவீகரிக்கப்பட்ட வீடுகளுக்கு நல்ல விலையை பெற்றுக் கொடுத்துள்ளனர். கட்டிட அமைப்புகளுக்கு ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் ரூபா வரை. நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கு 12 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டது.*
- STDP யால் பாதிக்கப்பட்ட ஒருவர்.

எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக சிறிய மட்டத்தில் சாதகமான பலன்களும் ஏற்பட்டன. உதாரணமாக, இழப்பீட்டு பிரச்சினைக்கு பரிகாரம் காணும் முகமாக பாதிக்கப்பட்ட பல்வேறு பங்குதாரர்களின் தலைமைத்துவம் கூட்டு கட்டமைப்பை பயன்படுத்தியது பற்றி STDP பாதிக்கப்பட்ட ஒருவர் சுட்டிக்காட்டினார்.[18]

17 அக்மீமன பாதுகாப்புக்கான கூட்டு சங்க கூட்டணி (தெற்கு முனை) கம சுரகீம சங்விதானய, பண்டாரகம (வடமுனை)

18 வீடுகள் அமைந்துள்ள இடம், அவற்றின் கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நஷ்டஈடு வழங்கப்படுகிறது. குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் ஊர்ஜிதப்படுத்தப்படாதவையாகும்.

## இடம்பெயர்வு

**அட்டவணை 2 : இடம்பெயர்வு**

| திட்டம் | ப ாதையின் நீளம் | உள்ளடக்கம் | சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கைமு |
|---|---|---|---|
| CKE | 25.6 கி. மீ. | 5 பி.செ பிரிவுகள் | 250 |
| STDP | 128 கி. மீ.<br>65.2 கி. மீ.<br>66.55 கி. மீ. | 22 பி.செ பிரிவுகள் | 1300 |

* - சுவீகரிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. *ஆதாரம் :* பல்வேறு

**இடம்பெயர்வால் ஏற்படும் தவிர்க்க முடியாத விளைவுகள் எவை?**

இடம்பெயர்வு பல்வேறு தரப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதாகும் என்று இந்தக் கலந்தரையாடல் கருதுகின்றது. இடம்பெயர்வு என்பது வீடு அல்லது காணி இழப்பு மற்றும் அதன் விளைவான மீள் குடியமர்வு என்பவற்றுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. வாழ்க்கை முறை, உற்பத்தி, உறுதியான மற்றும் உறுதியற்ற சொத்துக்கள் ஆகியவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகளும் இடம்பெயர்வால் ஏற்படும் தாக்கங்களாகும். சேர்னியாவின் வறுமை ஆபத்து மற்றும் புனர்வாழ்வு மாதிரி, (Cernea 2000) பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. சமூக மற்றும் சுற்றாடல் ரீதியில் குறைந்தபட்ச பாதிப்புகளை ஏற்படுத்தும் மார்க்கங்கள் குறித்து எவ்விதத்திலும் தீவிர பரிசீலனை செய்யப்படாத தொழில்நுட்ப மற்றும் பொருளாதார தெரிவுகளை செயற்படுத்தும் ஒரு மாதிரி அபிவிருத்தியாக இது கருதப்படுவதாக, DID மீதான தற்போதைய ஆராய்ச்சிக் கட்டுரை கூறுகின்றது.[19]

காணிகள் (வீடு அல்லது பயிர்ச்செய்கை) சுவீகரிக்கப்பட்டதன் காரணமாகவே, இடம்பெயர்வு நிகழ்வதாக, இரு திட்டங்களினாலும் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். இதன் காரணமாக, அவர்களின் வாழ்க்கை வழிமுறைகள் பாதிக்கப்படுகின்றன. தாம் வாழ்க்கையை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை இழந்திருப்பதாகவும், அயலவர்கள், கிராம மக்கள் ஆகியோருடனான தொடர்புகளை இழக்க வேண்டி ஏற்படுவதாகவும் சமூக மூலவளங்கள், கலாசார அம்சங்கள் ஆகியவற்றுக்கான வாய்ப்புக்களை இழப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கருதுகின்றனர். உரிமைத்துவம் என்ற அவர்களது உணர்வு அவர்களது சொந்த உடைமைகள் மற்றும் காணிகளுக்கு அப்பாற்பட்டதாகும். இவர்களுக்கான கூட்டு உரிமைத்துவம், பொறுப்பு ஆகியவற்றைக் கொண்ட அம்சங்களாக கிராமிய கோவில், தேவாலயம், சிறிய குளங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள், கால்நடை மேய்ச்சல் நிலங்கள், சுடுகாடுகள், கிராம மட்ட ஸ்தாபனங்கள் கருதப்படுகின்றன. சிரமதானம்,[20] மதவழிபாடு போன்றன அயலவர்கள், கிராமவாசிகள் ஆகியோரின் கூட்டு நடவடிக்கைகளால் கிடைக்கப்பெறும் நன்மைகளும் அடங்கியுள்ளன.

இடம்பெயர்வை அடுத்து, மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் காரணமாக, ஏற்கனவே வாழ்க்கை முறை மாற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் மேலும் தீவிரமடைகின்றன. சொத்துச் சுவீகரிப்புக்கு முன்னதான காணி அளவை, மதிப்பீடு தொடர்பான நடவடிக்கைகள் காரணமாகவும், வேறு இடங்களில் குடியேற வேண்டியிருப்பதாலும், ஜீவனோபாய முறைகளில் ஏற்படும் மாற்றம் காரணமாகவும், சம்பந்தப்பட்டவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். அனேகமானோர் தாங்கள் ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதுகின்றனர். விபரங்கள் தங்களுக்கு சரியாக அறிவிக்கப்படவில்லை என்றும் போதியளவில் தங்களுடன் கலந்தாலோசிக்கப்பட வில்லை என்றும் அவர்கள் கருதுகின்றனர். தகவல்களையும், பரிகாரங்களையும் பெறுவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு செல்வதற்கான வாய்ப்புகளும் பொறுப்பானவர்களை சந்திப்பதற்கான வாய்ப்புக்களும் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது என்று அடிக்கடி முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளவைப் பொறுத்தமட்டில் STDP திட்டம் அதிக அளவு நபர்கள் மீதும் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீதும் நேரடியாகவும், நேரடியற்ற விதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. குறைந்தளவு நஷ்டஈடு, நியாயமற்ற காணி மதிப்பீடு, இழப்பீடு வழங்குவதில் தாமதம், அரசியல்

---

19 செயற்பாட்டு அறிக்கை அணைக்கட்டுகள் மீதான உலக ஆணைக்குழு மதிப்பீடு - 1.3 மார்ச் 2000

20 ஒரு பொது நோக்கத்திற்காக இலவசமாக உழைத்தல்

சலுகை ஆகியன காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் சீர்குலைவுகளையும், பாதிக்கப்படக்கூடிய ஆபத்தையும் வறுமை ஆபத்தையும் எதிர்கொள்ள வேண்டி இருப்பதாக கருதுகின்றனர். இவர்களில் 90 சதவீதமானோர் சராசரி அல்லது குறைந்த வருமானம் உடையவர்களாவர். பாதிக்கப்பட்ட எல்லோருக்குமே மாற்றுக் காணி அல்லது வீடு வழங்கப்படவில்லை. அதாவது, சிலர் வேறு இடங்களுக்குச் சென்று பழக்கமில்லாத இடங்களில் வீடுகளைக் கட்ட வேண்டிய நிலைக்கு உள்ளானார்கள்.

பாதிக்கப்பட்ட சிலருக்கு தூர இடங்களில் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக. CKE வீதித் திட்டத்தை எடுத்துக்கொண்டால், கட்டுநாயக்கவில் வசித்தவர்களுக்கு அங்கிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஆனமடுவவில் காணி வழங்கப்பட்டுள்ளது. STDP திட்ட பிரதேசத்தில் கலனிகமவில் வசித்தவர்களுக்கு கல்கம என்னும் இடத்தில் (உள் பிரதேசம்) காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தமைக்கான காரணங்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. "கல்கமவில் காணி வழங்கப்பட்டுள்ளது, அந்த மண் பயிர்ச்செய்கைக்கு உகந்ததல்ல. எனவே, அங்கு செல்ல எவரும் விரும்பவில்லை" (பாதிக்கப்பட்ட ஒருவர் - STDP) பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த பலர் தொடர்ந்தும் முன்னைய இடங்களிலேயே வாழ்கின்றனர். மாற்றுக்காணிகள் வழங்கப்பட்ட பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மோசமாக இருப்பதால் அவர்கள் முன்னைய இடங்களில் குறுகலான வதிவிடங்களிலும், சில சமயம் கூடார வீடுகளிலும் வசிப்பதற்கும் தயாராக உள்ளனர். பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படும் என்றும் இவர்கள் கருதுகின்றனர்.

STDP திட்டத்தில் இரு இடங்களிலும் பேட்டி காணப்பட்டவர்கள் இடவசதி தொடர்பான பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டனர். உத்தேச கடுகதி வீதி காரணமாக காணி விலைகள் அதிகரித்துள்ளன. இதனால், பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு தற்போதுள்ள அதே அளவான காணியை சுற்றுப்புறங்களில் வாங்க முடியாதுள்ளது. இழப்பீட்டுத் தொகை (இது ஏனைய அரசாங்க மதிப்பீட்டு விகிதங்களை விட அதிகமானது) தற்போதைய சந்தை விலைகளுக்கு அமைவானதாக இல்லை. காணியின் அளவு குறைவதனாலும், இயற்கை மற்றும் சமூக வசதிகளுக்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதாலும், பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். குறைந்த வருமானம் பெறும் செயற்பாடுகளை இது மோசமாகப் பாதித்துள்ளது.

*நான் பழைய வீட்டில் வசித்த போது என்னிடம் நான்கு பசுமாடுகள் இருந்தன. இடம்பெயர்ந்த பின்னர் அவற்றை விற்க வேண்டி ஏற்பட்டது. முன்னர் நான் மில்கோ தொழிற்சாலைக்கு பாலை விற்று பெருமளவு வருமானம் பெற்று வந்தேன். இப்பொழுது எனது ஜீவனோபாயம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.*
- பாதிக்கப்பட்ட ஒரு நபர் STDP

ஜீவனோபாய இழப்பு/அல்லது சீர்குலைவு இடம் பெயர்வுடன் தொடர்புடைய முக்கியமான தாக்கங்களாகும். காணிச் சுவீகரிப்பு ஜீவனோபாயத்திலும், வருமான வாய்ப்புகளிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சுவீகரிக்கப்பட இருக்கும் வீடுகளை விட காணி மற்றும் சம்பந்தப்பட்ட உடைமைகளுடன் இவை நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன.

ஜீவனோபாயம் மீதான தாக்கங்கள் பல்வேறு தரப்பட்டவையாகும். ஜீவனோபாய இழப்பு, ஜீவனோபாய மாற்றம் அல்லது சீர்குலைவு, வருமான வாய்ப்புக் குறைவினால் வறுமை மட்டம் அதிகரிப்பு, இதற்கு முன்னர் வறுமை நிலவாத பகுதிகளில் வறுமை நிலை தோன்றுதல் ஆகியன இவற்றுள் அடங்கியுள்ளன. நெற் காணிகள் இழக்கப்படுவதால் இரு மடங்கு தாக்கம் ஏற்படுகின்றது. அனேகமானோர் விவசாயத்தில் தங்கியிருப்பதால், அவர்கள் வருமான வாய்ப்பை இழப்பதுடன் உணவைப் பெற்றுக்கொள்வதற்கான மார்க்கத்தையும் இழக்கின்றார்கள். இழப்பீடு பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்ற காரணத்தினால், சமூர்தி உதவி பெற்று வந்த சில பாதிக்கப்பட்ட மக்கள் சமூர்தி நிவாரணத்தை இழந்துள்ளனர். சமூர்தி[21] உதவி மாதாந்த வருமான அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றது என்றும் அசையாத சொத்துக்களின் இழப்புக்காகவே நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் வாதாடினார்கள்.

நெற் காணிக்கான நஷ்டஈடு தங்களுக்கு ஏற்படும் நீண்டகால இழப்புக்களை ஈடு செய்யும் வகையில் அமையவில்லை என்று பலர் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டம் காரணமாக, விவசாய முறைகளில்

[21] சமூர்தி - அரசாங்க அனுசரணையுடனான சமூக உதவித் திட்டமான சமூர்தி (சுபீட்சம்) 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது, தேசிய வறுமை ஒழிப்புத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். இதன் ஒரு பகுதியின் கீழ் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்படுகின்றன.

மாற்றங்கள் ஏற்பட்டதாகவும் அறுவடை வீழ்ச்சியடைந்ததாகவும் மண் அரிப்பு காரணமாக பயிர்கள் அழிந்ததாகவும், STDP திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

ஒவ்வொரு திட்டத்தினாலும் பாதிக்கப்பட்டவர்கள், தாங்கள் வருமானத்திற்கு இயற்கை வளங்களிலேயே பெருமளவு தங்கியிருந்ததாகத் தெரிவித்தனர். நீர்ப்பாசனம் மூலம் நெற் செய்கையில் ஈடுபட்டு வந்தவர்கள் நீர் விநியோகம் குறைந்ததன் காரணமாகவும், வயல்களுக்கு செல்வதற்கான வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாகவும், அறுவடை வீழ்ச்சியை எதிர்கொள்ள நேரிட்டது. CKE திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் கடற்றொழில் ரீதியில் பெரும் கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டினார்கள். வாவிக்குச் செல்லும் வழிகள் தடைப்பட்டுள்ளமை, நல்ல உற்பத்தி நிலங்கள் நிரப்பப்பட்டமை, நீரியல் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்பட்ட மோசமான பாதிப்பு காரணமாக மீன்களின் எண்ணிக்கை குறைந்தமை ஆகியன இந்த கஷ்டங்களில் முக்கியமானவையாகும். சுவீகரிக்கப்படாத பிரதேசங்களுக்கு ஏற்பட்ட சுற்றாடல் தாக்கங்கள் பற்றியும் உற்பத்திக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றியும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சிறிய அளவில் தேயிலை, இறப்பர் செய்கையில் ஈடுபட்டோரும் பணப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அனேகமான சந்தர்ப்பங்களில், உரிமைத்துவமும் பயிர்ச்செய்கையும் விஸ்தரிக்கப்பட்ட குடும்பங்கள் வசமே இருந்தன. இவர்கள் அவ்வப்போது வெளியாட்களை கூலிக்கு அமர்த்தி வந்துள்ளனர். பலருக்கு பல்வேறு மட்டங்களில் வருமானம் அளித்து வந்த காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக, ஜீவனோபாய ரீதியில் பல தொடர்ச்சியான தாக்கங்கள் ஏற்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. ஒவ்வொரு திட்டப் பிரிவிலும் சம்பளத்திற்கு வேலை செய்து வந்தவர்கள் தங்கள் வதிவிடங்களை மாற்றிக் கொள்ள நேர்ந்ததால், வேலைத் தலங்களுக்குச் செல்வதற்கு நீண்டதூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

இந்தப் பிராந்தியங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கி விஸ்தரித்தல், சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் ஆகியன இரு திட்டங்களினதும் உப குறிக்கோள்களில் ஒன்றாகும். பாதிக்கப்பட்டவர்களிடம் இது பற்றி வினவப்பட்ட பொழுது இந்தக் குறிக்கோள்கள் எய்தப்படாததற்கான இரு காரணங்களை விளக்கிக் கூறினார்கள். ஒன்று, உற்பத்தி வழிகள் (பயிர்ச்செய்கை, கடற்றொழில்) தொடர்பாக நெடுஞ்சாலைத் திட்டங்கள் ஏற்படுத்திய பாதகமாக தாக்கமாகும். அதாவது, உற்பத்தி குறைவாக இருக்கும். இரண்டாவதாக, சிறிய அளவில் இந்த தொழில்களிலும், கைத்தொழில்களிலும் ஈடுபட்டவர்களுக்கு அவர்களது பட்டினங்களுக்கு வெளியே சந்தை வாய்ப்புக்களைப் பெற வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

பெரும் அபிவிருத்திக் குறிக்கோள்கள் இருப்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. STDP திட்டம் காரணமாக, சுற்றுலாத் தொழில் ஊக்குவிக்கப்படுதல், CKE திட்டம் மூலம் விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கான வீதி நிர்மாணிக்கப்படுதல் ஆகியன பெரும் அபிவிருத்திக் குறிக்ளோள்களாகும். இவை சிறு எண்ணிக்கை கொண்ட மேல்மட்ட மக்களுக்கே நன்மை அளிக்கும் என்று கருதப்படுகின்றது. அபிவிருத்தியினால் ஏற்படும் பாதிப்புகளை தாங்கள் தாங்கிக் கொள்ள வேண்டி இருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் உணருகின்றனர். அபிவிருத்தியினால் அவர்களுக்கு நன்மை கிடைக்காததோடு, அவர்களது வாழ்க்கைத் தரமும் வீழ்ச்சியடைகின்றது. ஒருசிலரின் பிரயாண நேரத்தைக் குறைப்பதற்காக பெரும்பாலானோர் தங்கள் ஜீவனோபாயத்தையும் காணிகளையும் வீடுகளையும் பரம்பரையாக வசித்து வந்த கிராமங்களையும் ஏன் தியாகம் செய்ய வேண்டி உள்ளது என்று அவர்கள் விசனம் கொள்கின்றனர். இவர்களது கருத்துக்கள் சேர்னியா அவதானிப்பில் எதிரொலிக்கின்றன. - சிலரின் வறுமையை குறைப்பதற்காக மற்றவர்கள் வறுமை நிலைக்கு தள்ளப்பட வேண்டுமா? (2002)

*"எமக்கு அரிசியின் விலை என்னவென்றுகூடத் தெரியாது. நாம் காய்கறிகளை வீட்டுத் தோட்டங்களிலேயே பயிரிட்டு வந்தோம். உப்பு வெங்காயம் ஆகியவற்றை மாத்திரமே விலை கொடுத்து வாங்குவோம்." "வீட்டுப் பாவனைக்காக தேங்காய், பலா, வாழை, ஈரப்பலா போன்றவற்றை நாம் பயிரிட்டு வந்துள்ளோம்." "நெற் காணிகள் கிராமத்தின் கேந்திர இடமாகும் என்பதை நாம் RDA அதிகாரியிடம் தெரிவித்துள்ளோம்"* - பாதிக்கப்பட்ட நபர்கள், STDP

காணிகள் இழக்கப்படுவதால், உணவுப் பாதுகாப்பு தொடர்பாக அச்சுறுத்தல் எழுந்துள்ளதாக STDP திட்டத்தினால் பாதிக்கப்பட்ட அனைவரும் CKE திட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிலரும் கூறுகின்றனர். சிலர் வீட்டுத் தோட்டங்களில் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர். அவர்கள் உணவுப் பொருட்களுக்காக

பணத்தைச் செலவிட வேண்டி இருப்பது வறுமை தோன்றுவதற்கான காரணங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது.

பெருமளவு சமூகத்திற்கும் தனிப்பட்ட வீடுகளுக்கும் ஏற்பட்ட பெரும் தாக்கம் காரணமாக, இயற்கையாக ஏற்பட்டுள்ள மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட சமூக மூலவளங்களுக்கும் இடங்களுக்குமான வாய்ப்புகள் குறைவாக இருப்பதாக பாதிக்கப்பட்ட பலர் தெரிவித்துள்ளனர். சில மூலவளங்களுக்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதோடு, காணி எல்லை வரையறை, நிலம் நிரப்பப்படுதல், நிர்மாணம் ஆகியவற்றால் இவை பாதிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினால் சிறிய குளங்கள், கால்வாய்கள், வாவிகள் போன்ற நீர் நிலைகளும் ஆலயங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற சனசமூக சொத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன. STDP திட்டத்தைப் பொறுத்தமட்டில், கடுகதி நெடுஞ்சாலையின் சில பிரிவுகள் நீர்ப்பாசன முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. நீர் நிலைகள் தடுக்கப்படுவதாலும், கால்வாய்கள் மண் போட்டு மூடப்படுவதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. CKE திட்டத்தைப் பொறுத்தமட்டில் நன்னீர் மீன்பிடி நிலைகளாக விளங்கிய சதுப்பு நிலங்கள் மண் போட்டு நிரப்பப்பட்டுள்ளன. நிலத்திற்கு அடியிலான நீர்வளம் குறைந்திருப்பதால், கிணறுகள் வற்றியிருப்பதாக இரு திட்டங்களாலும் பாதிக்கப்பட்ட மக்கள் அடிக்கடி முறைப்பாடு செய்து வந்துள்ளனர். நிர்மாண வேலைகளுக்கும் காணிகளை நிரப்புவதற்கும் நிலத்திற்கு அடியிலான நீர் அதிகளவு பயன்படுத்தப்படுவதால் இந்த நிலைமை தோன்றியுள்ளது.

> "*குடிநீர் கிணறுகள் வற்றியுள்ளன, காணிகளில் வெள்ளம் ஏற்படுகின்றது. நெற் காணிகள் மண்ணால் மூடப்படுகின்றன - இதனால், பயிர்ச்செய்கை மேற்கொள்வது மிகவும் கஷ்டமானதாகவுள்ளது. எதிர்காலத்தில் குடிநீரைப் பெற்றுக்கொள்வது ஒரு பிரச்சினையாக இருக்கும்*" பாதிக்கப்பட்ட ஒருவர், STDP

"*கம தெகட்ட பெதனவா*" (கிராமம் இரண்டாக பிரியும்) "*கம தெகட்ட கடெனவா*" (கிராமம் இரண்டு துண்டுகளாக உடையும்) என்பது STDP திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அடிக்கடி கூறும் வார்த்தைகளாகும். ஒரு பிரிவினருக்கு சிறந்த போக்குவரத்து தொடர்பையும் வாய்ப்பையும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வேலைத்திட்டம் மற்றவர்களின் நடமாட்டத்தை மட்டுப்படுத்துகின்றது என்பது விதியாகும். இந்தப் பிரிவு காரணமாக, சமூக வலையமைப்புகள் துண்டாடப்படுகின்றன என்பதும் அடிக்கடி தெரிவிக்கப்படும் ஒரு விடயமாகும். கடுகதி வீதியின் விளைவாக ஏற்படும் நகர் மயப்படுத்தல் காரணமாக, பாதுகாப்பு குறைந்துவிடும் என்றும் கூறப்படுகின்றது.

> "*நாங்கள் இப்பொழுது எங்கள் வீடுகளையும் பிள்ளைகளையும் பாதுகாப்பாக விட்டுச் செல்கின்றோம், இந்த நிலைமை கட்டாயம் மாறும்*" - பாதிக்கப்பட்ட நபர் ஒருவர், STDP

சமூகம் கூறுபடுதல், இந்த அபிவிருத்தித் திட்டங்களால் ஏற்படும் மற்றுமொரு மோசமான விளைவாகும். நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்படுவதால், நெல் வயல்களில் கூட்டாக வேலை செய்தல், மற்றும் உத்தியோகபூர்வமற்ற சமூக வலையமைப்புகள் போன்றன சீர்குலைவது பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மக்கள் இந்த வலையமைப்புகளில் பெரிதும் தங்கியுள்ளனர். இந்த வேலைத்திட்டங்கள் காரணமாக, சமூகங்கள் கூறுபடுவதால், இந்த வலையமைப்பு முறைகள் காலகதியில் சீர்குலைந்துவிடும் என்று பாதிக்கப்படும் மக்கள் கருதுகின்றனர். சமூக கட்டமைப்பு கிராம மட்ட ஸ்தாபனங்கள் ஆகியன கிராம வாழ்க்கையின் கேந்திர அம்சமாகும். இந்த சமூக நன்மைகள் குறைவது குறித்து பெரும் அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

உளவியல் ரீதியாக எடுத்துக் கொண்டால், பாதிக்கப்பட்ட மக்கள் ஆத்திரம், விரக்தி, கசப்புணர்வு, செயலற்றுப் போதல் போன்ற பல்வேறு உணர்வுகளுக்கு ஆளாகின்றனர். பலர் தங்களது தனித்துவம் இழக்கப்படுவதாக உணர்கின்றனர். ஏனென்றால், அவர்கள் தாம் வாழும் இடங்களில் ஏனைய சமூகங்கள் மத்தியில் அங்கீகாரம் உள்ளவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். "அப்பி யன என மன் நத்தி மினுசு பவட்ட பத்கறய்" (நாம் போக்கிடம் அற்றவர்களாக்கப்பட்டுள்ளோம்) இது அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை எடுத்துக் காட்டுகின்றது.

**இடம்பெயர்வுடன் தொடர்புடைய உணர்ச்சி பூர்வமான தாக்கங்கள்**

பாரம்பரிய வதிவிடங்களில் இருந்து இடம்பெயர்வதால், உற்பத்தி நடவடிக்கைகளுக்கான அத்திவாரம் அகற்றப்படுவதுடன், சமூக நிலையங்களின் செயற்பாடுகளும் தடம்புரண்டு விடுகின்றன. அபிவிருத்தி

நடவடிக்கை காரணமாக மீளக் குடியமர்பவர்கள் அவர்களது சொந்த காணிகளுக்கு மீண்டும் செல்ல முடியாதாகையால், நிரந்தர மாற்றுக் காணிகள் வழங்கப்படுவது முக்கியமானதாகும். இடம்பெயர்வு, நிர்ப்பந்தம் காரணமாக நடந்தாலும், சுய விருப்பத்தின் பேரில் இடம்பெற்றாலும், மக்களின் வாழ்க்கையில் அது மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. சிலருக்கு, இந்த மாற்றங்களுக்கு பழக்கப்படுத்திக் கொள்வது கஷ்டமானதாக உள்ளது. முக்கியமாக, சுய விருப்பமின்றி இடம்பெயரும் பொழுது, இது கஷ்டமாகின்றது. STDP, CKE ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் தங்களுக்கு வேறு வழி இல்லை என்பதே இடம்பெயர வேண்டிய மக்களின் பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. சுய விருப்பத்தின் பேரில் இடம்பெயர்ந்தவர்கள் கூட தங்களுக்கு உள்ள மாற்று வழிகள் மிகவும் கஷ்டமானவையாக இருப்பதால், நஷ்டஈட்டுத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு தாங்கள் இணங்கியதாக கூறுகின்றனர். வெளியேறாவிட்டால், சொத்துக்கள் பலவந்தமாக பறிமுதல் செய்யப்படும் என்றும், வீடுகள் தரைமட்டமாக்கப்படும் என்றும் அரசாங்க அதிகாரிகள் அச்சுறுத்தியதன் காரணமாக, தாங்கள் வேறு இடங்களில் குடியமர்வதற்கு தீர்மானித்ததாக அவர்கள் கூறுகின்றனர்.

ஆரம்பத்தில், இழப்பீட்டுத் தொகை பற்றிய விபரங்கள் மனதைக் கவரும் வகையில் அமைந்திருந்தாலும், இடம்பெயர்ந்த அனேகமான மக்களைப் பொறுத்தமட்டில் இதன் யதார்த்த நிலை மாறுபட்டதாக உள்ளது. தங்களுக்குப் பழக்கமான மக்களுக்கு பக்கத்திலும், பாடசாலைகள், வேலைத்தலங்கள் ஆகியவற்றுக்குப் பக்கத்திலும் காணிகளைப் பெறுவது கஷ்டமானதாக உள்ளது. பொதுவாக காணிகளுக்குக் கிடைத்த நஷ்டஈட்டுப் பணத்தின் மூலம் வசதியான இடங்களில் தேவையான அளவில் காணிகளை வாங்க முடியவில்லை. மின்சார வசதி இன்மை, நீரை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற விடயங்கள் காரணமாக மன உளைச்சலுக்கு உள்ளாக நேர்ந்துள்ளது. அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகள் சம்பந்தப்பட்ட மட்டில் இந்தக் கடைசிப் பிரிவு உதாசீனம் செய்யப்பட்டிருப்பதாக நாம் கருதுகின்றோம். இது தொடர்பாக எழுத்து ஆவணங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன அல்லது ஆவணங்கள் கிடைப்பதில்லை என்பது தெரிய வந்துள்ளது. பெரும்பாலான தாக்க ஆய்வுகள் உரிமைகள் மற்றும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டவையாக உள்ளன.

பொருட்கள் கிடைக்காமை, வறுமை, மற்றவர்களில் தங்கியிருத்தல் போன்றவை காரணமாக, அவமானம், இயலாமை, பலவீனமடைதல் போன்ற உணர்வுகள் ஏற்படுகின்றன. வறுமை காரணமாக, உளவியல் ரீதியில் பாதிப்பு ஏற்படுகின்றது. திடீர் வறுமை காரணமாக ஏனையோரில் தங்கியிருக்கும் நிலையிலுள்ள மக்கள் பற்றி ஆராய்வது பொருத்தமானதாகும். நீண்டகால வறுமைக்கும் மக்கள் திடீரென வறுமை நிலைக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுவதற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. இரண்டு வகையும் பாதுகாப்பு இன்மை, பொருளின்மை போன்றவற்றை தோற்றுவிக்கின்ற போதிலும், நீண்டகால வறுமை மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளும் நிலையை உருவாக்குகின்றது. மக்கள் தங்கள் முயற்சிகளை கைவிடுகின்றனர். பொதுவாக வறுமை காரணமாக சமூக ரீதியாக தனிமைப்படுத்தல், ஒதுக்கப்படுதல் போன்ற நிலைமை ஏற்படுகிறது. (கனேபொல - தளையசிங்கம் 2003)

தங்களை வறுமை நிலைக்குத் தள்ளியதாக மக்கள் கருதும் பல்வேறு மாற்றங்கள் குறித்து, அவர்கள் கொண்டுள்ள பெரும் கவலை பற்றி இந்த ஆய்வில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தமது காணிகளை விட்டு வெளியேற மறுப்போர் மத்தியில் இந்த நிலைமை காணப்படுகின்றது. இருப்பிடங்களை விட்டு வெளியேறி பொருட்களை இழந்தவர்கள் வாழ்வதற்கு வழிதெரியாது கவலைப்படுகின்றனர். அரசியல் ரீதியில் பலம் வாய்ந்த அல்லது செல்வாக்குள்ளவர்களை பாதுகாக்கும் அமைப்பு முறைக்கு எதிராகவும் ஆத்திரமும் கசப்புணர்வும் தோன்றியுள்ளது. உரிய இழப்பீடுகளை பெறுவதிலும் கூட சமூகப் பொருளாதார ரீதியில் உயர்மட்டத்தைச் சேர்ந்தவர்கள் இலகுவில் தமக்கு உரியனவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. (உதாரணம், வங்கி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள்)

கணவன்மார் தங்களது நிதியை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக உள்ள போதிலும், அனேகமான பெண்கள் தாங்கள் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று தெரிவித்தமை ஒரு சுவாரஷ்யமான விடயமாகும். இடம்பெயர்ந்த மக்கள் நிறுவியுள்ள நடவடிக்கைக் குழுக்களுக்கு பொதுவாக பெண்கள் தலைமை தாங்குகின்றனர். பலவந்த இடம்பெயர்வு, வாக்குறுதி மீறப்பட்டமை ஆகிய காரணங்களினால் பலர் உற்சாகமிழந்து தமக்கு வழங்கப்படுபவற்றை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை என்ற மனோநிலைக்குத் தள்ளப்படுகின்றனர். முழுமையான நஷ்டஈட்டை பெறுவது தொடர்பாக சமூக மற்றும் பொருளாதார ரீதியில் ஏற்படும் கஷ்டங்கள் காரணமாக, இடம்பெயர்ந்த பலர் இந்தப் போராட்டத்தைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தங்களது சொந்த வீடுகளில் இருந்து வெளியேற வேண்டியிருப்பதால், உணர்வு ரீதியாக ஏற்படும் துன்பம் எத்தகையது என்பது மாத்தறையை சேர்ந்த ஒரு பெண்ணின் அனுபவம் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

> *"நான் எனது வீட்டுக்குத் திரும்பினேன், கடைசி செங்கல் உடைக்கப்படும் வரை அவதானித்துக் கொண்டிருந்தேன். அங்கு நான் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தேன். எனது மகன் பாடசாலைப் படிப்பை கைவிட்டுள்ளார். சுற்றாடல் மாற்றம் காரணமாக, அவர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார். பாடசாலைக்குச் செல்லும் நோக்கம் அவருக்கு இல்லை. பல மாதங்களுக்கு இந்த வீட்டின் கழிவறையை அவரால் பயன்படுத்த முடியவில்லை. அவர் அடிக்கடி எமது பழைய வீட்டுப் பக்கம் போய் வந்தார். சில சந்தர்ப்பங்களில் எமக்கு ஏற்பட்ட துன்பங்கள் பற்றி நாங்கள் பேசுவதில்லை. நாங்கள் இப்பொழுது, ஒன்றும் இல்லாதவர்களாக மாறிவிட்டோம்."* - பாதிக்கப்பட்ட நபர், STDP

எந்தவொரு மாதிரி அபிவிருத்தி திட்டத்திலும், மக்களின் தேவைகள் உரிமைகள் குறித்து கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதை இதுபோன்ற சம்பவங்கள் வலியுறுத்துகின்றன. அபிவிருத்தித் திட்டங்களால் அனைவரது உரிமைகளையும் பாதுகாக்க முடியுமா? அபிவிருத்தித் திட்டங்கள் யாரின் நலன்களில் அக்கறை கொண்டிருக்க வேண்டும்? நவீன மயப்படுத்தல் யாருக்காக? இழப்புகளால் பாதிக்கப்படுபவர்கள் அபிவிருத்திக்கு முன்னர் இருந்ததைவிட மோசமான முறையில் கஷ்டப்படக் கூடாது என்று பலர் வாதாடுகின்ற போதிலும், எப்பொழுதும் இதனை எய்தக்கூடியதாக அமைப்பு முறைகள் இயங்குவதில்லை என்பதே யதார்த்தமாகும்.

**CKE, STDP ஆகியவற்றின் தாக்கங்கள்**

ஆய்வுக்குரிய முக்கிய அம்சமான இடம்பெயர்வு குறித்து முன்னைய கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது. இந்தப் பிரிவில் திட்ட தாக்கங்கள் பற்றி ஆராயப்படுகின்றது. சில அம்சங்களைப் பொறுத்தமட்டில் அது, முன்னயை கலந்துரையாடலுக்கும் அப்பாற்பட்டதாக அமைகின்றது.

நெருக்கடி நேரத்தின் போது, அவர்களுக்கு உதவியாக இருந்து தனித்துவ உணர்வை வழங்கிய சமூக வலையமைப்புகளின் சீர்குலைவும், இழப்பும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக ரீதியில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. வழிபாட்டுத்தலங்கள், பாட்சாலைகள், சனசமூக மண்டபங்கள் போன்ற சமூக மூலவளங்களை தாங்கள் இழந்து விட்டதாக பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். கலனிகமவில் STDP கடுகதி பாதை, ஆலயம் ஒன்றுக்கு குறுக்காக செல்கின்றது. இப்பகுதியில் பல வீடுகளும் இல்லாமல் போவதால், சமூகத்தின் பொறுப்பான இந்த ஆலயத்தின் சேமநலன்களும் புறக்கணிக்கப்பட்டு விடும் என்று பலர் கூறுகின்றனர். இதே கிராமத்திலுள்ள சுடுகாட்டின் ஒரு பகுதி ஊடாகவும், கடுகதி நெடுஞ்சாலை செல்ல இருக்கின்றது.

CKE நெடுஞ்சாலை நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகின்றது. இந்தப் பகுதி கைவிடப்பட்ட நிலையில் இருப்பதால், நிர்மாணப் பிரதேசத்தில் பல சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெறுவதாக ஓரளவு நிர்மாணிக்கப்பட்ட கடுகதி பாதைக்கு அருகில் வசிக்கும் மக்கள் கூறுகின்றனர். உதாரணமாக, சட்டவிரோத மதுபானத்தைக் கொண்டு செல்வதற்கும் இந்தக் கடுகதி பாதை பயன்படுத்தப்படுகின்றது. பாலியல் தொழிலாளர்களும் இந்த இடத்தை பயன்படுத்துவதாக கூறப்படுகின்றது.

> *"கடற்கரை ஓரத்தில் இருந்து ஐந்து கிலோ மீற்றருக்கு அப்பால் மணல் அகழ்ந்தெடுக்கப்பட இருந்த போதிலும், செலவைக் குறைப்பதற்காக இது ஒரு கிலோ மீற்றராக குறைக்கப்பட்டுள்ளது. கடற்கரையின் இயற்கை தடைகளாக விளங்கும் முருகைக் கற் பாறைகள் இதனால் சேதமடைந்துள்ளன. இது கடற்கரையில் மண் அரிப்புக்கு வழிகோலுகின்றது."* - பாதிக்கப்பட்ட நபர், CKE

பாதிக்கப்பட்ட மக்கள் பல சுற்றாடல் தாக்கங்களையும் இனங்கண்டுள்ளனர். மணல் அகழ்தல், கனரக இயந்திரங்கள் வெளிப்படுத்தும் பலத்த சத்தமும் அவற்றின் புகையால் காற்று மாசுபடுதலும் மண் அரிப்பு காரணமாக பயிர்களுக்கு ஏற்படும் அழிவு, ஈரலிப்பு நிலங்கள் நிரப்பப்படுவதால், வெள்ளம் ஏற்படும் ஆபத்து அதிகரிப்பு, வெள்ள நீர் தேங்கி இருக்கும் நிலை, ஆகியன இவற்றில் அடங்குகின்றன. CKE திட்டதிற்கென பெருமளவில் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டதால், முருகைக் கற்

பாறைகள் சேதமடைந்து இருப்பதுடன், நீர் வாழ் உயிரின சூழலுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சதுப்பு நிலங்கள் நிரப்பப்படுவதால், CKE திட்டம் காரணமாக முத்துராஜவெல வனவிலங்கு சரணாலயம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நீர் நிலைகள் தடுக்கப்படுவதன் காரணமாகவும், நிரப்பப்படுவதன் காரணமாகவும் காடுகள் மற்றும் மரங்கள் வெட்டப்படுவதாலும், சுற்றாடல் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

> *"சுற்றாடல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கிணறுகள் வற்றியுள்ளன. முழுப் பிரதேசமும் பாலைவனமாக காட்சி தருகின்றது"* - பாதிக்கப்பட்ட நபர் STDP

உயர்மட்ட கலந்துரையாடல்களின் போது, சுற்றாடல் அம்சத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை. அது தொடர்பான பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணப்படவும் இல்லை. சில சந்தர்ப்பங்களில் இவை கவனிக்கப்படாததுடன், அந்த நடவடிக்கை நியாயப்படுத்தப்பட்டுள்ளது.

> *"மிருகங்களின் வதிவிடங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவை மனிதர்களின் நடமாட்டத்திற்கும் அவற்றின் செயற்பாடுகளுக்கும் பழக்கமானவையாகும். மாற்றத்திற்குப் பழக்கப்படுத்திக் கொள்ளக்கூடிய ஆற்றல் இவற்றுக்கு உண்டு"* SEIA - STDP ஜுலை 1999

ஜீவனோபாய ரீதியான தாக்கங்கள் இடம்பெயர்வுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல. நேரடியற்ற விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள், இடம்பெயராதவர்களாக உள்ள போதிலும், அவர்கள் வேலைவாய்ப்பு, பயிர்ச்செய்கையை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு ஆகியவற்றை இழந்துள்ளனர். அத்துடன், பெரிய அளவிலான தென்னக் காணிகளும் இறப்பர் தோட்டங்களும் சுவீகரிக்கப்படுவதாலும், துண்டாடப்படுவதாலும் அவற்றின் உரிமையாளர்களை விட தொழிலாளர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள் என்று கூறப்படுகின்றது. ஏனென்றால், அவர்கள் ஜீவனோபாயத்தையும் வருமானத்தையும் வீடுகளையும் இழக்க நேரிடுகின்றது.

> *"நல்ல செழிப்பான வயல் காணிகளும் தென்னந் தோட்டங்களும் சுவீகரிக்கப்பட்டுள்ளன. ஒரு வீ குருனியவுக்கான நஷ்டஈடு (10 பேர்ச்சர்ஸ் நெற் செய்கைக் காணி) 1,200 ரூபாவாகும். இந்தத் தொகையை செலுத்தியதுடன், நஷ்டஈட்டுக் கொடுப்பனவு பூர்த்தியடைந்து விடுகிறது. ஆனால், இந்தக் காணியின் இழப்பு நீண்டகாலத்திற்கு உணரப்படும். தொழில் இழக்கும் றப்பர் வெட்டும் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு நஷ்டஈடு எதுவும் வழங்கப்படுவதில்லை."* - பாதிக்கப்பட்ட நபர் STDP

இந்த ஆய்வு வறுமையை வெளியான கண்ணோட்டத்தில் இருந்து பார்க்காமல், உள்ளுணர்வு ரீதியாக நோக்குகின்றது. மக்களின் விருப்புகள், புரிந்துணர்வு ஆகியவற்றுக்கு இந்த அணுகுமுறையில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. வறுமையை பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணோட்டத்தில் இருந்து வரையறை செய்யும் அதேவேளையில் பல்தரப்பு அம்சங்கள் பற்றியும் இதில் கவனம் செலுத்தப்படுகின்றது. வறுமை மட்ட அதிகரிப்பு, பாவனை அம்சங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. வாய்ப்புகளில் ஏற்பட்டுள்ள மாற்றம், உற்பத்தி வளங்கள் மீதான கட்டுப்பாடு பெறுமதி மிக்க உற்பத்தித் தளங்களை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போதல், கிராமத்தவர்களும் அயலவர்களும் கூட்டாக உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் வாய்ப்பு இல்லாமல் போதல் ஆகியவற்றுடன் பண்டமாற்று முறை, சிறு கடன் உதவி போன்ற வசதிகளையும் பாதிக்கப்பட்டவர்கள் இழக்கின்றனர். சமூகங்களும் அதனோடு இணைந்த வலையமைப்புகளும் துண்டாடப்படுவதன் விளைவாக ஒதுக்கப்படும் நிலையும் நடமாடும் வாய்ப்பு குறைவும், ஆற்றல் குறைவும் ஏற்படுகின்றன. ஏற்கனவே இருந்த வறுமை மோசமடைவதால், ஏற்படும் தாக்கத்தை விட, புதிதாக உருவாகும் வறுமை பெரிதும் மோசமானதாகும்.

> *"நாம் ஏழைகளல்ல, எம்மிடம் செழிப்பான காணிகள் உள்ளன. இருப்பதற்கு இடம் ஒன்று உள்ளது. இவை பரம்பரை பரம்பரையாக எமக்கு கிடைத்தவையாகும். நாம் இவை யாவற்றையும் இழந்தால், மிகவும் வறியவர்களாகி விடுவோம்"* (அந்த துப்பத்) பாதிக்கப்பட்ட நபர் - STDP

காணி, வீடு, பொதுச் சொத்து, சேவைகள், சமூக வசதிகள் ஆகியவற்றின் இழப்பு நீண்டகால அடிப்படையில் வறுமை அதிகரிப்புக்கு வித்திடும். பொருளாதாரப் பலம், சொத்துக்கள் ஆகியன இழக்கப்படுவதால், மக்களின் அபிவிருத்தி பாதிக்கபப்டுகின்றது. அவர்கள் பின்னோக்கித் தள்ளப்படுகின்றார்கள். கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களாக

பணியாற்றி வந்தவர்கள் உத்தியோகபூர்வ தொழில் சந்தையில் வாய்ப்பு பெறுவதற்கு போதிய பயிற்சி இல்லாத காரணத்தினால், மேலும் இழப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதை உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

நிதி முகாமைத்துவ ஆற்றல் குறைவு, ஆபத்தை குறைப்பதற்கான மூலோபாயங்கள் இல்லாமை ஆகிய காரணங்களால் சொத்துக்களில் தாக்கம் ஏற்படுகின்றது. நஷ்டஈடாக கிடைக்கும் பணத்தை முதலீடு செய்ய தவறுவோர் நீண்டகால அடிப்படையில் வறுமையால் பாதிக்கப்படுவார்கள். பாதிக்கப்பட்ட மக்களில் கணிசமானோருக்கு பெருந்தொகை பணத்தை எவ்விதம் நல்ல முறையில் பயன்படுத்துவது என்பது தெரியாது. வங்கிகள் மற்றும் ஏனைய நிதிச் சேவை வசதிகள் பற்றி அவர்களுக்கு போதியளவு அறிவில்லை. இதன் காரணமாக, நிதி உறுதிப்பாடு இன்மை, சேமிப்பு இழப்பு, வீட்டு வாழ்க்கை நிலைமையில் பெரும் பின்னடைவு, போன்ற இரண்டாவது நிலைத் தாக்கங்களை அவர்கள் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

இடம்பெயர்வு காரணமாக உருவான நிலைமைகள் கடுகதி நெடுஞ்சாலைகளின் குறிக்கோள்களுக்கு மாறானதாக இருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். அதிகாரம், மனித உரிமை மீறல், உள்ளூர் சுய ஆதிக்கம் மற்றும் கட்டுப்பாட்டில் சமபாடின்மை போன்ற இதற்கு முன்னர் இல்லாத பிரச்சினைகள் தோன்றி இருப்பதாக சிலர் கூறுகின்றனர். வறிய மக்களே எப்பொழுதும் தீர்மானம் எடுக்கும் தளங்கள் மற்றும் நபர்கள் பற்றி அறியாதவர்களாகவும் அவர்களுடன் தொடர்பு இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். உத்தியோகத்தர்களிடம் இருந்து அடிக்கடி தீர்வுகளை அல்லது மாற்று வழிகளை எதிர்பார்த்து மனுச் செய்து, ஏமாந்து போகும் மக்களின் அவல நிலையில் இருந்து இது வெளிப்படையாகின்றது. தாங்கள் பாதிக்கப்படும் ஆபத்தும், சமத்துவம் இன்மையும், புறக்கணிக்கப்படும் நிலையும் அதிகரித்து இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். சிலர் பெரிதும் குரலெழுப்பி தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் அதேவேளையில் வேறுசிலர் இதில் இருந்து விலகி நிற்பதையும் காணக்கூடியதாக உள்ளது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

இதற்கு மாறாக, சட்டவிரோதமாக குடியேறியவர்களும் காணிகளில் ஊடுருவல் செய்தவர்களும் காணிகளை சொந்தமாக்கிக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இவ்வாறான குடியேற்றக்காரர்களில் 90 வீதமானோர் இழப்பீட்டுத் தொகை குறித்து பெரிதும் திருப்தி கொண்டுள்ளனர். அவர்களுக்கு இடம்பெயர்தல் என்ற பேச்சுக்கு இடமில்லை. ஆனால், எதிர்பாராத விதமான அவர்களுக்கு பெருந்தொகை பணம் கிடைத்துள்ளது. வதிவிடம் அமையும் இடத்திற்கும் நிதி நஷ்டஈட்டுக்குப் பதிலாக வருமானத்திற்கும் முன்னுரிமை கொடுப்பவர்கள் இந்தக் குழுவினர் இடம்பெயர்வதற்கும் மீள் குடியமர்த்தப்படுவதற்கும் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

> *"நாட்டின் அபிவிருத்திக்கு கடுகதி நெடுஞ்சாலைகள் அவசியமாகின்றன. ஆனால், இது நல்ல முறையில் திட்டமிடப்படல் வேண்டும்"* - பாதிக்கப்பட்ட நபர் STDP

அபிவிருத்திக்கு கடுகதி நெடுஞ்சாலைகள் அவசியமானவை என்பதை சிலர் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை இந்தக் கூற்று புலப்படுத்துகின்றது. காணிகளின் பெறுமதி அதிகரிப்பு, நிர்மாணத் தளங்களின் வேலைவாய்ப்பு அதிகரிப்பு, நஷ்டஈடாக பெருந்தொகை பணம் கிடைத்தல் ஆகியன சில சாதகமான விளைவுகள் என இனங்காணப்பட்டுள்ளன. உள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பலர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கவோ நன்மைகள் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கவோ முடியாதென குறிப்பிட்டுள்ளனர். இரு திட்டங்களும் இன்னமும் அமுல் செய்யப்படும் நிலையில் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

சாதகமான தாக்கங்கள் என அதிகாரிகளால் இனங்காணப்பட்டுள்ள விடயங்களில் திறமையான போக்குவரத்து காலி - கொழும்பு துறைமுகங்களுக்கு துரிதமாகவும், இலகுவாகவும் சென்று வரும் வாய்ப்பு, வேலைவாய்ப்புக்கள் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தி ஆகியன அடங்கியுள்ளன. STDP திட்டத்தின் மூலம் நாட்டின் தென் பிராந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கவும் உத்தேசித்திருப்பது, திட்டத்தின் உப நோக்கங்களாகும். சுற்றுலா வளர்ச்சி பெறும் என்றும் வர்த்தக வாய்ப்புக்கள் விரிவடையும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். சட்டவிரோத ஊடுருவல்காரர்களே காணிச் சுவீகரிப்பினால் அதிக நன்மை அடைந்துள்ளனர் என்றும் இழப்பீடு வழங்குவதில் அவர்களுக்கு பாரபட்சம் காட்டப்படவில்லை என்றும் இரண்டு திட்டங்களையும் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அமுலாக்கத்தில் உள்ள வரையறைகள்

### திட்ட நடைமுறைகள்

STDP தொடர்பான சுற்றாடல் தாக்க மதிப்பீடு 1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள பல அம்சங்கள் காலங் கடந்தவையாக அல்லது பெரும் மாற்றங்களுக்கு உட்பட்டவையாக உள்ளன. சுற்றாடல் தாக்க மதிப்பீடு ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டு இருப்பதால், அது பற்றியே கேள்வி எழுந்துள்ளது. (EIA ஆய்வுப் பகுதி ஆரம்ப பாதை வரைவின் ஒரு கிலோ மீற்றர் பிரதேசமாகும். கூட்டு வரைவின் மேற்குப் பகுதியில் மேலும் ஒரு கிலோ மீற்றர் சேர்க்கப்பட்டுள்ளது" - RIP, STDP ஒக்டோபர் 2002) நிர்மாணத்திற்கான அடித்தளமான இறுதி வரைபு EIA ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

"128 கிலோ மீற்றர் நீளமான கூட்டு வரைவில் மூன்று கிலோ மீற்றர் பிரதேசத்திற்குள் 50 வீதமான வீடுகள் தொடர்பான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு SIA அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான 1.8.1 RIP, STDP கூறுகின்றது. இந்த நடவடிக்கை ஒரு சமூக பொருளாதார மதிப்பீடே ஒழிய, சமூக தாக்க மதிப்பீடு அல்ல. இதன் பெறுபேறுகளில் இருந்து இது தெளிவாக புலனாகின்றது. RIP யில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் அளித்த பதிலும் இதனைப் புலப்படுத்துகின்றது.

> *"பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில மாணவர்கள் எம்மிடம் வந்து வீட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை, வருமானம் ஆகியன பற்றி பொதுவான கேள்விகளை கேட்டார்கள். அவர்கள் எம்முடன் தந்திரமான முறையில் நடந்து கொண்டார்கள். ஏனென்றால், கடுகதி வீதி ஒன்று பற்றி அவர்கள் எதுவுமே தெரிவிக்கவில்லை"* - பாதிக்கப்பட்ட நபர், STDP

CKE சம்பந்தப்பட்ட மதிப்பீட்டின் போதும் இதேவிதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

> *"நில அளவை திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் நில அளவை வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். அது வழமையான வீதி நிர்மாண மற்றும் திருத்த வேலை என நாம் நினைத்தோம். இந்தளவு பாரிய அபிவிருத்தித் திட்டம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. நாங்களே தகவல்களை பெற்றக்கொள்ள வேண்டி இருந்தது"* - பாதிக்கப்பட்ட நபர் CKE

தேசிய மற்றும் உப தேசியக் கொள்கை மட்டத்தில் சமூக தாக்க மதிப்பீட்டு அமைப்பு முறை இல்லாமை ஒரு பாரதூரமான பின்னடைவாகும். இதன் தாக்கம் அபிவிருத்தித் திட்டங்களால் பாதிக்கப்பட்டவர்களை மோசமாக பாதிக்கின்றது. சமூக தாக்க மதிப்பீடு பற்றிய கொள்கையாக்கத்திற்கான பின்னணி ஆய்வுகள் சில காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள போதிலும், சுற்றாடல் ஆய்வை பெருமளவிலான முதலீடுகளுக்கு முன்நிபந்தனையாக்கும் சட்டங்களைக் கொண்டுவருவதில் மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தயக்கம் காண்பித்துள்ளன. முக்கிய முதலீட்டு வாய்ப்புக்களை இழக்க நேரிடும் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். இதன் காரணமாக, கடுகதி நெடுஞ்சாலைகள் சம்பந்தப்பட்ட இடம்பெயர்வு மற்றும் மீள் குடியமர்வு விவகாரங்களில் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. கொள்கை மட்டத்தில் சமூக தாக்க மதிப்பீடு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் ஓர் அங்கமாக மாத்திரமே உள்ளது. பரிசீலனையில் உள்ள திட்டங்கள் தொடர்பாக ஆழமான முறையில் சமூக தாக்க மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கான விதிகள் இல்லை என்பதே இதன் பொருளாகும்.

மனிதர்கள் என்ற ரீதியிலும் நாட்டின் பிரசைகள் என்ற வகையிலும் தங்களது உரிமைகள் பற்றி கருத்திற் கொள்ளாது இந்தத் திட்டங்களை தம்மீது திணிக்கப்பட்டிருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் கருதுகின்றனர். தேவைகள், பிரச்சினைகள், சவால்கள் தொடர்பாக விரிவான ஆலோசனை, ஆராய்ச்சி முறையொன்று இல்லாமை ஒரு குறைபாடாகும். இதற்குப் பரிகாரம் காணப்பட வேண்டும். முன்னர் நடைபெற்ற கலந்துரையாடலின் போதும், அதனை அடுத்த கலந்துரையாடலின் போதும் தெரிவிக்கப்பட்டது போல் இந்த இரண்டு திட்டமும் இன்னமும் அமுல் செய்யும் கட்டத்தில் இருப்பதால், அது பற்றிய அறிவு மற்றும் சேவைகள் தொடர்பாக காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்கு இன்னமும் வாய்ப்பு உள்ளது.

இடம்பெயர்வு மீள் குடியமர்வு ஆகிய துறைகளில் சர்வதேச நிதி நிறுவனங்களின் ஈடுபாடும் பங்களிப்பும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன. STDP திட்டத்தின் JBIC பிரிவு நிர்மாண

வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாத அதேவேளையில், திட்டத்தின் தொழில்நுட்ப அம்சங்கள் பற்றியதாகவே ADB யின் ஈடுபாடு அமைந்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ள வழிகாட்டல் நடைமுறைகளுக்கு அமைய செயற்படுவதிலேயே இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான கடனுதவி தங்கியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் வங்கியே அதன் கொள்கைகளுக்கு அமைய செயற்பட தவறியுள்ளது. சமூக தாக்க மதிப்பீடு மற்றும் கலந்தாலோசனை கீழே தெரிவிக்கப்பட்டுள்ளபடி கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

> *"திட்டத்தினால் நன்மையடையும் மக்கள் மற்றும் பாதிக்கப்படும் மக்கள் ஆகியோரை இனங்காண்பதற்கு ஏதுவாக சகல அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகவும் பூர்வாங்க சமூக மதிப்பீடு ஒன்று (ISA) நடத்தப்படுவது அவசியமானதாகும். பல்வேறு உப குழுக்களின் அபிவிருத்தி, அவற்றின் தேவைகள், அவற்றின் தாக்குப்பிடிக்கும் தன்மை ஆகியன குறித்து மதிப்பிடப்பட வேண்டும். திட்டத்தில் சம்பந்தப்பட இருக்கும் நிறுவனங்கள் அவற்றின் ஆற்றல்கள் ஆகியனவும் இனங்காணப்பட வேண்டும். திட்டத்தின் கீழ் பரிகாரம் காணப்பட வேண்டிய முக்கிய சமூக ரீதியான பிரச்சினைகளை (கட்டாய மீள் குடியமர்வு, உள்ளூர் மக்கள், வறுமை ஒழிப்பு, அபிவிருத்தியில் பெண்கள்) பூர்வாங்க சமூக மதிப்பீடு மூலம் இனங்காண வேண்டும்."* - பூர்வாங்க சமூக மதிப்பீடு கட்டாய மீள்குடியமர்வுக் கொள்கை, ADB

STDP திட்டத்திற்கு நன்கொடை வழங்கும் மற்றைய நிறுவனங்களான NDF, SIDA ஆகிய திட்டத்தின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு உதவுகின்றன. இடம்பெயர்வு, மீள்குடியமர்வு ஆகியன இவற்றில் அடங்கவில்லை. CKE திட்டத்தில் இதுவரை சர்வதேச நிதி நிறுவனங்களும் நன்கொடை நிறுவனங்களும் சம்பந்தப்படவில்லை. ADB அதன் சொந்த மதிப்பீட்டின் மூலம்[22] கற்ற பாடங்கள் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் பொதுவாக இந்த வேலைத்திட்டங்களுக்கும் கற்பதற்கான நல்ல தளமாக அமையும்.

கொழும்பு - மாத்தறை நெடுஞ்சாலை திட்டத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் கூட்டு அமைப்பு விடுத்த வேண்டுகோளுக்கு அமைய ADB STDP திட்டம் பற்றி மதிப்பீடு ஒன்றை நடத்தியது. 2005 ஆம் ஆண்டு ஜுன் மாதம் சபைக்கு சமர்ப்பித்த அறிக்கையில், மீள் குடியமர்வு, பொதுமக்கள் கலந்தாலோசனை, சுற்றாடல் பாதுகாப்பு, திட்ட முகாமைத்துவம் தொடர்பான வங்கியின் செயற்பாட்டு நடைமுறைகள் மீறப்பட்டுள்ளன என்பதை மதிப்பீட்டுக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது. இடம்பெயர்ந்தவர்களைப் பாதிக்கும் முக்கிய துறைகள் தொடர்பான நடைமுறைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று குழு சிபார்சு செய்துள்ளது.

திட்டப் பரிசோதனை, கேள்விப்பத்திர மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, நிதி ஒதுக்கீடு ஆகியன தொடர்பாக இதில் சம்பந்தப்பட்டுள்ள நிறுவனங்களில் உயர்மட்டத்தில் ஊழல் நிலவியதாக பாதிக்கப்பட்ட சகல மட்டத்தினரும் அடிக்கடி தெரிவித்து வந்துள்ளனர். RDA அதன் அதிகாரிகளின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படும் ஒரு தன்னிச்சையான ஊழல்மிக்க நிறுவனமாகும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். திட்ட முகாமைத்துவம் தொடர்பான சகல அம்சங்கள் சம்பந்தப்பட்ட மத்திய முகவர் நிறுவனமாக RDA செயற்படுவதால் இந்தச் குற்றச்சாட்டுகள் பற்றி ஆராயப்பட வேண்டும்.

கட்டுப்படுத்துவதற்கான சட்டமும் பொறுப்புக் கூறும் அமைப்பும் இல்லாததன் காரணமாக, இந்த நிலைமை எழுந்துள்ளது. X மாவட்டத்திலுள்ள திருமதி Y என்ற வயோதிப விதவை 10 பேர்ச் நெற் காணிக்கு உரிமையாளராக உள்ளார். ஆனால், உரிமைத்துவத்திற்கான ஆதாரங்கள் அவரிடம் இல்லை. குறிப்பிட்ட பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திரு. Z என்பவர் இந்தப் பெண் இழப்பீடு கோர முடியாது என்று தெரிவித்துள்ளார். தேசிய சுயவிருப்பற்ற மீள் குடியமர்வு கொள்கைத் திட்டத்தின் நான்காவது பிரிவு பின்வருமாறு கூறுகின்றது. "காணிகளுக்கான உறுதிப்பத்திரம் இல்லாத பாதிக்கப்பட்ட நபர்கள் நீதியான முறையிலும் நியாயமான விதத்திலும் நடத்தப்பட வேண்டும்" இவ்விதம் இந்த பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இந்தப் பெண்ணுக்கு இழப்பீடு மறுக்கப்பட்டுள்ளது. கிராமத்தைச் சேர்ந்த இது தொடர்பான செயற்பாட்டாளர் இந்தப் பெண்ணின் பிரச்சினை பற்றி விசாரித்த பொழுது அரசாங்கத்திடம் இருந்து இழப்பீடு கோரப்பட்டு அது

---

22 ADB பொறுப்புக் கூறுவதற்கான கட்டமைப்பு, அமுலாக்க மீளாய்வுக் குழு, ஜுன் மாதம் 2005 ஆம் ஆண்டு இலங்கையின் தென் பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக 2004/1 CRP வேண்டுகோளுக்க அமைய பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கை.

வழங்கப்பட்டிருப்பதாக பதிவாகியுள்ள போதிலும், சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு அது கொடுக்கப்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

முக்கிய பங்குதார நிறுவனங்களில் ஆளணிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாகவும், அதிகாரிகளின் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாகவும் இருப்பது, இந்த வேலைத் திட்டங்களின் பல்வேறு கட்டங்களை பாதிப்பதாக உள்ளது. அரச நிறுவனங்களில் பல உயர் பதவிகள் அரசியல் செல்வாக்கின் பேரில் வழங்கப்படுகின்றன. புதிய அரசாங்கம் பதவிக்கு வரும் சந்தர்ப்பங்களில் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுவதுடன், வேலைத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட முகாமைத்துவ கட்டமைப்புகளிலும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களையும், சேமநலன்களையும் கவனிப்பதற்கு பொறுப்பாக உள்ள அரச நிறுவனங்கள் அவற்றின் கடமைகளைச் செய்ய முற்படும் வேளையில் நிதி மற்றும் பௌதிக வள பற்றாக்குறையால் அவற்றின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுகிறது. பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் இந்த நிலைமை பற்றி விளக்குகின்றார்.

> *“திட்டத்தை அமுல் செய்பவர்களுக்கும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு பொறுப்பானவர்களுக்கும் இடையில் நிபுணத்துவம் மற்றும் மூலவளங்கள் தொடர்பாக ஏற்றத்தாழ்வு நிலவுகின்றது. உதாரணமாக, மாகாண சபையிடம் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் மாத்திரமே இருக்கின்றார். பொறியியலாளர்கள் எவரும் அங்கு இல்லை. ஆனால், திட்டப் பிரிவில் பல பொறியியலாளர்கள் உள்ளனர். மாகாண சபையிடம் இரண்டு உழவு இயந்திரங்கள் மாத்திரமே உள்ளன. திட்டப் பிரிவிடம் 500 உழவு இயந்திரங்கள் உள்ளன”* - பாதிக்கப்பட்ட நபர் CKE

மீள் குடியமர்வு பிரிவுகளில் முக்கிய பதவிகளில் போதியளவு நிபுணர்கள் இல்லாமை, மற்றுமொரு சவாலாகும். RIP, STDP Fig 1 இந்த திட்டத்தின் ஸ்தாபக அட்டவணையை எடுத்துக் காட்டுகின்றது. மூன்றாவது மட்டத்தில் மீள் குடியமர்வு நிபுணர் பதவி ஒன்று இருப்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. இந்தப் பதவி பின்னர் விளம்பரப்படுத்தப்பட்ட போதிலும் வெளிக்கள ஆய்வு நடத்தப்பட்ட வேளையில், இந்த வெற்றிடம் நிரப்பப்பட்டிருக்கவில்லை. இந்தத் திட்டம் 1999[23] ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும், எதிர்பார்த்த கட்டங்களுக்கு அமைய மீள் குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, மீள் குடியமர்வு நடவடிக்கை சுமுகமாகவும், திறமையாகவும் துரிதமாகவும் முன்னேற்றம் அடைவதற்கு இந்த இடைவெளி நிரப்பப்படுவது முக்கியமானதாகும். மீள் குடியமர்வு வசதிகள் போதியளவு இல்லாததன் காரணமாக, இடம்பெயர்ந்த நபர்கள் மீதான சுமைகள் இருமடங்காக அதிகரித்துள்ளன. இவர்கள் மாற்று காணிகளை வாங்கி வீடுகளை நிர்மாணிக்க வேண்டியுள்ளது. பெருமளவு மக்களின் இடம்பெயர்வு சம்பந்தப்பட்ட வேலைத்திட்டம் மீள் குடியமர்வு மற்றும் அது தொடர்பான நடைமுறைகள் சம்பந்தப்பட்ட திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அம்சங்கள் குறித்து முக்கிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். வெளிக்கள மட்ட மீள் குடியமர்வு பிரிவுகளின் முகாமைத்துவமும் மேற்கூறப்பட்ட பகுதிக்குள் வருகின்றன.

இந்தத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட காலம் நீடித்ததன் காரணமாக, சாத்தியவள மதிப்பீடுகள், திட்டமிடல் நடைமுறைகள் ஆகியவற்றில் பெரும்பாலானவை தேவைக்கு அதிகமானவையாக விளங்குகின்றன. உதாரணமாக, STDP யின் RIP 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் என திகதியிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இவை, இந்த முக்கிய வழிகாட்டல் சாதனத்தில் குறிப்பிடப்படவில்லை. திட்டங்கள் தாமதம் அடைவதன் காரணமாக, மதிப்பீடு, சுவீகரிப்பு, நஷ்டஈட்டுக் கொடுப்பனவு ஆகியவற்றிலும் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் வாழ்வதாக எண்ணும் நிலை ஏற்படுகின்றது. சிலர் சுவீகரிப்புப் பற்றி தங்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால், கட்டாயம் வெளியேற வேண்டிய நிலை வரும்வரை தாங்கள் அதே இடத்தில் இருப்பதற்கு தீர்மானித்ததாகவும் தெரிவித்தனர். சிலர் அரைவாசி இடிக்கப்பட்ட வீடுகளில் வசிக்கின்றனர். வேறு சிலர் சுவீகரிக்கப்பட்ட காணிகளில் தொடர்ந்தும் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். மண் குவியல் CKE (பாதிக்கப்பட்ட மக்கள் சுவீகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது) வீதியமைப்புத் திட்டப் பாதையை எடுத்துக்காட்டுகின்றது. இதேவேளையில் நீர்கொழும்பு வாவியின் சில பகுதிகள் தவறுதலாக நிரப்பப்பட்டுள்ளன.

---

[23] 1996 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், அதன் பின்னர், வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன.

**தகவல் வழங்கலும் அறிவு மட்டமும்**

RDA பொது மக்களை அறிவுறுத்துவதற்குப் பொறுப்பாக உள்ளது. இந்தப் பணி மாவட்டச் செயலகங்கள் ஊடாகவும் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர்கள்[24] ஊடாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த அமைப்பு முறை முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட கட்டமைப்பைப் பின்பற்றவில்லை. திட்டப் பிரதசங்களுக்கு மாறுபட்டதாக இது அமைந்துள்ளது. இது, உத்தியோகத்தர்களின் ஆற்றல்களிலும், திட்ட உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஊக்குவிப்பு மட்டத்திலுமே தங்கியுள்ளது. வர்த்தமானி அறிவித்தல்கள் (காணிச் சுவீகரிப்புச் சட்டத்தில் இது ஒரு முன் நிபந்தனையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது) செய்திப் பத்திரிகைகள் போன்ற அச்சு ஊடகம், சுவரொட்டிகள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றின் மூலம் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த இரு திட்டங்களாலும் பாதிக்கப்பட்டவர்கள் தகவல் வசதி தொடர்பாக எதிர்நோக்கப்படும் இரு முக்கிய தடங்கல்களைச் சுட்டிக் காட்டியுள்ளனர். உயர்மட்டக் கலந்துரையாடல்கள் ஆங்கில மொழியில் நடைபெறுவது ஒரு தடங்கலாகும். காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் பொது மக்களின் கருத்துக்களை வரவேற்கும் அறிவித்தல்கள் மூன்று மொழிகளிலும்[25] வெளியிடப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், ஆங்கிலப் பத்திரிகைகளில் மாத்திரம் இந்த அறிவித்தல்கள் வெளியிடப்படுவது மற்றுமொரு தடங்கலாகும். பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பொறுப்பாக மத்திய அமைப்பு எதுவும் இல்லாமை இன்னுமொரு விடயமாகும். அளவை மற்றும் மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் சில பகுதிகளில் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். ஏனைய பகுதிகளில் திட்ட உத்தியோகத்தர்களும் வேறு சில இடங்களில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் இந்தப் பணியை மேற்கொள்கின்றனர்.

சுயவிருப்பற்ற மீள் குடியமர்வு தொடர்பான NIRP, RIP, ADB ஆகியவற்றின் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுமக்களுடன் கலந்தாலோசனை, கூட்டுத் தீர்மானம் எடுத்தல் ஆகிய நடைமுறைகள் அமுல் செய்யப்படவில்லை. இது வெறும் அறிவித்தல் நடைமுறையாக மாத்திரமே உள்ளது. எவ்வாறாயினும், பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த முயற்சி காரணமாக, மாற்றங்களை மேற்கொண்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. CKE வீதி அபிவிருத்தித் திட்டத்தில் நீர்கொழும்பு வாவி மீனவக் குழுவின் தலைவர் குழுவை வழிநடத்தி, வாவி நிரப்பப்படுவதை 1.5 கிலோ மீற்றராக மட்டுப்படுத்துவதற்கு கத்தோலிக்க தேவாலயத்தின் உதவியை பெற்றுக் கொண்டார். முன்னர் 4 கிலோ மீற்றர் பகுதி நிரப்பப்பட இருந்தது. திட்ட வடிவமைப்பு தொடர்பாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சுக்கு விளக்கிக் கூறப்படவோ, கலந்தாலோசிக்கப்படவோ இல்லை என்பதால், CKE திட்டத்தினால் சுமார் மூவாயிரம் மீனவக் குடும்பங்களின் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டதாக 1997 ஆம் ஆண்டின் மதிப்பீடு ஒன்று கூறுகிறது.

அரசாங்க உத்தியோகத்தர்களின் அணுகுமுறை பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அவர்கள் பின்வரும் விதத்தில் அச்சுறுத்தல் விடுத்ததாகக் கூறப்படுகின்றது.

> *"இந்த நஷ்டஈட்டுத் தொகையை நீங்கள் ஏற்காவிட்டால், அது கொழும்புக்கு அனுப்பப்படும். அதனைக் கோருவதற்கு நீங்கள் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும்"* - பாதிக்கப்பட்ட நபர் CKE.

> *"மாத்தறை கடுகதி வீதி மக்களை விடமுக்கியமானது என்று X என்னும் பெயருடைய அதிகாரி தெரிவித்தார்."* - பாதிக்கப்பட்ட நபர் - STDP

1996 ஆம் ஆண்டு தமது காணிகள் அளக்கப்பட்ட வேளையிலேயே இத்திட்டத்திற்கென காணிகள் சுவீகரிக்கப்பட இருப்பது பற்றி தாங்கள் அறிந்து கொண்டதாக CKE திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். இதன் பின்னர் RDA காணி சுவீகரிப்பு பற்றி அவர்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவித்தது. பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளும் முகமாக பொதுக் கூட்டங்கள் எதுவும் நடத்தப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். STDP திட்டத்திற்கு பெருமளவு விளம்பரம் அளிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டம் பாரியது என்பதே இதற்குக்

---

24 GN - கிராம சேவை உத்தியோகத்தர் - நிருவாக உப பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்.

25 அத்தியாயம் 295, பக்.343 உத்தேச சுவீகரிப்பு தொடர்பான பூர்வாங்க விசாரணையும் பிரகடனமும், LLA, மார்ச் 1950

காரணமாகும். பாதிக்கப்பட்ட மக்களும் இத்திட்டம் பற்றி அறிந்திருந்தனர். ஆனால், நில அளவை, காணிச் சுவீகரிப்பு, இழப்பீட்டு நடைமுறைகள் தொடர்பான தகவல் மார்க்கங்கள் பலம்வாய்ந்தவையாக இருக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். சுயவிருப்பற்ற மீள் குடியமர்வு தொடர்பான LAA, RIP, NIRP, ADB ஆகியவற்றின் வழிகாட்டல்களை மீறும் வகையில் இது அமைந்துள்ளது.

“2000 ஆம் ஆண்டு மே மாதம் RDA யின் அப்போதைய காணிகள் பணிப்பாளரான திரு. X இந்தக் கிராமத்திற்கு அறிவித்தார். நான் விவசாய சங்க உத்தியோகத்தராக விளங்கினேன். அந்த வகையில், இந்தக் கடுகதி பாதை இரு குளங்களை (விவசாயிகள் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும்) ஊடறுத்துச் செல்லுமென என்னிடம் தெரிவிக்கப்பட்டது. இது பற்றி விவசாயச் சங்க அங்கத்தவர்களுக்கு விளக்கிக் கூறும்படி என்னிடம் தெரிவிக்கப்பட்டது. நான் இந்தப் பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டேன். அவரையே அதனைச் செய்யும்படி நான் கேட்டுக் கொண்டேன்” - பாதிக்கப்பட்ட நபர் STDP

இந்த இரு திட்டங்களாலும் பாதிக்கப்பட்டவர்களில் குறைந்த வருமானம் பெறுபவர்களும் நடுத்தர வர்க்கத்தினரும் அடங்கியுள்ளனர். CKE திட்டத்தைப் பொறுத்தமட்டில் பெரும்பாலானவர்கள் நாளாந்தம் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களாவர். இவர்கள் தங்களது தொழிலுக்குப் பாரம்பரிய முறைகளையே நம்பியுள்ளனர். STDP திட்டத்தில் பெரும்பாலானவர்கள் விவசாயத் தொழிலாளர்களாகவும், சிறுதோட்ட உரிமையாளர்களாகவும், வீட்டுத்தோட்ட மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களாகவும் உள்ளனர். ஏனையோர் சிறிய அளவிலான சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் சிலர் சம்பளத்திற்கு வேலை செய்பவர்களாவர்.

## இழப்பீடும் மீள் குடியமர்வும்

**இழப்பீடு**

காணி மதிப்பீடு மற்றும் சுவீகரிப்பு அறிவித்தலை அடுத்து நஷ்டஈடு வழங்கப்படுகிறது. இழப்பீடு இரண்டு மட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது. ஒருசாரார் நிதி ரீதியான நஷ்டஈட்டைப் பெறுகின்றனர். வேறு சாராருக்கு காணியும், பணமும் நஷ்டஈடாக வழங்கப்படுகிறது. மின் விநியோகம், நீர் விநியோகம் போன்ற உட்கட்டமைப்பு வசதிக்கு இந்தத் திட்டப் பிரிவுகள் பொறுப்பாக உள்ள அதேவேளையில், நிர்மாண வேலைக்கு பாதிக்கப்பட்ட மக்கள் பொறுப்பாக உள்ளனர். இழப்பீடு தொடர்பான கணிப்பில் வீடுகள், காணிகள், பயிர்ச்செய்கைக் காணிகள் (உத்தேச வருமானம்) மற்றும் ஜீவனோபாய நஷ்டஈடு ஆகியன அடங்கியுள்ளன. உதாரணமாக, CKE திட்டம் காரணமாக பாதிக்கப்பட்ட சில மீனவர்களுக்கு தலா 10,000/- ரூபா வழங்கப்பட்டுள்ளது. STDP திட்டப் பிரிவு பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் ஜீவனோபாயத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைக்கென தற்சமயம் 60 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்தத் திட்டத்தில் பல அரச நிறுவனங்கள் சம்பந்தப்பட்டிருப்பதன் காரணமாக, பாதிக்கப்பட்ட மக்கள் நஷ்டஈட்டைப் பெறுவதற்கு பல நிர்வாக கெடுபிடி நடைமுறைகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. மதிப்பீட்டிலும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவிலும் ஒழுங்கீனங்கள் நிலவுவதாக அடிக்கடி முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதியளவு வெளிப்படையான முறையில் நடந்து கொள்ளாததன் காரணமாகவும், போதியளவு தகவல்கள் கிடைக்காததன் காரணமாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகின்றது. தங்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். ஊழல் மிக்க அமைப்பு முறை காரணமாக, அரச கட்டமைப்புகளில் நம்பிக்கை குறைந்துள்ளது, நில அளவை மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களத்தில் ஊழல் நிலவுவதாக CKE திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். தங்கள் வீடுகள் /காணிகள் இந்தத் திட்டத்திற்கு சுவீகரிக்கப்படாமல் இருப்பதற்காக சிலர் அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கியுள்ளனர்.

மதிப்பீடு தொடர்பாக தன்னிச்சையான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மதிப்பீடு தொடர்பாக மாறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். நஷ்டஈட்டை கணக்கிடுவதில் தெளிவற்ற நிலை காணப்படுவதாகவும் நெற் காணிகள், பயிரிடப்படக்கூடிய காணிகள் வீட்டுத் தோட்டங்கள் போன்ற வருமானம் தரும் சொத்துக்கள் தொடர்பாக இழப்பீட்டு அளவில் வித்தியாசங்கள் காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். CKE திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து வெளியிடுகையில், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் போது பயிர்ச்செய்கை காணிகளில் உள்ள பழ மரங்கள் நஷ்டஈடு வழங்கப்படுதென

வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் இது தொடர்பாக தங்களுக்கு பணம் எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தனர். நெற் காணிகளுக்கான இழப்பீட்டில் நான்கு ஆண்டுகளுக்கான உத்தேச வருமானமும் அடங்கியுள்ளது.

வெவ்வேறு பிரதேசங்களில் நஷ்டஈட்டுத் தொகை மற்றும் கணக்கீடுகள் தொடர்பாக வேறுபாடுகள் காணப்படுகின்றன. உடைமை அமைந்துள்ள இடம் வசதிகளின் தரம் ஆகியவற்றைப் பொறுத்து நஷ்டஈட்டுத் தொகை மாறுபடுகின்றது. உதாரணமாக, வீடுகளின் நிர்மாணம், தளம், கூரை ஆகியவற்றுக்கு ஏற்ப வீடுகள் தரம் பிரிக்கப்படுகின்றன. காணிகளின் நஷ்டஈட்டு விகிதம் தொடர்பாக அரசியல் ரீதியில் சலுகை காணப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்ள் எழுந்துள்ளன. கோமலதெனிய (STDP) பிரதேச வாசிகள் இது தொடர்பாக ஊடகங்களுக்கு அறிக்கைகளை விடுத்துள்ளனர். காணிப் பெறுமதி, மதிப்பீடு ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் இந்த இரு திட்டங்களும் விசேடமானவையாகக் கருதப்பட்டுள்ளன. காணியின் பெறுமதி, மதிப்பீடு ஆகியன தற்போதைய சந்தை விகிதங்களுக்கும் கூடுதலானதாக அமைந்துள்ளன. குறித்த காலத்திற்குள் வெளியேறும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஊக்குவிப்புகளும் (நிதி) வழங்கப்படுகின்றன. இடம்பெயர்ந்து செல்வதற்கான கொடுப்பனவுகளும் சில சந்தர்ப்பங்களில் வழங்கப்படுகின்றன.

இழப்பீடு தொடர்பாக பொது மக்களுக்கு அறிவுறுத்துதல், நஷ்டஈட்டுக்கான நிதி கொடுப்பனவு, காணி ஒதுக்கீடு உட்கட்டமைப்பு வசதி ஆகியவற்றுக்கு திட்ட அலுவலகங்கள் பொறுப்பாக உள்ளன. இந்த நடவடிக்கைகள் மைய அதிகாரத்தைக் கொண்டவையாக மேற்கொள்ளப்படவில்லை. இதனால், ஏற்கனவே சொந்த ரீதியில் இடர்பாடுகளை எதிர்கொண்டு வரும் திட்ட அலுவலகங்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. விழிப்புணர்வை ஏற்படுத்துதல், நிதி கொடுப்பனவு ஆகியன தொடர்பாக இந்த அலுவலகங்கள் பிரதேச செயலகங்களுடன் இணைந்து செயற்பட வேண்டி உள்ளன. காணிகள் தொடர்பான விவகாரங்களில் காணி அமைச்சு, அளவை மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம் ஆகியவற்றுடன் சேர்ந்து செயற்பட வேண்டியுள்ளது. மீள் குடியமர்வு பகுதிகளுக்கான உட்கட்டமைப்புக்கள் தொடர்பாக ஒப்பந்தக்காராக்களுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

> *"10,000 காணித்துண்டுகள் (சுவீகரிக்கப்பட்ட காணி) பற்றி தனித்தனியாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டியுள்ளது. ஒரேயொரு ஆங்கில தட்டெழுத்தாளர் மாத்திரமே உள்ளார். நாம் இவ்வாறான பிர்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது"* - அதிகாரி STDP

**மீள் குடியமர்வு**

CKE திட்டத்தைப் பொறுத்தமட்டத்தில் மீள் குடியமர்வு மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. STDP திட்டத்தைப் பொறுத்தமட்டில் மீள் குடியமர்வு மிகவும் பரந்த அளவில் அமைந்துள்ளது. இதன் மீள் குடியமர்வு[26] நடவடிக்கையில் 90 வீதம் பூர்த்தியடைந்துள்ளது. காணி மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுக்கு RDA பொறுப்பாக உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களில் தெரிவு செய்யப்பட்ட சிலர் நிர்மாண வேலைகளுக்குப் பொறுப்பாக உள்ளனர். ஒவ்வொரு மீள் குடியமர்வு பகுதியிலும் STDP திட்டப் பிரிவு 17 கட்டிட நிர்மாண சங்கங்களை நிறுவியுள்ளது. மீள் குடியமர்வு அமுலாக்கல் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றுக்கான இணைப்பு அமைப்புகளாக செயற்படுவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். போதியளவு நிபுணத்துவ அறிவு, விழிப்புணர்ச்சி ஆகியன இல்லாமை மீள் குடியமர்வு திட்ட அமுலாக்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருப்பதற்கான காரணம் என்று பலர் தெரிவிக்கின்றனர். மீள் குடியமர்வுக்கு பொறுப்பாக உள்ள RDA, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு சம்பந்தப்பட்ட ஒரு நிறுவனமாகும். மீள் குடியமர்வை மேற்பார்வை செய்வதற்குத் தேவையான சமூகவியல் அபிவிருத்தி பற்றிய தொழில்நுட்ப நிபுணத்துவ ஆற்றல் RDA க்குக் கிடையாது.

மீள் குடியமர்வு காரணமாக தங்கள் வாழ்க்கை பல்வேறு மட்டங்களில் பாதிக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட மக்கள் கூறுகின்றனர். பரம்பரை பரம்பரையாக வசித்து வந்த வீடுகளையும், காணிகளையும் இழக்க நேரிடுவது தனிப்பட்ட ரீதியில் மிகவும் கஷ்டமான ஒரு சூழ்நிலையாகும். மாற்று வேலை வாய்ப்புக்களையும் பிள்ளைகளுக்கான பாடசாலைகளையும் தேடவேண்டி இருப்பது மீள் குடியமர்வு தொடர்பாக எதிர்கொள்ளப்படும் ஒரு முக்கிய பிரச்சினையாகும். பெரும்பாலான மீள்

---

[26] திட்ட அலுவலகத்துடன் தொடர்பு - ஜுலை 2005

குடியமர்வு இடங்கள் உட்பிரதேசங்களிலேயே அமைந்துள்ளன. வைத்தியசாலைகள், போக்குவரத்து முறைகள் ஆகியவற்றுக்கு அருகில் வாழ்ந்து பழக்கப்பட்ட மக்கள் உட்கட்டமைப்பு வசதிகள் குறைந்த உள் பிரதேசங்களுக்குச் செல்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர். CKE திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பாக இந்தப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் குடிமக்கள் அதிகம் வாழும் நகர்ப் புறங்களிலேயே பெரும்பாலும் வாழ்வதால், அவர்களுக்கு இது பிரச்சினையாக உள்ளது. போதிய வசதிகள் இல்லாததன் காரணமாக, உள் பிரதேசங்களுக்குச் செல்லத் தாங்கள் தயங்குவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். சமூக மற்றும் சமூகசேவை வலையமைப்புகள் இல்லாமை, சமூக மற்றும் இயற்கை வளங்களுக்கான வாய்ப்புகள் இல்லாமை ஆகியன மீள் குடியமர்வுக்கு இடையூறாக உள்ளன.

RDA யின் மீள் குடியமர்வு அமுலாக்கத் திட்டம் (RIP) மிகவும் உறுதி மிக்க ஒரு திட்டமாகும். உதாரணமாக, அதன் 8.3.8 பிரிவு பின்வருமாறு கூறுகின்றது. "காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு முன்பதாக, பின்வரும் மீள் குடியமர்வு அமைப்புகள் தயார் நிலையில் இருக்கும். இந்த அமைப்புகள் தேவையான ஆளணிகளைக் கொண்டிருக்கும். அத்துடன், பயிற்சி பெற்ற RU வெளிக்கள அலுவலகம் ஒன்றையும் கொண்டிருக்கும். பிரதேச செயலக மட்டத்தில் காணி மீள் குடியமர்வு குழுக்கள் இந்தத் திட்டம் பற்றி முழுமையாக அறிந்திருக்கும். உள்ளூர் ஆலோசனைக் குழுக்கள் நிறுவப்பட்டு இந்தத் திட்டங்கள் பற்றி முழுமையாக அவற்றுக்கு அறிவுறுத்தப்படும்" இந்த அமைப்புகளில் எதுவுமே செயற்படும் நிலையில் வைக்கப்படவில்லை. RIP யில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் பின்பற்றப்படவில்லை. உதாரணமாக, பாதிக்கப்பட்ட மக்கள் குழுக்கள் ரீதியில் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்று பிரிவு 8.3.7 கூறுகின்றது. "திட்ட வாய்ப்பு மற்றும் அட்டவணை பற்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான புதுப்பிக்கப்பட்ட (பதிப்பாசிரியர் வலியுறுத்தல்) தகவல்களை வழங்குவது இதன் குறிக்கோள்களில் ஒன்றாகும். உரிமைத்துவங்கள், நஷ்டஈட்டு விகிதங்கள், வருமான வாய்ப்புகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றிய முழுமையான புதுப்பிக்கப்பட்ட தகவல்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவது இதன் குறிக்கோள்களில் ஒன்றாகும்".

> *"இரண்டு வருடங்களுக்கு முன்னர் மீள் குடியமர்வு உத்தியோகத்தர்கள் ஒழுங்காக வந்தனர். இப்பொழுது அவர்கள் இந்த இடத்திற்கே வருவதில்லை"* - பாதிக்கப்பட்ட நபர் STDP

பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டத்திற்கு RDA பொறுப்பாக உள்ளது. அது பிரதேச செயலகங்களுடன் (DS அலுவலகம்) இணைந்த வகையில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மீள் குடியமர்வு சம்பந்தப்பட்ட விடயம் திட்ட அலுவலகங்களின் பொறுப்பாகும். DS அலுவலகம் இழப்பீட்டுக் கொடுப்பனவுக்குப் பொறுப்பாக உள்ளது. DS அலுவலகத்திலுள்ள ஊழியர்களுக்கு (பேட்டி) இந்தத் திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றிய அறிவு மிகவும் குறைவாகவே உள்ளது. அவர்கள் தங்களை கொடுப்பனவுக்கான ஒரு விநியோக கட்டமைப்பாகவே கருதுகின்றனர்.

இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள நிறுவன ஊழியர்களின் ஆற்றல் குறைபாடுகள் பற்றி முதலாவது மட்ட முக்கிய தகவல் வழங்குநர்கள், சமூகக்குழுத் தலைவர்கள் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். மீள் குடியமர்வுக்கான வசதிகள் பற்றாக்குறையாக இருப்பதால், இடம்பெயர்ந்தவர்களின் கஷ்டங்கள் இருமடங்காக அதிகரித்துள்ளன. அவர்கள் மாற்றுக் காணிகளை கொள்வனவு செய்து வீடுகளை கட்ட வேண்டியுள்ளது. பெருமளவு குடிமக்களின் இடம்பெயர்வுடன் சம்பந்தப்பட்ட இந்தத் திட்டங்களில், திட்டமிடல், அமுலாக்கல் தொடர்பாக குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்படுவது முக்கியமானதாகும். மீள் குடியமர்வு தொடர்பான வெளிக்கள மட்ட முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்கள் அடிக்கடி மாற்றப்படுவதால், செயற்பாட்டில் போதியளவு தொடர்ச்சியான நிலை காணப்படுவதில்லை. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக தொடர்ச்சியான அறிவும், தொடர்ச்சியான விழிப்புணர்வும் இல்லாமல் போய்விடுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுடன் பணியாற்றுவதிலும் மீள் குடியமர்வு நடைமுறைகளை அமுல் செய்வதிலும் சம்பந்தப்பட்ட முக்கிய நிறுவன ஊழியர்களிடம் போதிய ஆற்றல் இல்லாமை தொடர்ச்சியாக இருந்து வரும் ஒரு இடர்பாடாகும். தேவைகளை மதிப்பீடு செய்வதற்கும் தேவையான பரிகாரம் காண்பதற்கும் ஒருங்கமைக்கப்பட்ட கட்டமைப்புகள் போதியளவு இல்லாமை, மீள் குடியமர்வு நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இந்த இரண்டு திட்டங்களுக்குமான மீள் குடியமர்வு மற்றும் இழப்பீடு தொடர்பாக நிதியை வழங்கும் அமைப்பாக இலங்கை அரசாங்கம் விளங்குகின்றது. இதன் காரணமாக அரசாங்கத்தின் மீது பெரும் பளு சுமத்தப்படுகிறது. காலக்கெடு விஸ்தரிப்பு காரணமாக இந்த இரு திட்டங்கள் சம்பந்தப்பட்ட சுமைகளும் இரு மடங்காக அதிகரித்துள்ளன. அரசாங்கம் எதிர்நோக்கும் நிதிக் கஷ்டங்கள் காரணமாக, இரு திட்டங்களுக்குமான நிதி ஒதுக்கீடு குறைந்திருப்பதாக STDP அதிகாரிகள் கூறுகின்றனர்.

> *"இது அரசாங்கத்திற்கு பெரும் சுமையாகும். நஷ்டஈட்டுத் தொகை அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. ஆனால், இதனை யார் வரையறுப்பது? ஏற்கனவே பல தடவை மறுசீரமைக்கப்பட்டுள்ளன"*

இரண்டு திட்டங்களுக்குமான மதிப்பீடுகள் வழமையான வீதங்களை விட அதிகமானதாக உள்ளது. இதற்கு நிதி வழங்கும் பொறுப்பு முற்றிலும் அரசாங்கத்தை சார்ந்ததாக இருப்பதால் அரசாங்கமே இதற்கு முற்றிலும் பொறுப்பாக இருக்க வேண்டியுள்ளது. ஒரு வகையில், இதன் காரணமாக, திட்டத்தில் பங்குகொள்ளும் ஒரு பங்குதாரர் அளவுக்கு அதிகமான சுமையை சுமக்க நேரிடுகின்றது. அதேவேளையில் தன்னிச்சையாக அமுல் செய்வதற்கும் தீர்மானம் எடுப்பதற்கும் இது இடமளிக்கின்றது.

வெளிக்கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட வேளையில் CKE திட்டப் பிரிவு மீள் குடியமர்வு தொடர்பாக மிகச் சிறிய அளவு பணிகளையே பூர்த்தி செய்திருந்தது. பெரிய மட்டத்தில் மீள் குடியமர்வுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், திட்ட அமுலாக்கத்தின் இரண்டாவது நிலை மற்றும் மையப்படுத்தப்பட்ட மட்டங்களில் இந்தத் திட்டங்கள் பற்றி அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. STDP திட்டத்தைப் பொறுத்தமட்டில் 90 வீதமான மீள் குடியமர்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. வருமான வாய்ப்பு, ஜீவனோபாய பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் இது சாத்தியமாகியுள்ளது.

## எதிர்கால வழி

### எல்லா வீதிகளும் எங்கே செல்கின்றன?

CKE திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும் முகமாக அரசாங்க - தனியார் பங்காளித்துவத் திட்டம் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. நிர்மாண வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ள போதிலும் காணிச் சுவீகரிப்பு, நஷ்டஈட்டுக் கொடுப்பனவு ஆகியன தொடர்கின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் செய்துள்ள பல முறைப்பாடுகள் காரணமாகவும், STDP யின் முகாமைத்துவத்தை அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டுமென பொது மக்கள் வற்புறுத்தி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதன் காரணமாகவும், STDP மற்றும் அது சார்ந்த வேலைத்திட்டங்களின் அமுலாக்கம் மீளாய்வு செய்யப்படுகின்றது. இந்தத் திட்டப் பிரிவு, மீள் குடியமர்வுக்கான புதிய திட்டங்களை[27] வெளியிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்றுக் காணிகளையும், நிதிக் கொடுப்பனவையும் வழங்குவதுடன், வேறு சேவைகளையும் வழங்குவதற்கு ஏதுவாக அதன் செயற்பாட்டு அதிகாரத்தை விஸ்தரிக்கவும் இந்தத் திட்டப் பிரிவு உத்தேசித்துள்ளது. உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வருமான வாய்ப்புக்கான உதவி ஆகியன இத்திட்டங்களில் உள்ளடக்கப்படவுள்ளன. கடுகதி வீதி அமைப்புத் திட்டங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டுத் தொகை மீளாய்வுகளுக்கு அமைச்சரவை 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அங்கீகாரம் வழங்கியது.

இந்த இரு திட்டங்களும் இன்னமும் செயற்படுத்தப்பட்டு வருவதால், சேவைகளில் உள்ள இடைவெளியை இனங்கண்டு தகவல் வழங்கல், நஷ்டஈட்டுக் கொடுப்பனவு மீள் குடியமர்வு தொடர்பான அமுலாக்கம் பற்றி மீளாய்வு செய்வதற்கு சந்தர்ப்பம் உள்ளது. திட்ட அமுலாக்கலில் உள்ள இடைவெளியையும் வரம்புகளையும் இனங்கண்டுள்ள STDP திட்டப் பிரிவு இதற்கு பரிகாரம் காண்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சாரதி பயிற்சி, ஒட்டுத் தொழில், கணனி, வீடுகளுக்கான மின்சார வயரிங், உருக்குத் தொழில், ஆடைத் தயாரிப்பு போன்ற துறைகளில் தொழில் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவது இந்த வகையில் ஒரு முன்னேற்றகரமான

---

27 திட்ட அலுவலகத்துடனான தொடர்பு - நவம்பர் 2004

நடவடிக்கையாகும். STDP பிரிவு இந்தப் பயிற்சி தொடர்பாக செய்திப் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் சிறந்த முறையில் சேவையாற்றும் நோக்கத்துடன் STDP சில திட்ட அம்சங்களை மறுசீரமைப்பதிலும் ஈடுபட்டுள்ளது. சுற்றாடல் மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பூர்வாங்க நடவடிக்கையாக இரு சுற்றாடல் உத்தியோகத்தர்களும் இரு சமூக தாக்க கண்காணிப்பு உத்தியோகத்தர்களும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

மாறி மாறி பதவிக்கு வரும் அரசாங்கங்கள் பல்வேறு பெயர்களில் வீதி அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்கின்றன. ஐந்து புதிய கடுகதி நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை அபிவிருத்தி செய்தல் இதில் அடங்கியுள்ளது. போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், பயண நேரத்தைக் குறைத்தல், வர்த்தகம் வியாபாரம் ஆகியவற்றுக்கு மிகவும் முக்கியமான போக்குவரத்துக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி வர்த்தகம் ஆகியவற்றுக்கு உதவியாக போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், ஏற்கனவே உள்ள வீதி வலையமைப்பை புனரமைத்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம், கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி நெடுஞ்சாலை, கொழும்பு கண்டி கடுகதி நெடுஞ்சாலை, கட்டுநாயக்க - பாதெனிய - அனுராதபுர கடுகதி நெடுஞ்சாலை, வெளிச்சுற்று நெடுஞ்சாலை ஆகியனவே ஐந்து கடுகதி நெடுஞ்சாலைகளாகும். சகல கடுகதி நெடுஞ்சாலைகளும் வெளிச் சுற்று நெடுஞ்சாலையுடன் இணைந்திருக்கும். இவை, ஒரு மையமாகச் செயற்பட்டு கொழும்புக்கான மாற்றுப் பாதையை வழங்கும். STDP, CKE ஆகிய திட்டங்களின் நிர்மாண வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. கொழும்பு - கண்டி கடுகதி நெடுஞ்சாலை சம்பந்தப்பட்ட சாத்தியவள ஆய்வு பூர்த்தியடைந்துள்ளது. தென் பகுதி நெடுஞ்சாலையை ஹம்பாந்தோட்டை வரை விஸ்தரித்தல், தென்பகுதியில் உட்புற வீதி ஒன்றை அமைத்தல், கொழும்பு - திருகோணமலை கடுகதி நெடுஞ்சாலை ஆகியன சம்பந்தப்பட்ட வேலைகள் தற்சமயம் ஆரம்ப நிலையில் உள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு CKE, STDP ஆகியன திட்ட அமுலாக்கம் சம்பந்தப்பட்ட சகல அம்சங்களையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு முன்னோடித் திட்டங்களாக விளங்க முடியும். இந்த அனுபவம் எதிர்காலத் திட்டங்களுக்கான ஒரு மைய நிறுவனமாக விளங்க இருக்கும் RDA க்கும் உதவியாக இருக்கும். இந்த இரு திட்டங்களின் அமுலாக்கல் மூலம் அடையாளம் காணுதல், ஆய்வு ஆகியன தொடர்பாக கற்ற பாடங்கள் பொதுமக்கள் கலந்துரையாடல், கலந்தாலோசனை, சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல், காணிச் சுவீகரிப்பு பங்காளி நிறுவனங்களின் கட்டமைப்பை மறுசீரமைத்தல், மீள் குடியமர்வு, மாற்று ஜீவனோபாயம் போன்றன தொடர்பான பிரச்சினைகளுக்கான பரிகாரங்களை அமுல் செய்தல் ஆகியன சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு முக்கியமானதாக அமையும்.

**சிபார்சுகள்**

தற்சமயம் பிரிவினைவாத போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட இடம்பெயர்வு, மீள் குடியமர்வு ஆகியவற்றில் அறிவும், நிபுணத்துவ ஆற்றலும் மிக்க முக்கிய அமைப்பு ஒன்று உள்ளது. தற்போதுள்ள நிபுணத்துவத்தையும், கட்டமைப்புகளையும் பயன்படுத்துதல் அதாவது, நிவாரண, புனர்நிர்மாண, புனர்வாழ்வு அமைச்சின் நிபுணத்துவமும் ஆற்றலும். அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு சம்பந்தப்பட்ட மட்டில் இந்த அனுபவங்களை மேலும் ஆராய்ந்து பயன்படுத்திக் கொள்ளல் மிகவும் தேவையான ஒரு செயற்பாடாகும். அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு புனர்நிர்மாணத் திட்டங்களில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் சுய விருப்பமின்றி இடம்பெயர்பவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சிறந்த முறையில் விளங்கிக்கொண்டு இந்தத்துறை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கட்டமைப்புகளையும் முறைகளையும் மறுசீரமைப்பதற்கு இந்த அறிவு பகிர்வு நடவடிக்கை உதவும். இடம்பெயர்வதற்கான காரணம் எதுவாக இருந்தாலும், இடம்பெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஒரே மாதிரியான தன்மையுடையனவாக விளங்குகின்றன. உதாரணமாக, வீடுகள், காணிகள், ஜீவனோபாயம், சமூக மூலதனம் ஆகியவற்றின் இழப்பு.

மீள் குடியமர்வு, நஷ்டஈடு ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கான மைய அமைப்பொன்றை நியமிப்பதன் மூலம் மையப்படுத்தப்பட்ட சேவையை வழங்குவது மதிப்பீடு, சுவீகரிப்பு, நஷ்டஈடு சம்பந்தப்பட்ட நடைமுறைகளில் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை ஒருங்கமைப்பதற்கும்

உதவும். பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான திட்டங்களை வெற்றிகரமாக அமுல் செய்வதற்கும் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் பங்காளி நிறுவனங்களில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கட்டமைப்பை உருவாக்குவதும், கலந்தாலோசிப்பதும், ஊழியர்களின் ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதும் முக்கியமானதாகும். சகல மட்டங்களிலும் சர்வதேச ரீதியான வெளிப்படைத்தன்மை காணப்படுவதற்கு நில அளவை, நஷ்ஈட்டு அளவு, மீள்குடியமர்வு, துணை ஒத்துழைப்புச் சேவைகள் போன்ற சகல நடைமுறைகள் தொடர்பாகவும் கிரமமான நல்ல தகவல்களை உள்ளடக்கிய பொதுமக்கள் விழிப்புணர்வுக் கட்டமைப்பு ஒன்று இருப்பது முக்கியமானதாகும். தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்பு போதியளவு இல்லாததன் காரணமாக, பிழையான தகவல்கள் வழங்கப்படுவதுடன், நம்பகமற்ற வட்டாரங்களில் இருந்து தகவல்கள் பெறப்படுகின்றன. அத்துடன், இது தொடர்பாக சந்தேகம் ஏற்படும் நிலையும் உருவாகின்றது.

நிதி நஷ்டஈட்டுக்கு அப்பால், பயிற்சி, ஜீவனோபாயத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான நிதியுதவிகள் போன்ற உதவிகளையும் வழங்கும் வகையில், நஷ்டஈட்டு அதிகார வரம்பை விஸ்தரித்தல் மீள் குடியமர்வுக்கும் அப்பாற்பட்டு போக்குவரத்து, சுகாதார சேவைகள் போன்ற விஸ்தரிப்புச் சேவைகளை உள்ளடக்கும் விரிவான மீள் குடியமர்வுத் திட்டம், காணி சுவீகரிப்பு, இடம்பெயர்வு, மீளக் குடியமர்வு ஆகியவற்றினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களை நீக்குவதற்கு மிகவும் முக்கியமானதாகும். நஷ்டஈட்டுக்கு (நிதி) மேலதிகமாக பொதுவான பாதுகாப்பு வலையமைப்பை அறிமுகப்படுத்துவது மீள் குடியமர்த்தப்பட்டவர்கள் வறுமையடையும் ஆபத்தை சமாளிப்பதற்கு ஒரு முக்கிய நடவடிக்கையாக அமையும். இந்த வகையான செயற்பாட்டு வடிவமைப்பு, அமுலாக்கம், கண்காணிப்பு போன்ற பிரச்சினைகள் தொடர்பான வினாக்களுக்கு பரிகாரம் காணக்கூடிய உள்ளகச் செயற்பாட்டை கொண்டிருக்கும். அரசாங்க மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரலில் இவ்வாறான சாதனைகளுக்கு இடமிருக்க மாட்டாது.

போதிய கலந்தாலோசனை இன்மை, தகவல் மற்றும் தொடர்புத்துறையில் சீர்குலைவு ஆகியன பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று இந்த ஆய்வு கூறுகின்றது. உலகளாவிய ரீதியில் திட்டங்கள் தோல்வியடைவதற்கு தகவல் பகிர்வு கட்டமைப்பு செயலிழத்தல் ஒரு மூலகாரணமாக உள்ளது. தொடர்பு முறைகளிலும் தீர்மானம் எடுப்பதிலுமுள்ள பலவீனம், ஆற்றல் இன்மை, நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பில் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியன காரணங்களால் உள்ளூர் அதிகாரிகள் அபிவிருத்திச் செயற்பாட்டு நடவடிக்கைகளில் கணிசமான அளவு தங்கள் சொந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும் நிலை ஏற்படுகின்றது. பொதுமக்களின் வன்முறை எதிர்ப்பு, பதற்றம், கலவரங்கள் ஆகியவற்றைத் தடுக்கும் முகமாக வெளிப்படைத் தன்மையை பேணுவதை விடுத்து, தகவல்களை வழங்காமல் விடும் நிலைப்பாட்டை நிறுவனங்களின் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் அடிக்கடி நியாயப்படுத்துகின்றனர். ஆனால், இது ஏமாற்றும் நடவடிக்கையாக இருப்பதுடன், எதிர்மாறான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. பாதிப்பு, வறுமை ஆகியவற்றுக்குப் பரிகாரம் காணும் முகமாக மேலும் சமூக ரீதியில் பொறுப்புமிக்க திட்டமிட்ட இடம்பெயர்வுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. தற்போதைய ஆய்வின் போது கிடைத்த ஆதாரங்கள் இதனை வலியுறுத்துகின்றன.

தெளிவான தொடர்பு முறையை நிறுவுவது அவசியமான ஒன்றாகும். குறைபாடுகளுக்கு பரிகாரம் காண்பதற்கு இலகுவாகவும், உடனடியாக பலனளிக்கக் கூடியதுமான நடைமுறைகளை பாதிக்கப்பட்ட மக்கள் அறிந்து கொள்வதற்கு இது அவசியமாகின்றது. போதிய தகவல் இன்மை, பிழையான தகவல்கள் ஆகியன, தப்பபிப்பிராயங்கள், சந்தேகம், எதிர்ப்பு ஆகியனவற்றுக்கு வழிகோலுவதாக இந்த ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது. எனவே, தகவல் வழங்கலில் முன்னர் நிர்ணயிக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றுவதுடன் அது குறித்த மக்களை தீர்க்கமான முறையில் சென்றடையும் வகையில் அமைந்திருக்க வேண்டும். தகவலுக்கான வாய்ப்பும் வசதியும் இரண்டு மட்டங்களில் அடிப்படையானதாக விளங்குகின்றது. முதலாவது மட்டம் காணி மதிப்பீடு மற்றும் சுவீகரிப்புக் கட்டமாகும். இரண்டாவது மட்டம் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு, மீள் குடியமர்வு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. தகவல் வழங்கல் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. பங்குபற்றுபவர்களின் தேவைகளை மதிப்பிடுவதற்கும், அவர்களுடன் கலந்தாலோசிப்பதற்கும் இது உதவுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய தகவல்கள் கிடைப்பதற்கும் இது வகை செய்கின்றது.

திட்டங்களின் முன்னேற்றத்திற்கு தற்போதைய சில பங்காளி நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படுவது ஒரு தேவையாகும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தெளிவான ஆணை, ஸ்தாபக ஆற்றல், தொழில்நுட்ப ஆற்றல் ஆகியவற்றைக் கொண்டிராத பலவீனமான ஈடுபாடு இல்லாத,

அமுலாக்க நிறுவனங்கள் சேவைகள் மட்டுப்படுத்தப்படுவதற்குக் காரணமாக அமைகின்றன என்று பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். அத்துடன், திட்டங்களைக் கண்காணித்து மீளாய்வு செய்வதற்கான அதிகாரமுள்ள சுதந்திர அமைப்பு ஒன்று உருவாக்கப்படுதல் அவசியமானதாகும். அரசாங்கம், அதன் நிறுவனங்கள், ADB ஆகியனவே குறைந்தபட்ச கட்டமைப்புகளை மீறும் வகையில் செயற்படுவதாக தெரிவிக்கப்படும் சூழ்நிலையில் இவ்வாறான அமைப்பொன்று அவசியமாகின்றது. முக்கிய பதவி வகிக்கும் நிறுவனங்களும், அமைப்புகளும் அவற்றின் தீர்மானங்கள், செயற்பாடுகள் குறித்து பொறுப்புக் கூறுவதற்கு வகை செய்யும் சட்டங்கள் அவசியமாகின்றன. தேசிய சுயவிருப்பற்ற மீள் குடியமர்வுக் கொள்கை போன்றவற்றைக் கடுமையாக அமுல் செய்வது, திட்ட நடைமுறைகள் சரியான முறையில் பின்பற்றப்படுவதை கண்காணிப்புக் கட்டமைப்புகள் உறுதிப்படுத்துவதற்கு வகை செய்யும்.

விஸ்தரிப்புக் கொள்கைகளும் கட்டமைப்புகளும் மீளாய்வு செய்யப்படுவது அவசியமானதாகும். இந்தத் திட்டங்களில் இருந்து பாடங்கள் கற்றதை அடுத்து இந்தக் கட்டமைப்புகள் கட்டுப்படுத்தும் அமைப்புகளாக செயற்படுவது அவசியமாகின்றது. உதாரணமாக, 2001 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தேசிய சுயவிருப்பற்ற மீள் குடியமர்வுக் கொள்கை 2001 ஆம் ஆண்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஏற்புடையதாக விளங்குகின்றது. இரண்டு கடுகதி நெடுஞ்சாலைகளும் தொழில்நுட்ப ரீதியில் 2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடங்கியவை என்பதால், அவை இதில் உள்ளடக்கப்படவில்லை. NIRP எனப்படும் தேசிய சுயவிருப்பற்ற மீள் குடியமர்வுக் கொள்கை வகுக்கப்பட்டது பாராட்டுக்குரிய விடயமாக உள்ள போதிலும், இது பூர்வாங்க வழிகாட்டல்களாக மாத்திரமே இன்னமும் விளங்குகின்றன. இதற்கு கட்டுப்படுத்தும் பலத்தை அளிக்கும் வகையில், அது மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும். அத்துடன் அதற்கு மேலும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். விதிகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தும் முகமாக மேலும் கடுமையான கண்காணிப்பு அம்சங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

பல்வேறு ஆவணங்களில் கண்காணிப்பதற்கும், மதிப்பிடுவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ள போதிலும், குறிப்பிட்ட வழிகாட்டலான RIP மற்றும் பொது வழிகாட்டலான NIRP ஆகியன பெரும்பாலும் பின்பற்றப்படாத நிலையே காணப்படுகின்றது. இடம்பெயர்வு மற்றும் மீள் குடியமர்வுத் திட்டங்களை விசேடமாக விளக்கிக் கூறக்கூடிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடைமுறை மிகவும் முக்கியமானதொன்றாகும். இது, இத்திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கான தீவிரமான ஒரு கற்கும் தளமாக விளங்கும்.

இந்தத் திட்டங்களினால் ஏற்படும் நீண்டகால தாக்கங்களான வர்த்தக மயப்படுத்தல், சிறு பொருளாதார முறை விஸ்தரிப்பு ஆகிய பற்றி ஆராயப்பட்டு, திட்டமிடப்பட வேண்டும். பாதகமான தாக்கங்கள் குறைந்த அளவில் இருப்பதை உறுதிப்படுத்தும் முகமாக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வருமான வாய்ப்பை மீண்டும் ஏற்படுத்தும் திட்டம், தொழிற்பயிற்சி அளிக்கும் வேலைத்திட்டம் ஆகியன STDP தற்பொழுது அமுல் செய்யப்படும் இரு முயற்சிகளாகும். அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு மற்றும் மீள் குடியமர்வு தொடர்பான தேசியமட்டக் கொள்கை அமைப்பில் திட்டமிடல், அமுலாக்கல் ஆகியன குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். கணிசமான அடிமட்ட ஆராய்ச்சி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருப்பதாக உணரப்படுகின்றது. மேலும், பெறுமதியான தகவல்கள் சகல மட்டங்களிலும் தெளிவான முறையில் வழங்கப்பட வேண்டும். தனித்துவமான செயற்பாட்டு விதிகளும் அவசியமாகின்றன. இவை, பங்குதாரர் அமைப்புகளால் புரிந்து கொள்ளப்படுவதுடன் பின்பற்றப்பட வேண்டும். அமுலாக்கத்தை கட்டாயப்படுத்தும் பிரமாணங்கள் திட்ட அமுலாக்கல் துறையினருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒத்துழைப்பு ஆகியவற்றை அதிகரிப்பதற்கு வகை செய்யும்.

### சுருக்கமும் முடிவும்

இலங்கையில் தற்பொழுது அமுல் செய்யப்படும் இரு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இந்த ஆய்வு அறிக்கை கவனம் செலுத்தியுள்ளது. இடம்பெற்றுள்ள மாற்றங்கள், தாக்கங்கள் ஆகியன பற்றியும் இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகள் என இவை வரையறுக்கப்படுவதற்கு முன்னர் சுதந்திரத்திற்கு முன்னரான வரலாற்றில் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 1930 ஆம் தசாப்தத்தில் இவை ஆரம்பமாகின. கிராமப்புற விவசாயிகள் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தனர். தற்போது ஏற்பட்டுள்ளதைப் போன்று இடம்பெயர்வு அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு விளைவாக அப்போது அமைந்திருக்கவில்லை. அது முற்றிலும்

மாறுபட்ட நோக்கத்தைக் கொண்டிருந்தது. அது இடம்பெயர்வை உரிமை மாற்றம் செய்யும் வகையில் அமைந்திருந்தது. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் பெரிய அளவிலான நீர் மின் உற்பத்தித் திட்டமாகும். நீர் மின் உற்பத்தி, விவசாயம் ஆகிய இரு நோக்கங்கள் குறித்து இந்தத் திட்டம் கவனம் செலுத்தியது. நீர்த் தேக்கங்களுக்காக காணிகளை இழந்தவர்கள் இடம்பெயர்ந்து மீள் குடியமர்வுத் திட்டங்களுக்கு அமைய மீளக் குடியமர்த்தப்பட்டனர். இத்திட்டங்கள் விவசாய குடியேற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டன.

அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக, இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான கட்டமைப்புகள் (பௌதீக) ஆரம்பக் கட்டத்திலேயே செயல்படுகின்றன. கொழும்பு - கண்டி கடுகதி நெடுஞ்சாலை, மேல் கொத்மலை நீர் மின் உற்பத்தித் திட்டம், மாணிக்க கங்கை திசைதிருப்புத் திட்டம், ஆகியன திட்டமிடப்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையில் அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு புனர்வாழ்வு திட்டம் மிகவும் பொருத்தமுடையதாக விளங்குகிறது. பின்னோக்கிப் பார்க்குமிடத்து, துரித மகாவலித் திட்டம் காரணமாக சுமார் 12,000 பேர் இடம்பெயர்ந்தார்கள் என்பதை அறிய முடிகின்றது. புதிய ஜீவனோபாய முறைகளுக்கும் சுற்றாடலுக்கும் தம்மைப் பழக்கிக் கொள்வதில் மீளக் குடியமர்த்தப்பட்ட சமூகங்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்க நேரிட்டது. சிலர் அவசியமான அடிப்படை கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னரே இந்தத் திட்டப் பிரதேசங்களில் குடியேறினார்கள். இந்த வேலைத்திட்டத்தின் தீர்மானம் எடுக்கும் நடைமுறைகளில் பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்பு பெரும்பாலும் இல்லாத நிலையே காணப்பட்டது. அரசாங்க நடைமுறைகள் பின்பற்றப்படுவதே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அபிவிருத்தித் திட்டங்களின் தாக்கம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வு அதிகரித்து இருப்பதன் காரணமாக, இந்த நிலை இன்று மாற்றமடைந்துள்ளது.

CKE, STDP ஆகியன சம்பந்தப்பட்ட இடம்பெயர்வு மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து இந்த ஆய்வின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மக்கள் இடம்பெயர்வு குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், காணிச் சுவீகரிப்பு, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு, அவர்களின் பிரதிபலிப்பு, தீர்மானம் எடுப்பதில் மக்கள் பங்குகொள்ளல், தாக்கங்கள் (பல்வேறு மட்டங்களில்) ஆகியன குறித்தும் இந்த ஆய்வு கவனம் செலுத்தியுள்ளது. CKE திட்டம் பற்றி 1980 ஆம் தசாப்தத்தின் உட்பகுதியில் சிந்திக்கப்பட்டது. நாட்டின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையத்திற்கும் கொழும்பு நகருக்கும் இடையில் துரித போக்குவரத்து தொடர்பு வசதியை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இந்தத் திட்ட வரைவு 75 சதவீதம் சதுப்பு நிலத்தையும், வாவியையும் உள்ளடக்குகின்றது. கடுகதி நெடுஞ்சாலை களனி, வத்தளை. மஹர, கட்டான, ஜா-எல ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளை ஊடறுத்துச் செல்கின்றது. இவை யாவும், நகர் பிரதேசங்களில் அமைந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களில் கணிசமானோர் மீன்பிடித் தொழில் (கடல், வாவி) மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த நெடுஞ்சாலை நிர்மாண வேலை 2000 ஆம் ஆண்டு ஆரம்பமானது. நிதி நெருக்கடி காரணமாக இது 2003 ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்டது.

கொழும்பு - மாத்தறை கடுகதி நெடுஞ்சாலைத் திட்டம் என அழைக்கப்படும் STDP 1980 ஆம் தசாப்தத்தின் முற்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உருவாக்கப்பட்டது. அரசாங்கம் 1999 ஆம் ஆண்டு நிதி வழங்குநர்களை அணுகி ADB, JBIC ஆகியவற்றிடம் இருந்து கடன்களைப் பெற்றுக்கொண்டது. இவை இரண்டுமே பிரதான நிதி வழங்கும் நிறுவனங்களாகும். நஷ்டஈடு, மீள் குடியமர்வு ஆகியன முற்றிலும் அரசாங்க நிதி மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்கான கால வரையறை 2000 - 2008/09 ஆகும். பல்வேறு காரணங்களுக்காக பல பிரிவினர் STDP திட்டத்திற்கு கண்டனமும் ஆதரவும் தெரிவித்துள்ளனர்.

இரு திட்டங்களுக்கமான அரச நிறுவனங்களில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு, RDA, காணி அமைச்சு, நில அளவை மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம் ஆகியன அடங்கியுள்ளன. இந்த இரு திட்டங்களுக்குமான அமுலாக்க நிறுவனங்களாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு, RDA ஆகியன விளங்குகின்றன. அரசியல் செல்வாக்கு காரணமாக, இரு திட்டங்களிலும் தொடர்ந்தும் பாதகமான விளைவுகள் எற்படுகின்றன.

காணி சுவீகரிப்பு (வீடு - பயிர்ச்செய்கை) வறுமை நிலைக்கு ஆளாகும் ஆபத்து, ஜீவனோபாய இழப்பு மற்றும் சீர்குலைவு, உணவு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல், சமூக ரீதியான பிரிவு, ஆகியன இடம்பெயர்வினால் ஏற்படும் தாக்கங்களுள் அடங்கியுள்ளன. சுற்றாடல் தாக்கம், வறுமை நிலை

அதிகரிப்பு, வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பம் குறைதல், (குறைபாடுகளைத் தெரிவித்து பரிகாரம் காண்பதற்கு) ஆகியனவும் இந்தத் தாக்கங்களில் அடங்குகின்றன. போதியளவு விரிவான அடிமட்ட ஆராய்ச்சி இன்மை, சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் உயர்மட்டத்தில் காணப்படும் ஊழல், சேவையாளர் பற்றாக்குறை, திட்டங்களின் காலக்கெடு நீடித்தல் ஆகியனவும் இந்த வேலைத்திட்டங்களை பாதிக்கும் அம்சங்களாகும். NIRP, RIP மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் வழிகாட்டல்கள் போதியளவு பின்பற்றப்படுவதில்லை. ஜீவனோபாயத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு வழங்கப்படும் நஷ்டஈடு போதுமானதாக இல்லை என்றும் இந்த ஆய்வு கூறுகின்றது. சிலருக்கு மாத்திரமே சரியான முறையில் நஷ்டஈடு வழங்கப்படுகின்றது என்பதும், பெரும்பாலானோர் ஒழுங்கற்ற தன்னிச்சையான நஷ்டஈடு வழங்கல், கொள்கைகள் காரணமாக பாதிக்கப்படுகின்றனர் என்பதும் இந்த ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இந்தக் கொள்கை காரணமாக, அறிவுறுத்தல் தொடர்பாக இடைவெளி காணப்படுவதாகவும், போதியளவு பகிரங்க, பொதுக் கருத்துப் பரிமாறல்கள் இடம்பெறவில்லை என்றும் தனிப்பட்ட ரீதியில் அநீதிகள் பெருமளவில் இழைக்கப்படுகின்றன என்றும் தெரிய வருகின்றது.

CKE, STDP ஆகிய இன்னமும் அமுல் செய்யப்படும் நிலையில் உள்ளன. ஆனால், அனேகமான சமூகங்கள் ஏற்கனவே இடைநிலைக்காலம், அமைப்பு மாற்றம் ஆகியன தொடர்பான அனுபவங்களைப் பெற்றுள்ளன. அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகளைப் பாதுகாப்பதற்கான அரசதிட்டம் ஒன்று இதுவரை இல்லாததன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் உடனடி ஏற்பாடுகளிலும் நிறுவனங்கள் மற்றும் குழுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பிலுமேயே தமது உரிமைகளுக்காகவும், தேவைகளுக்காகவும் தங்கியுள்ளனர். அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்ந்தவர்களின் உரிமைகள் தொடர்பாக சர்வதேச சட்ட ஆணையோ பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புத் திட்டங்களுக்குப் பொறுப்பாக எந்தவொரு நிறுவனமோ இல்லாததன் காரணமாக, பாதிக்கப்பட்ட மக்கள் நிர்க்கதி நிலையை எதிர்கொள்கின்றனர். இழப்பையும், வாழ்க்கையில் விருப்பமற்ற மாற்றங்களையும் எதிர்கொள்ளும் மக்களுக்கு மனோதத்துவ ரீதியில் எந்தவித ஆதரவும் இல்லாததால் நிலைமை மேலும் மோசமடைகின்றது.

அபிவிருத்தியினால் தூண்டப்பட்ட இடம்பெயர்வு ஒரு சிக்கலான பிரச்சினையாகும். அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்வது அவசியமானதாகும். ஆனால், இந்த அறிக்கையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று அபிவிருத்தியின் நன்மைகளும், தீமைகளும் சமமற்ற முறையில் பகிர்ந்தளிக்கப்படுவது தவிர்க்க முடியாததா அல்லது ஒழுங்கு முறைப்படி நியாயமானதா என்ற கேள்வி எழுகின்றது. இந்த சமூக அநீதி அபிவிருத்தியின் குறிக்கோள்களுக்கு முற்றிலும் முரணானதாக உள்ளது. சிறந்த நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் மூலம் தடுக்கக் கூடிய பாதிப்புகளை நீக்குவதே ஒரு சவாலாகுமென வலியுறுத்தப்படுகின்றது.

## உசாத்துணைகள்


ADB Accountability Mechanism, Compliance Review Panel, Final Report to the Board of Directors on CRP Request No. 2004/1 on the Southern Transport Development Project in Sri Lanka, June 2005

CERNEA. M. "Risks, safeguards, and reconstruction: A model for population displacement and resettlement" in M.CERNEA and C. MCDOWELL (eds.), *Risks and Reconstruction: Experiences of Resettlers and Refugees* (11.55). Washington: World Bank. (2000).

Colombo Katunayake Expressway forges ahead, media release, December 2003.

Invest in Our Infrastructure, Highway Development Plan : Projects in the pipeline, Road Development Authority, Ministry of Highways, November 2003

Involuntary Resettlement Policy, Asian Development Bank : www.adb.org/Resettlement

Land Acquistition Act, GoSL, 1950.

National Human Development Report, UNDP, 1998

Newspaper articles including *The Island, Daily News, Sunday Times, Sunday Leader, Lankadeepa, Diwaina* of various years.

‘Obtaining compensation and other reparation for the proposed Expressways' (document in Sinhala), http://www.rda.lk

PERERA, G.H. "Agrarian transformations under colonial rule" in *Development and Change in Sri Lanka.* Kandy : ICES. (1992).

Report of the conflict management consultant, Southern Transport Development Project, Asian Development Bank, February 2005

Resettlement Implementation Plan, Sourthern Transport Development Project in Sri Lanka, Road Development Authority, October 2002.

SORENSON, B. R. "The experience of displacement : Reconstructing places and identities in Sri Lanka" in K. OLWIG and K. HASTRUP (eds.), *Sitting culture: The shifting anthropological object* (142 - 166). London: Routledge. (1997).

Summary Environmental Impact Assessment, Southern Transport Development Project in the Democratic Socialistic Republic of Sri Lanka, Asian Development Bank, July 1999.

Technical Assistance to the Democratic Socialist Republic of Sri Lanka for preparing a public private partnership expressway project, Asian Development Bank, September 2002.

"The Southern Highway is a reality", Ministry of Highways, Media Release 2003.

The Southern Transport Development Project in Sri Lanka, Hemantha Withanage, Sri Lanka Working Grooup on Trade and IFls, (year not known).

WERELLAGAMA, D.R.I.B. JEYAVIJITHAN., V. MANATUNGA, J. and M. NAKAYAMA. "Lessons learned from communities displaced by the Mahaweli multi-purpose development project in Sri Lanka". Department of Civil Engineering, University of Peradeniya, Kandy, Sri Lanka (2004).